www.padippakam.com

# மார்க்சிஸ்ட்

மாத இதழ்

ஜூன் - 2000



விலை ரூ. 5.00

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# மார்க்சிஸ்ட்

தத்துவ மாத இதழ்

தொகுப்பு: 11 இதழ்: 12 ஜூன் 2000

## ஆசிரியர் குழு

பி.ஆர்.பரமேஸ்வரன் (ஆசிரியர்)
டி.லட்சுமணன் (பொறுப்பாசிரியர்)
ஜி.ராமகிருஷ்ணன்
மைதிலி சிவராமன்
அருணன், பாலு

விமர்சனங்கள், கருத்துக்கள், கடிதங்கள்
எழுதவேண்டிய முகவரி:

ஆசிரியர், மார்க்சிஸ்ட் மாத இதழ்,
11, வைத்தியராம் தெரு, தி.நகர்,
சென்னை - 600 017

வெளியிடுபவர்: இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)
தமிழ்நாடு மாநிலக்குழு சார்பில் என்.வரதராஜன்,
அச்சிடுபவர் : என்.ராஜாத்தி, நீட் பிரிண்டர்ஸ், சென்னை - 600 002
Registered with the Registrar of Newspaper for India under Registration No: 1513/89

படிப்பகம்

www.padippakam.com

1. தற்காலத்துக்கு பொருந்துபவராக விளங்கிடும் விவேகானந்தர்
-டாக்டர் என்.வி.பி.உனித்ரி 3

2. சீனாவில் சோசலிச பாதை
- சீத்தாராம் யெச்சூரி 15

3. சமணம்
- எம்.கே.கங்கோபாத்யாயா 31

4. உலகமாயமாக்கலும் கலாச்சாரமும்
- ஹேமா. S 41

5. பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சி (45வது தேசிய மாநாட்டுக் காங்கிரஸ்) மாநாட்டு அறிக்கை
- ராமச்சந்திர வைத்தியநாத் 52

## சந்தா விபரம்:

| | | |
|---|---|---|
| தனிப் பிரதி | ரூ. | 5.00 |
| 6 மாத சந்தா | ரூ. | 30.00 |
| ஆண்டு சந்தா | ரூ. | 55.00 |

5 பிரதிகளுக்குமேல் ஏஜென்சி வழங்கப்படும்
25 சத கமிசன் உண்டு

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

மார்க்சிஸ்ட் மாத இதழ்
6/16, புறவழிச்சாலை, மதுரை — 625 018
Ph: 661769 Fax: 0452 - 660070
E-Mail : theekati@md3.vsnl.net.in

படிப்பகம்

www.padippakam.com

# தற்காலத்துக்கும் பொருந்துபவராக விளங்கிடும் விவேகானந்தர்

டாக்டர் என்.வி.பி.உண்ணித்ரி

தமிழாக்கம் : கே.அறம்

இந்து மதத்தையும், ஏனைய மதங்களையும் பரந்ததோர் கண்ணோட்டத்துடன் அணுகி வந்துள்ள விவேகானந்தரின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்திடும் வகையில் இந்து மதத் தீவிரவாதிகள் அவரது பெயரைத் தவறாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

சுவாமி விவேகானந்தர் ஒரு இந்து மதத் தலைவராவார். அவர் ஒரு வேதாந்தி, ஆன்மீகவாதி, சந்நியாசி, இன்றைய நவீனத் தொழில்நுட்ப சகாப்தத்தில், மதச்சார்பின்மையும், லோகாயதவாதமும் வளர்ந்து வருகின்றதோர் காலகட்டத்தில் அவரைப் போன்றதோர் ஆன்மீகவாதியைப் பற்றிப் பேசுவது பொருத்தமாக இருக்குமா? நிச்சயமாகப் பொருத்தமாக இருக்கும். ஏனென்றால் சுவாமி விவேகானந்தர் முற்போக்கானதோர் கண்ணோட்டமுடையவராகவே தன் வாழ்நாளெல்லாம் செயல்பட்டு வந்தார். இந்துமதத் தலைவர்களிடையே அவர் தனித்தன்மை மிக்கதோர் தலைவராக மின்னி மிளிர்ந்தார். 1863ம் வருடம் கல்கத்தா நகரில் அவர் பிறந்தார். அவரது இயற்பெயர் நரேந்திரநாத் ஆகும். மத்தியதரக் குடும்பத்தில் அவர் பிறந்தார்.அவர் நவீன மேல்நாட்டுக் கல்வியைப் பயின்றார். அவருடைய தகப்பனார் விஸ்வநாத தத் ஒரு வழக்கறிஞராவார். அவர் மேல்நாட்டு நாகரீகத்தில் ஈடுபாடுள்ளவராக விளங்கினார். அதே சமயத்தில் இந்திய நாட்டின் பழம் பெருமை மிக்க பாரம்பரியத்திலும் பிடிப்புள்ளவராக விளங்கினார். எனவே நரேந்திரநாத்தும் தன்னுடைய தகப்பனாரின் குணநலன்களைத் தன்னகத்தே சுவீகரித்துக் கொள்ள நேர்ந்தது. கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த சமயத்தில் பதினெட்டு வயது நிரம்பிய நரேந்திரர் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சருடன் தொடர்பு கொள்ள நேரிட்டது. ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் அன்றைய காலகட்டத்தில் மிகச்சிறந்த ஆன்மீகத் தலைவராக விளங்கியவர் ஆவார். படிப்படியாக நரேந்திரர் பரமஹம்சரின் சீடராக உருவாகத் தொடங்கினார்.



படிப்பகம்

www.padippakam.com

1886ம் வருடத்தில் ஸ்ரீராமகிருஷ்ணர் மகாசமாதியடைந்த பின்னர் விவேகானந்தர் இந்திய நாடெங்கிலும் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அதன் மூலம் இந்திய மக்களுடன் நெருங்கிப் பழகினார். அவ்வாறு பலதரப்பட்ட இந்திய மக்களுடன் பழகுவதன் மூலமாக இந்திய மக்களின் உள்ளக்கிடக்கைகளைப் புரிந்து கொள்வதற்கு அவர் முயன்றார்.

பின்னர் அவர் அமெரிக்காவிலுள்ள சிகாகோ நகரில் நடைபெற்ற உலக மதங்களின் மாநாட்டில் பங்கேற்றார். அது சமயம் அவர் உலகிலுள்ள பல்வேறு நாடுகளுக்கும் சென்று வந்தார்.

அத்தகைய சுற்றுப் பயணங்கள் மூலமாக விவேகானந்தர் பழங்காலத்திய மற்றும் நவீன மேற்கத்திய, கிழக்கத்திய நாகரீகங்கள், வாழ்க்கை நெறிகள் பற்றியெல்லாம் கற்றுத் தேர்ந்தார். தனது ஆரம்ப நாட்களில் ராமகிருஷ்ணரின் ஆன்மீகச் சீடராக வாழ்க்கையைத் தொடங்கிய விவேகானந்தர் மிகக் குறுகிய காலத்திலேயே தனது சமகாலத்திய சந்நியாசிகளிலிருந்து முற்றிலும் வேறுபட்ட ஆன்மீகத் தலைவராக பரிணமித்தார். அதன் மூலமாக விவேகானந்தர் 19ம் நூற்றாண்டில் நிகழ்ந்த இந்திய மறுமலர்ச்சியின் தலைசிறந்த ஆன்மீகத் தலைவர்களில் ஒருவராக நெடிதுயர்ந்து நின்றார்.

1902ம் வருடம் ஜூலை 4ம் நாளன்று பேலூர் மடத்தில் சுவாமி விவேகானந்தரின் உயிர் பிரிந்தது. அவர் தன்னுடைய குருநாதரின் நினைவாக ஸ்ரீராமகிருஷ்ணா மிஷன் என்றதோர் தொண்டு நிறுவனத்தை உருவாக்கினார்.

மறுமலர்ச்சி சகாப்தத்தின் சிறப்பு அம்சங்களான பகுத்தறிவு வாதம், மனித நேயம், சமத்துவம், முன்னேற்றம் ஆகிய லட்சியங்கள் 19ம் நூற்றாண்டில் வாழ்ந்த சகல தலைசிறந்த ஆண்களையும், பெண்களையும் வழிநடத்திச் சென்றன. மேற்கூறப்பட்ட லட்சியங்களெல்லாம் விவேகானந்தரிடமும் குடிகொண்டிருந்தன. அவர் இந்திய நாட்டில் தாழ்த்தப்பட்டுக் கிடக்கும் மக்களின்பால் அனுதாபங்கொண்டவராகவும் அன்றைய காலகட்டத்தில் உலகின் நவீனமானதோர் சமூக அமைப்பாக விளங்கிய சோஷலிஸக் கோட்பாட்டில் ஈடுபாடுள்ளவராகவும் விளங்கினார்.

இன்றைக்கு இந்து மறுமலர்ச்சியானது அதனுடைய உச்சக்கட்டத்தில் வகுப்புவாதமாக உருவெடுத்து நம்முடைய தாய்நாட்டின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டுக்கும், மிகப்பெரியதோர் சவாலாக உள்ளது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் விவேகானந்தரின் சிந்தனைகளும், வழிகாட்டுதல்களும்



படிப்பகம்

www.padippakam.com

நமக்கு மிக மிகத் தேவைப்படும் நெறிமுறைகளாக விளங்கிடுகின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் ஒரு விஷயத்தைப் புரிந்து கொண்டாக வேண்டும். விவேகானந்தரைப் பற்றி நிலவி வருகின்ற சில பொதுவான கருத்தோட்டங் களுக்கும் அவரது உண்மையான லட்சியங்களுக்கும் எந்த ஒரு உடன்பாடும் கிடையாது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ராஷ்ட்ரீய ஸ்வயம் சேவக் சங்கத்தின் தலைமையின் கீழ் செயல்பட்டு வரும் இந்துமத மறுமலர்ச்சி வாதிகள் விவேகானந்தரின் மீது ஏகபோக உரிமை கொண்டாடி வருகிறார்கள். அவருடைய ஆன்மீகக் கண்ணோட்டங்கள் பெருமளவுக்கு அவர்களுடைய வாதங்களுக்கு ஏற்புடையவையேயாகும். ஆனால் விவேகானந்தரைப் பற்றிய அவர்களது சித்திரமானது மிகவும் பழமை வாய்ந்த, பிற்போக்குத் தனமானதோர் சித்திரமாகவே விளங்குகிறது.

பெரும்பாலான இந்தியர்கள், முற்போக்கான சிந்தனை படைத்தவர்கள் உட்பட அத்தகைய ஒரு அடிப்படையில்தான் விவேகானந்தரைக் கருதி வரு கின்றனர்.

ஆனால் நிலைமைகள் படிப்படியாக மாற்றமடைந்தன. விவேகானந் தருடைய புத்துயிர் பெற்ற உண்மையான உள்ளடக்கத்தை பாமர மக்கள் மேலும் மேலும் தெளிவாகப் புரிந்து கொள்ளத் தொடங்கினர். இத்தகைய வளர்ச்சிப் போக்கானது சுவாமிஜியைத் தங்களுடைய ஏகபோகச் சொத்தாகக் கருதிக்கொண்டு செயல்பட்டு வந்த இந்து மதத் தீவிரவாதிகளுக்கு அறவே பிடிக்கவில்லை. "முற்போக்காளர்கள் விவேகானந்தரின் பொன் மொழிகளை இங்கொன்றும் அங்கொன்றுமாக எடுத்து வைத்துக்கொண்டு ஏதேதோ பிதற்றிக்கொண்டு வருகின்றனர்" என்று இந்து மதத்தீவிரவாதிகள் குற்றஞ் சாட்டத் தொடங்கினர். நான் அத்தகைய குற்றச்சாட்டுகளுக்கெல்லாம் இட மளிக்காத வகையில் விவேகானந்தரின் பொன் மொழிகளிலிருந்து ஏராள மான மேற்கோள்களை இக்கட்டுரையில் எடுத்துக் கூறியுள்ளேன். தேவைப் படும்போது விவேகானந்தரின் தொகுப்பு நூல்களிலிருந்தும் ஆதாரங்களைத் திரட்டித் தந்துள்ளேன்.

இந்தியப் பாரம்பரியத்தைப் பற்றிய விவேகானந்தரின் கண்ணோட்டத்தை நாம் ஆராய்வோம். இந்து கலாச்சாரத்தில் சொல்லப்பட்டுள்ள சகலவற்றையும் குருட்டுத்தனமான வகையில் அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், அவற்றில் எதையும் மறுப்பதற்கில்லை என்றும் இந்து மதத் தீவிரவாதிகள் தொடர்ந்து சொல்லி வருகின்றனர். ஆனால் இந்தியாவின் புகழ்மிக்க பாரம்



படிப்பகம்

www.padippakam.com

பரியங்களைப் பற்றியெல்லாம் பெருமை பொங்கிடும் வகையில் எடுத்துரைக்கின்ற விவேகானந்தர் கூட அந்தப் பாரம்பரியத்தில் காணப்படுகின்ற ஒரு சில கரும்புள்ளிகளைச் சுட்டிக்காட்டி அவற்றை நாம் நீக்கியாக வேண்டும் என்று எடுத்துக் கூறிடத் தயங்கவேயில்லை. மேலும் விவேகானந்தர் வியாசர், சங்கரர் போன்ற மாமேதைகளைக் கூட விமர்சித்திடும் அளவுக்குத் துணிவுடன் செயல்பட்டுள்ளார்.

மேலும் புத்தரைப் பற்றிப் புகழ்ந்து பேசிடவும் அவர் தயங்கினாரில்லை. விவேகானந்தர் புத்தரைத் தன்னுடைய பிரியமிக்கதோர் கடவுளாகப் புகழ்ந்து கூறியுள்ளார். சனாதன இந்து மதமும், வேதகால மதமும் புத்தரைத் தங்களுடைய எதிரியாகக் கருதிவந்தன என்பதை நாம் இங்கே சுட்டிக்காட்டிட விரும்புகிறோம்.

மேலும் விவேகானந்தர் நாத்திகராக விளங்கிய கபிலரையும் போற்றிடத் தயங்கினாரில்லை. கபிலர் இந்திய நாட்டுக்கு மட்டுமின்றி உலகத்துக்கே ஒரு தத்துவ மேதையாக விளங்கினார் என்று விவேகானந்தர் குறிப்பிடுகிறார்.

இந்தியாவில் இரண்டு மிகப்பெரிய தீமைகள் நிலவுவதாக விவேகானந்தர் ஒரு சமயம் குறிப்பிட்டுக் கூறியுள்ளார். அதில் ஒன்று பெண்கள் நசுக்கப்படுதல். மற்றொன்று ஜாதியக் கட்டுப்பாடுகளின் மூலமாகத் தாழ்த்தப்பட்ட மக்கள் சித்ரவதை செய்யப்படுதல்.

மேற்கூறப்பட்ட இரண்டு தீமைகளுமே வேதாந்தக் கோட்பாடுகளுக்கெதிரானவை என்பது விவேகானந்தருடைய திட்டவட்டமான கருத்தாகும். பெண்களுக்குச் சுதந்திரம் அளிக்கப்படாதிருத்தல், இந்து மதப் பாரம்பரியத்தில் காணப்படுகின்ற ஜாதியின் பெயரிலான ஏற்றத்தாழ்வுகள் ஆகியவற்றை அவர் கடுமையாகக் கண்டனம் செய்தார். நமது பழமை வாய்ந்த இந்தியப் பாரம்பரியங்கள் பற்றி நமது கண்ணோட்டம் எவ்வாறு திகழ வேண்டும் என்ற கேள்விக்கு சுவாமிஜியே பின்வருமாறு விடையளிக்கிறார்.

"நம்முடைய பழமைமிக்க பாரம்பரியங்களில் பற்பல நல்ல அம்சங்களும் உள்ளன. தீய அம்சங்களும் உள்ளன. நல்லவைகளை நாம் தொடர்ந்து பேணி வருவோமாக. ஆனால் எதிர்கால இந்தியா புராதன இந்தியாவை விட சிறப்புமிக்கதாக மிளிர்ந்திட வேண்டும்".

முற்போக்குச் சிந்தனையாளர்கள் இந்தியப் பாரம்பரியத்தில் நிலவிடும் நல்ல அம்சங்களை ஏற்றுக்கொண்டு காலத்துக்கொவ்வாத தீய அம்சங்களை



படிப்பகம்

www.padippakam.com
ஒதுக்கித் தள்ளிட வேண்டும் என்ற விவேகானந்தரின் கண்ணோட்டத்திலிருந்து நாம் உத்வேகமும், உற்சாகமும் பெற்றிட இயலும்.

விவேகானந்தர் மதம், கடவுள் ஆகியவற்றைப் பற்றிக் குறிப்பிடும்போது வேதாந்தமே தன்னுடைய மதமாகும் என்று தெளிவாகக் கூறுகின்றார். அவர் இந்து மதத்தையும், வேதாந்தத்தையும் ஒன்றாகவே கருதுகிறார். ஆனால் மதத்தைப் பொறுத்தவரையில் நம்மில் பலர் கொண்டுள்ள பொதுவான கருத்தோட்டத்தின்படி அவர் குறிப்பிடவில்லை.

வேதாந்தத்தைப் பற்றி விவேகானந்தர் என்ன கூறுகிறார் என்பதைச் சற்று ஆராய்வோம்.

"வேதாந்தம் என்பது ஒரு பெருங்கடலாகும். அதில் போராடுகிற ஒரு மனிதன் கட்டுமரத்துக்கு அருகே பயணித்திட முடியும். ஒரு உண்மையான யோகியானவன் உருவ வழிபாடு செய்பவனாகவோ அல்லது ஒரு நாத்தீகனாகவோ கூட இருக்கலாம். வேதாந்தப் பெருங்கடலில் இந்து, முகம்மதியர், கிறிஸ்தவர், பார்சி ஆகிய அனைவருமே கடவுளின் குழந்தைகளே யாவார்கள்".

தன்னலமின்மைதான் மதத்தின் அடிப்படைச் சாராம்சமாகும் என்று விவேகானந்தர் கருதினார். அவர் கூறுகிறார்:

**"ஒருவர் யூதரா, கிறிஸ்தவரா என்பது பிரச்சனையல்ல. அவர் தன்னலமற்றவராக விளங்கிடுகின்றாரா என்பதுதான் பிரச்சனையாகும். நீ துளியும் சுயநலமற்றவனாக இருக்கிறாயா? அவ்வாறு நீ விளங்கிடுவாயானால் மத நூல்களிலிருந்து ஒரு வரியைக் கூடப் படித்தறியாமலேயே, மாதா கோவிலுக்கோ, ஆலயத்துக்கோ சென்று வழிபடாமலேயே நீ முழுமையானதோர் மனிதனாக ஒளி பெற்றுத் திகழ்ந்திடுவாய்".**

*(தொகுப்பு நூல் ஒன்று பக்கம் 93)*

இந்து மதமானது எவற்றின் எதிரொலியாக நவீன அறிவியல் கண்டுபிடிப்புக்கள் அமைந்துள்ளதாகக் கருதப்படுகின்றதோ அந்த வேதாந்தத் தத்துவத்தின் உயரிய ஆன்மீகச் சிந்தனைகள் முதலாக பாமரத்தனமான உருவ வழிபாட்டு முறைகள் அவை தொடர்பான பல்வேறு புராணக் கதைகள், புத்தமதக் கோட்பாடு, சமணர்களது நாத்தீகவாதம் ஆகிய அனைத்துக் கோட்பாடுகளையுமே தன்னகத்தே உள்ளடக்கியுள்ளது.

*(தொகுப்பு நூல் 1, 6)*



படிப்பகம்

www.padippakam.com

பிறிதொரு சந்தர்ப்பத்தில் அவர் குறிப்பிடுகிறார்:

"(இந்துக்களாகிய) நம்மைப் பொறுத்தவரைக்கும் ஒவ்வொருவரும் தாம் விரும்புகின்ற கோட்பாட்டைக் கடைப்பிடித்திட உரிமை உண்டு.

*(தொகுப்பு நூல் 6, பக்கம் 98)*

சுருக்கமாகச் சொல்வதென்றால் கடவுள் நம்பிக்கை சம்பந்தமாக இந்து மதத்தில் குறைந்தபட்சம் ஒரு கடவுள் வாதம், பல கடவுள வாதம, நாத்தீக வாதம் ஆகிய மூன்றுவித மார்க்கங்கள் உள்ளன என்று சுவாமி விவேகானந்தர் கருதுகிறார். இந்து மதத்தில் நில்வும் இந்தப் பன்முகத்தன்மையைத் தான் இந்து வகுப்புவெறி பிடித்த பாசிஸ்டுகள் மிகக் கடுமையாக மறுத்து வருகின்றனர்.

## இந்து, முஸ்லிம் ஒற்றுமை

மேற்கண்ட அம்சம் தொடர்பாக அவரின் கருத்துக்களை நாம் ஆராய்வது பொருத்தமானதாகும் என்று கருதுகின்றோம். அவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

"வேதாந்தமோ வேறு எந்த ஒரு இஸமோ அத்வைதம் என்பதுதான் மதத்தின் இறுதியானதோர் கோட்பாடாகும். அந்த ஒரு நிலையிலிருந்து கொண்டுதான் நாம் சகல மதங்களையும் மதப்பிரிவுகளையும் பாச உணர்வுடன் அணுகிட வேண்டும். அத்தகையதோர் கோட்பாடுதான் விழிப்புணர்வு கொண்ட எதிர்கால மக்கள் சமூகத்தினுடைய மதக்கோட்பாடாக விளங்கிடும் என்று நான் நம்புகிறேன். இந்துக்களைப் பொறுத்தவரையில் மற்றவர்களை விட முன்னதாகவே அத்தகையதோர் முடிவுக்கு வந்து விட்டனர். ஏனென்றால் அவர்கள்தான் ஹிப்ருக்கள், அரேபியர்கள் ஆகியோரைவிட மிகவும் பழமைவாய்ந்தவர்களாவார்கள். அத்வைதக் கோட்பாடானது மனித வர்க்கம் முழுவதையுமே தன்னுடைய சொந்த ஆத்மாவாகக் கருதுகிறது. ஆனால் இந்து மதத்தில் அத்தகைய நடைமுறை கடைப்பிடிக்கப் படவில்லை. போதிய அளவுக்கு சமத்துவ உணர்வுடன் செயல்படுகிற மதம் ஒன்று உண்டு என்றால் அது இஸ்லாம்தான் என்று என்னைப் பொறுத்த வரைக்கும் உறுதியாகக் கருதுகிறேன். எனவே வேதாந்தக் கோட்பாடுகள் அவை எவ்வளவு சீலமுள்ளவையாகவும், அதியற்புதமானவையாகவும் விளங்கினாலுங்கூட அவை இஸ்லாமிய நடைமுறைகளின் உதவியில்லாமல் மனித சமுதாயத்துக்குப் பயன்படப் போவதேயில்லை. இந்து மதம், இஸ்லாம்



படிப்பகம்

www.padippakam.com
என்ற இரு பெரும் கோட்பாடுகளின் சந்திப்பு மையமாக நம்முடைய தாய்த் திரு நாடு விளங்குகிறது. வேதாந்தம் என்பது மூளையாகும். இஸ்லாம் உடலாகும். அதுதான் நம்முடைய ஒரே நம்பிக்கையாக விளங்கிட வேண்டும்.

*(தொகுப்பு நூல் 6, பக்கம் 415, 416)*

ஆலய வழிபாடு ஒன்றுதான் இந்து மதக் கலாச்சாரமாகும் என்றும், அது மட்டுமே இந்தியக் கலாச்சாரமுமாகும் என்றும் உடும்புப் பிடியாகச் செயல் பட்டு வருகிற வகுப்புவெறி பிடித்த ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் விவேகானந்தரால் முன்மொழியப்பட்டுள்ள மேற்கூறப்பட்ட விரிந்து பரந்த இந்து கலாச்சாரத்தை அங்கீகரிப்பதே இல்லை. அதுமட்டுமன்றி அந்த வகுப்புவெறியர்கள் மேற் கூறப்பட்ட உயரிய கோட்பாட்டைப் பிரச்சாரம் செய்பவர்கள் மீது பாசிஸ்ட் பாணியில் தாக்குதல்களைத் தொடுக்க முயற்சிக்கின்றனர்.

## ஒடுக்கப்பட்ட மக்களின்பால் அனுதாபம்

மற்றைய மதங்களைச் சேர்ந்தவர்கள், இந்து மதத்தில் பெரும்பான்மை யோராக விளங்கிடும் உழைப்பாளி வர்க்கத்தினர், தாழ்த்தப்பட்ட மக்கள் ஆகியவர்களைப் பொறுத்தவரையில் வகுப்புவாத பாசிஸ்டுகள் கொண்டுள்ள அணுகுமுறைக்கும் மேற்கூறப்பட்ட மக்களின்பால் விவேகானந்தர் கொண் டுள்ள அணுகுமுறைக்கும் மிகத்தீவிரமான மாற்றங்கள் காணப்படுகின்றன.

விவேகானந்தர் கூறுகிறார் :

"செல்வந்தர்களும், அறிஞர்களும் உங்களுக்குச் செவிமடுக்கிறார்களா, உங்களைப் புரிந்து கொள்கிறார்களா, உங்களைக் குற்றஞ்சாட்டுகிறார்களா என்பதைப் பற்றியெல்லாம் நீங்கள் கவலைப்படவே வேண்டாம். அவை யாவும் நம்முடைய நாட்டின் மீது அணியப்பட்டுள்ள வெறும் பகட்டுகளும், ஆபரணங்களும் மட்டுமேயாகும்! ஆனால் இங்கே வாழ்ந்து வருகிற கோடானுகோடி ஏழை, எளிய தாழ்த்தப்பட்ட மக்கள்தான் நம்முடைய நாட்டின் உயிர் நாடிகளாவார்கள்.

*(தொகுப்பு நூல் 7, பக்கம் 372)*

மேல் வகுப்பினரைப் பார்த்து விவேகானந்தர் பின்வருமாறு கூறுகிறார் :

"நீங்கள் யாவரும் வெறும் சூரிய வெளியில் கரைந்து மறைந்து போய் விடுங்கள். உங்களுக்குப் பதிலாக புதியதோர் இந்தியா உருவாகட்டும்! கலப்பைகளைப் பிடித்துக் கொண்டுள்ள ஏழை, எளிய விவசாயிகளின் குச்சுக்



படிப்பகம்

www.padippakam.com

குடிசைகளிலிருந்தும் மீனவர்கள், கொல்லர்கள், துப்புரவுத் தொழிலாளிகள் ஆகியோரது குடிசைகளிலிருந்தும் புதியதோர் இந்தியா உதித்தெழட்டும்! தொழிற்சாலைகள், சந்தைவெளி மைதானங்கள் ஆகியவற்றிலிருந்தெல்லாம் அத்தகையதோர் நவ இந்தியா உருவாகட்டும்! நறுமணம் பரப்பிடும் பூஞ் சோலைகள், வனாந்திரங்கள், குன்றுப் பிரதேசங்கள் மற்றும் மலைமுகடு களிலிருந்தெல்லாம் புதியதோர் இந்தியா முகிழ்த்தெழட்டும்!

*(தொகுப்பு நூல் 7, பக்கம் 327)*

அளவிறந்த உணர்ச்சிப் பெருக்குடன் அவர் மேலும் தொடருகிறார்:

"இந்திய நாட்டில் கவனிப்பாரற்றுக் கிடப்பவர்கள், விவசாயிகள், நெச வாளர்கள் போன்றவர்களெல்லாம் அந்நியர்களால் ஆக்கிரமிக்கப்பட்டனர். மேலும் தங்களது சொந்த மக்களாலேயே கேவலமாக நடத்தப்பட்டனர். கருதப்பட்டனர். அத்தகைய மக்கள் கூட்டந்தான் காலங்காலமாக அமைதி யுடனும், தங்களது உழைப்புக்கேற்ற ஊதியங்கள் கிடைக்கப் பெறாமலும் உழைத்துக் கொண்டுள்ளனர். எவராலும், கவனிக்கப்படாமலும் கடமையில் ஈடுபாட்டுணர்வுடனும், தன்னலங்கருதாமலும் பாடுபட்டு வருகிற அந்த மக்கள்தான் போற்றுதலுக்குரியவர்கள் ஆவார்கள். என்றென்றும் மிதிக்கப் பட்டுக் கிடக்கும் இந்திய உழைப்பாளி வர்க்கத்தினராகிய உங்களுக்குத் தலை தாழ்த்தி நான் என்னுடைய பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்!

*(தொகுப்பு நூல் 7, பக்கம் 358, 359)*

விவேகானந்தரின் குரலானது சிற்சில சந்தர்ப்பங்களில் வர்க்கப் போராட் டத்தை ஆதரித்திடும் அளவுக்கு ஓங்கியொலிக்கிறது. அதற்குச் சான்றாக அவரது பொன் மொழிகளில் இரண்டை இங்கே எடுத்துக் கூறுகிறோம்:

"இந்திய நாட்டில் வாழ்ந்து வருகிற விவசாயி, செருப்புத் தைக்கும் தொழிலாளி, துப்புரவுத் தொழிலாளி போன்ற தாழ்த்தப்பட்ட வர்க்கத்தினரி டையே உங்களை விட மிகப்பெரிய அளவில் உழைப்புத்திறனும், தன்னம் பிக்கையுணர்வும் குவிந்து கிடக்கின்றன. அவர்கள் ஆண்டாண்டு காலமாகப் பொறுமையுடனும், எந்தவித முணுமுணுப்புமில்லாமலும் பாடுபட்டு உழைத்து இந்த நாட்டின் சகல செல்வங்களையும் உற்பத்தி செய்து வருகின்றனர். அம் மக்கள் மிக விரைவிலேயே உங்களுக்கு மேலானதோர் நிலையைப் பெறு வார்கள் என்பது திண்ணம். நீங்கள் அந்தப் பொறுமை மிகு பொது மக்களை யெல்லாம் அடக்கியொடுக்கி வந்துள்ளீர்கள். இப்போது அவர்கள் உங்களைத்



படிப்பகம்

www.padippakam.com

தண்டிக்கும் நாள் நெருங்கி வருகிறது.

*(தொகுப்பு நூல் 7. பக்கம் 148)*

"மேல் வர்க்கங்கள் எவ்வளவுதான் முயன்றாலுங்கூட தாழ்த்தப்பட்ட வர்க்கங்களை இனிமேலும் அடக்கியொடுக்கிடவே முடியாது"

*(தொகுப்பு நூல் 7. பக்கம் 149)*

## நான் ஒரு சோஷலிஸ்ட்

விவேகானந்தர் வறுமையை துடைத்தொழித்திடக் கடிய அம்சங்களாகத் தான் கடவுள், மதம் ஆகியவற்றைக் கருதினார். "உணவுக்கும், உடைக்கும் ஏங்கித் தவிக்கிற நிலைமைகள் உள்ளவரையில் நாடு சீரழிந்துதான் போகும்.

இத்தகைய நிலைமைகளை மாற்றிடுவதற்கு நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? உங்களது வேதப் புத்தகங்களையெல்லாம் கங்கையில் வீசியெறிந்துவிட்டு ஏழை, எளிய மக்கள் உணவையும், உடைகளையும் பெற்றிடுவதற்கான வழிவகைகளை உருவாக்கிட முன்வாருங்கள். அதற்குப்பிறகு நீங்கள் உங்களது வேத நூல்களைப் படிக்கத் தொடங்கலாம்."

*(தொகுப்பு நூல் 7. பக்கம் 183)*

மற்றொரு சந்தர்ப்பத்தில் விவேகானந்தா மிகவும் வெளிப்படையாகவே குறிப்பிடுகிறார்:

"ஆமையை வணங்குங்கள், அதாவது வயிற்றுக் கடவுள்தான் திரு அவதாரமாகும். பசித்த நல்வயிறுகளைத் திருப்திப்படுத்தாத வரைக்கும் உங்களது மதபோதனைகளுக்கு எவருமே செவிசாய்த்திடமாட்டார்கள். முதலில் கஷ்ட ஜீவனம் நடத்தி வருகின்ற ஏழை, எளிய மக்களுடைய பசி, பட்டினி போன்ற வெங்கொடுமைகளுக்கு ஒரு முடிவு கட்டிட முன்வாருங்கள். அவ்வாறு நீங்கள் செய்யாத வரையில் உங்களுடைய மதச்சொற்பொழிவுகளும், அவை தொடர்பான சகலவித நடவடிக்கைகளும் எந்தவொரு நற்பயனையும் ஏற்படுத்தப் போவதில்லை."

*(தொகுப்பு நூல் 5. பக்கம் 379, 380)*

அவரது மற்றொரு பொன்மொழியையும் நாம் இங்கு மேற்கோள் காட்டிட விரும்புகின்றோம்:

"நீங்கள் நாடெங்கும் மாதா கோவில்களைக் கட்டிக்கொண்டேயிருக்கிறீர்கள். ஆனால் கீழைய நாட்டு மக்கள் தங்களுக்கு மதம் வேண்டுமென்று



படிப்பகம்

www.padippakam.com

கேட்கவில்லை. தகித்துக்கொண்டுள்ள இந்திய நாட்டில் வாடிவதங்கிக் கொண்டுள்ள கோடானுகோடி மக்கள் தங்களுக்குச் சோறு வேண்டும் என்று தொண்டை வறளக் கூக்குரலிட்டுக் கொண்டுள்ளனர், சாப்பிட ரொட்டி கேட்கிற அவர்களின் மீது நாம் கல்லெறிகிறோம். பட்டினி கிடக்கும் மக்களிடம் மதப்பிரச்சாரம் செய்வதானது அம்மக்களைக் கேவலப்படுத்துவதாகும். பசியால் வாடும் மனிதனிடம் தத்துவ போதனை செய்வதானது அவனை இழிவுபடுத்துவதாகும்."

*(தொகுப்பு நூல் : பக்கம் 20)*

இத்தகையதோர் பின்னணியில்தான் விவேகானந்தர் தன்னை ஒரு சோஷலிஸ்ட் என்று பிரகடனம் செய்து கொண்டார். அதுபற்றி நாம் வியப்படையத் தேவையில்லை. அவர் சமூக வளர்ச்சியின் வரலாற்றுபூர்வமான பல்வேறு கட்டங்களைப் பற்றியெல்லாம் விவரித்துச் சொல்லியுள்ளார். அவர் 1896ம் வருடம் நவம்பர் மாதம் முதல் நாளன்று திருமதி மேரி ஹேல் என்ற அம்மையாருக்கு எழுதிய ஒரு கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

"மனித சமுதாயமானது மத குருக்கள், க்ஷத்திரியர்கள், வர்த்தகர்கள், உழைப்பாளிகள் ஆகிய நான்கு பிரிவினரால் மாறி மாறி ஆளப்பட்டு வருகிறது. ஒவ்வொரு பிரிவினரின் ஆட்சிக்காலத்திலும் சில சிறப்பம்சங்களும், ஒருசில குறைபாடுகளும் உண்டு."

"மத குருக்களின் ஆட்சியின்போது பரம்பரை வாரிசுரிமையின் பெயரால் மதகுருக்களும், அவர்களது வாரிசுகளும் போற்றிப் புகழப்பட்டனர். சமூகத்தில் அவர்களுக்கு மட்டுமான பற்பல பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன, அவர்களில் கல்வித் தேர்ச்சி பெற்றிராத நபர்களுக்குக் கூடப் பிறருக்கு அறிவைப் போதித்திடும் உரிமை கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் அவர்களுடைய ஆட்சியின்போது அறிவியல் துறையின் வளர்ச்சிக்கான பற்பல அடிப்படைகள் உருவாக்கப்பட்டன. மதகுருக்கள் மனிதர்களின் உள்ளங்களை வளப்படுத்தினர், அதன் மூலமாகத் தொடர்ந்து அவர்களுடைய ஆட்சியானது நடைபெற்றது".

"படை வீரர்களாக விளங்கிய ஷத்திரியர்களுடைய ஆட்சி கொடுங்கோலாட்சியாக விளங்கியது. ஆனால். அவர்களது ஆட்சியின்போது பற்பல கலைகளும், சமூகக் கலாச்சாரங்களும் பெரிதும் வளர்ந்தோங்கின.

"வைசியர்கள் எனப்பட்ட வர்த்தகர்களுடைய ஆட்சியில் ஆட்சியாளர்கள் மக்களின் ரத்தத்தை அட்டை போல் உறிஞ்சினார்கள். ஆனாலும்



படிப்பகம்

www.padippakam.com

அவர்களது காலத்தில் பற்பல புதிய கருத்துக்கள் திரட்டித் தொகுக்கப்பட்டன".

"இறுதியில் ஒருநாள் உழைப்பாளிகளது ஆட்சி ஏற்படும். அங்கே சகலருக்கும் வசதிகளும், வாய்ப்புகளும் அளிக்கப்படும். எல்லோருக்கும் கல்வியறிவு புகட்டப்படும்".

"நாம் மதகுருக்களின் காலத்தில் நிலவிய அறிவுச் செல்வத்தையும், ஷத்திரியர்களது ஆட்சிக் காலத்தில் தழைத்தோங்கிய கலைகளையும் வர்த்தகர்கள் காலத்தில் நிலவிய பரிவர்த்தனைச் சிந்தனைகளையும், இறுதியில் ஏற்பட உள்ள சமத்துவக் கோட்பாடுகளையும் ஒருங்கிணைத்துக் கொண்டு ஒரு அரசாட்சியை உருவாக்கிட முடியுமானால் அத்தகைய ஆட்சியே லட்சியமிக்கதோர் ஆட்சியாகத் திகழ்ந்திடும். ஆனால் அவையெல்லாம் சாத்தியந்தானா?"

முதல் மூன்று அம்சங்களும் நடந்து முடிந்த கதைகளாகிவிட்டன. இனி வர இருப்பது உழைப்பாளர்களுடைய ஆட்சிதான். அத்தகையதோர் ஆட்சி உருவாவதை எவராலுமே தடுத்து நிறுத்திட முடியாது.

"தங்கம், வெள்ளி சம்பந்தப்பட்ட நிலவரங்களைப் பற்றியெல்லாம் எனக்கு எதுவுமே தெரியாது. (வேறு யாருக்குமே அதைப் பற்றி அதிகமாகத் தெரியாது என்பதுதான் உண்மை)".

"ஆனால் இந்தத் தங்க, மார்க்கெட்டுகள் யாவுமே ஏழைகளை மேலும் ஏழைகளாகவும், பணக்காரர்களை மேலும் பணக்காரர்களாகவும் உருமாற்றிக் கொண்டு வருகின்றன. அதுதான் அடிப்படையான விஷயமாகும்."

"நாம் தங்கச் சிலுவையில் அறையப்படுவதற்கு ஒரு போதும் சம்மதிக்க மாட்டோம்" என்று பிரையன் என்ற அறிஞர் மிகச் சரியாகவே கூறியுள்ளார். இந்த சமத்துவமற்றதோர் போட்டியில் வெள்ளி மார்க்கெட்டானது ஏழைகளுக்கு ஓரளவு நன்மைகளை அளித்திட இயலும். நான் ஒரு சோஷலிஸ்ட் என்ற முறையில் அதைச் சரியானதோர் ஏற்பாடாகவே கருதுகின்றேன். ஆனால் கஞ்சியே கிடைக்காமலிருக்கும் ஒருவனுக்கு அரை வயிற்றுக் கஞ்சி யாவது கிடைக்குமானால் அது நல்லதுதானே?

*(தொகுப்பு நூல் 6. பக்கம் 380 – 382)*

சுவாமி விவேகானந்தரின் பெயரைத் தவறாகப் பயன்படுத்தி வருகின்ற இந்து மத அடிப்படைவாதிகள் மேற்கூறப்பட்ட சீர்திருத்தக் கருத்துக்களைப் பற்றியெல்லாம் துளிக்கூட லட்சியம் செய்வதே கிடையாது. அதற்கு மாறாக



படிப்பகம்

www.padippakam.com

மேற்கண்ட அம்சங்களில் அவர்கள் விவேகானந்தருக்கு நேர் எதிரான கண்ணோட்டங்களையே கொண்டுள்ளனர். இந்தியப் பாரம்பரியத்துக்கேற்ற வகையில் விவேகானந்தர் கொண்டுள்ள நிதானமானதோர் கண்ணோட்டத்துக்கு எதிராகவே அவர்கள் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றனர். அவர்கள் இந்திய நாட்டின் பரம்பரைப் பழக்கவழக்கங்கள் யாவுமே நூற்றுக்கு நூறு சரியானவைதான் என்று கூவித் திரிகின்றனர். மேலும் அவர்கள் இந்து மதம் மற்றும் ஏனைய மதங்கள் சம்பந்தமாக விவேகானந்தர் கொண்டுள்ள பரந்ததோர் கண்ணோட்டத்தை ஒப்புக் கொள்ளத் தயாராயில்லை. அவர்கள் இந்திய நாட்டில் வாழ்ந்து வரும் முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் ஆகியோருக்கு எதிராகக் குரோத உணர்வுகளைத் தூண்டிவிட்டுக் கொண்டுள்ளனர். அடுத்து அவர்கள் கீழ்த்தட்டு மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் மீது விவேகானந்தர் இரக்கத்தோடு எடுத்துக் கூறியுள்ள கருத்துக்களையெல்லாம் முற்றிலுமாக எதிர்க்கின்றனர். அவர்கள் மேல்தட்டு மக்களுடன் கூடிக் குலவிக் கொண்டு ஏழை, எளிய மக்களைச் சுரண்டி வருகின்றனர். மேலும் அவர்கள் விவேகானந்தர் தன்னை எந்தக் கோட்பாட்டுடன் ஐக்கியப்படுத்திக் கொண்டாரோ அந்த சோசலிஸக் கோட்பாட்டுக்கெதிராகவே செயல்படுகின்றன.

அதற்கு மாறாக தற்கால இந்தியாவிலுள்ள மதச்சார்பற்ற, முற்போக்கு சக்திகள் அனைத்தும் விவேகானந்தரால் முன்னிலைப்படுத்தப்பட்ட முற்போக்கு லட்சியங்களையெல்லாம் நடைமுறை உண்மைகளாக்கிடுவதற்காகப் போராடிக் கொண்டுள்ளனர். எனவே விவேகானந்தரின் லட்சியங்களானவை இந்திய நாட்டின் மதச்சார்பின்மை மற்றும் ஜனநாயகம் ஆகிய நன்னெறிகளையெல்லாம் பேணிப் பாதுகாத்து அவற்றுக்குப் புத்துயிரளித்திடுவதற்குச் சாலப் பொருத்தமானவையாகவே மிளிர்கின்றன. இதில்தான் விவேகானந்தரின் கருத்தோட்டங்களும் இன்றைக்குங்கூட முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன.

*நன்றி :* **"ஸ்டூடண்ட் ஸ்ட்ரகிள்"**
*"ஜனவரி – பிப்ரவரி 2000"*





படிப்பகம்

www.padippakam.com

# சீனாவில் சோசலிச பாதை

சீத்தாராம் யெச்சூரி

தமிழாக்கம்: எஸ்.ஏ.மாணிக்கம்

*சோவியத் சிதைவிற்குப் பின் பன்னாட்டு மூலதன ஆதிக்கத்தின் நடுவே, உலகின் மிகப்பெரிய நாடான மக்கள் சீனம், சோசலிசத்தை கட்டும் பணியினை தற்சமயம் எவ்வாறு நிறைவேற்றுகிறது; சோசலிசத்தை பாது காக்கும் போராட்டத்தில் சீனா மேற்கொண்டுவரும் சீர்திருத்த நடவடிக்கைகள் வெற்றிபெற வேண்டும் என்று சீனாவின் நண்பர்களும், உலக கம்யூனிஸ்ட் இயக்கங்களும் எதிர்பார்க்கின்ற இத்தருணத்தில், மக்கள் சீனத்தின் ஐம்பதாண்டு விழாவையொட்டி தோழர் சீத்தார்ாம் யெச்சூரி எழுதியுள்ள இந்த கட்டுரை 'மார்க்சிஸ்ட்' வாசகர்களுக்கு மிகவும் பயனுள்ளதாய் இருக்கும்.*

கடந்த இருபதாண்டுகளில் சீனாவில் பொருளாதாரம் அதன் மோசமான விமர்சகர்களால்கூட அங்கீகரிக்கும் அளவிற்கு, மகத்தான சாதனையை 20ம் நூற்றாண்டில் மற்ற நாடுகளோடு ஒப்பிடமுடியாத அளவிற்கு வளர்ச்சி அடைந்துள்ளது. கடந்த இருபதாண்டுகளில் வருடாந்திர சராசரி வளர்ச்சி வீதம் 9.8 சதவீதமாகும். தற்போதைய ஆண்டின் தோராயமான வளர்ச்சி 8 சதவீதமாகும். **சீனாவில் பொருளாதாரம் தொடர்ந்து மேலும் உயரும். சர்வ தேச நிதி நிறுவனத்தின் அனுமானப்படி வரும் 2007ம் ஆண்டில் அமெ ரிக்காவை பின்தள்ளிவிட்டு உலகின் மாபெரும் வளர்ச்சியடைந்த பொருளாதார நாடாகும்.** (உலக வங்கி பார்வை, ஐஎம்எப் 1997)

குறிப்பிடும்படியான இந்த வளர்ச்சி எவ்வாறு சாத்தியமானது? அதுவும் சோவியத் யூனியன் சிதைவடைந்த காலத்தில் எவ்வாறு சாத்தியமானது?



படிப்பகம்

www.padippakam.com

முதலாளித்துவ - ஏகாதிபத்தியத்திற்கு ஆதரவாக எழுதுகோல் பிடிப்பவர்கள் சோசலிசத்திற்கு சவப்பெட்டி அடித்து " முதலாளித்துவமே இறுதியானது" என்று மும்மரமாக வாதம் செய்யும் வேளையில் சோசலிச சீனா தொடர்ந்து பொருளாதார வெற்றிகளைப் பெற்று முத்திரை பதித்து வருகிறது. ஏகாதிபத்திய தத்துவவாதிகள் "தத்துவத்தின் முடிவு" போன்று உட்பட கோட்பாடுகளை மார்க்சியத்திற்கு எதிராக முன்னிறுத்திய வேளையில் சோசலிச சீனா மார்க்சிய - லெனினியத்தை உயர்த்திப் பிடிப்போம் என்று சூளுரைப்பது குறிப்பிடத் தக்கது. இதே வேளையில் வலதுசாரி அறிவுஜீவிகளும், கல்வியாளர்களும் சீனாவின் வெற்றி மார்க்சியம் அல்லது லெனினியத்தின் ஏதாவது ஒன்றின் மூலம் பெற்றதே என்ற உண்மையை சொல்வதற்கு வெறுக்கிறார்கள். இதே சமயம் சில குறிப்பிட்ட இடதுசாரிகள் சீனாவின் இந்த வெற்றிகள் முதலாளித் துவத்தை பிரதிநிதித்துவப்படுத்துமோ; மாவோவின் சீனா உதாசீனமாகி விடுமோ? "முதலாளித்துவ பாதையாளர்கள்" சீனாவை பிடித்து விடுவார் களோ; என்று வருத்தத்துடன் பார்க்கிறார்கள். தற்போதைய சீனாவின் பொருளாதார சீர்திருத்தம் சோசலிச சீனாவின் எதிர்காலத்திற்கு எப்படிப்பட்ட விளைவுகளை ஏற்படுத்தும். இவைகள் குறித்த சில வினாக்களுக்கு நாம் விடைதேட வேண்டும்.

மனிதகுல வளர்ச்சியில் உலக சோசலிசத்தின் வெற்றியானது முதலாளித் துவத்திற்கு பிந்தைய கட்டமாகும் என மார்க்சும் - ஏங்கல்சும் வரையறுத்தனர் என்ற விஷயத்தை துவக்கத்திலேயே கவனப்படுத்துவது அவசியமானதாகும்.

உலகம் முழுவதும் சோசலிசமாகும் காரியமானது வளர்ச்சியடைந்த ஒரு சில முதலாளித்துவ நாடுகளில் முதலாளித்துவத்தை தூக்கியெறியும் நட வடிக்கையிலிருந்து தொடங்கும். முதலாளித்துவத்தின் முதிர்ச்சியான கட்டம் ஏகாதிபத்தியமாகும். அதன் இயற்கையாக உள்ள கூர்மையடையும் முரண் பாடுகளின் தீவிர தன்மையால் உலகத்தை சுற்றி பிணைத்துள்ள அடிமை சங்கிலியின் பலவீனமான கண்ணியினை உடைக்க அனுமதிக்கும். லெனின் தலைமையிலான ரஷ்யாவின் தொழிலாளி வர்க்கம் மார்க்சியத்தின் வழிமுறை யான 'ஸ்தூலமான நிலைமைகளுக்கு ஏற்ப ஸ்தூலமான ஆய்வு' என்பதை பொறுத்து முடியும் என்பதை சாத்தியமானதாக்கியதை சகாப்தத்தை உருவாக்கினார்கள்.

எப்படியாயினும் ருஷ்யாவின் சோசலிச புரட்சியின் வெற்றி (இதைத் தொடர்ந்து இரண்டாம் உலகப்போரில் பாசிசத்தை வீழ்த்தியதும்,



படிப்பகம்

www.padippakam.com

இதையொட்டி மிகப் பின்தங்கிய கிழக்கு ஐரோப்பிய, அரை நிலப்பிரபுத்துவ - அரை முதலாளித்துவ நாடான சீனா, வடகொரியா, வியட்நாம் மற்றும் கியூபா) பின்தங்கிய உற்பத்தியும், பின்தங்கிய பொருளாதாரமும் ஒருபோதும் தானாகவே வளர்ச்சியடைந்த பொருளாதார நிலைக்கோ அல்லது நவீன சோசலிச உற்பச்சி நிலைக்கோ மாறியதில்லை. லெனின் தன்னைப் பொறுத்த வரை இருந்த சிந்தனையின்படி அக்டோபர் புரட்சியின் வெற்றிக்கு வெகு விரைவில் ஜெர்மனியிலும், இதர வளர்ந்த நாடுகளிலும் புரட்சிகள் வெற்றி பெறும். பின்தங்கிய ரஷ்ய தொழிலாளர் வர்க்கம் சோசலிசத்தை கட்டும் பணியில் முன்னேறும் என்று நம்பினார்.

ஐரோப்பாவின் பல்வேறு நாடுகளில் புரட்சி உருவாகாத நிலையில், ரஷ்ய புரட்சியானது நம் நாட்டில் சோசலிசம் (ஒரு நாட்டில் சோசலிசம்) எனும் கொள்கையின் மூலம் பின்தங்கிய உற்பத்தி சக்திகளுடன் மாறுதலை, பிரமிக்கத்தக்க சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இத்தகைய பின் தங்கிய ரஷ்யா தானாகவே ஏகாதிபத்தியத்திற்கு எதிராக பொருளாதார - இராணுவத்தில் முக்கியஸ்தமாகவும், வல்லமையும் பெற முடிந்துள்ளதும், சமூக அமைப்பில் சோசலிசமே உயர்ந்தபட்ச அமைப்பு என்பதையும் நிருபித்துக்காட்டியது. இந்த வல்லமையும், மனிதனால் இதற்கு முன்பு இல்லாத வகையில் உருவாக்கிய இது 70 ஆண்டுகளுக்கு பிறகு சிதைவடைந்தது என்பது மாறுபட்ட விஷயமாகும்.

*(இதற்கான காரணங்களையும், இதை நோக்கி தள்ளிய சூழல்கள் குறித்து சிபிஐ(எம்)ன் 14வது காங்கிரஸ் சில தத்துவார்த்த பிரச்சனைகள் குறித்து தீர்மானத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது)*

நம்முடைய விவாதத்தின் நோக்கமானது, ஒவ்வொரு சோசலிஸ்ட் புரட்சி யும், ஸ்தூலமான நிலைமைகளையொட்டி ஸ்தூலமான ஆய்வின் அடிப் படையில், உற்பத்தி சக்திகளின் படிப்படியான வளர்ச்சியின் மூலம் காரியங் களை அணுக வேண்டும் என்பதை கவனிக்க வேண்டியது தேவையாகும். தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் திட்டவட்டமான புரட்சியானது, திட்டவட்டமான ஸ்தூலமான எதார்த்தத்தினை எவ்வாறு ஈடேற்றுவது.

அக்டோபர் புரட்சியின் 4வது ஆண்டுவிழாவில் லெனின் குறிப்பிட்டதாவது:

"ஆர்வ பெருக்கின் அலை உச்சியில் தூக்கி செல்லப்பட்டு, முதலில் மக்களது பொதுவான அரசியல் ஆர்வமும் பிறகு அவர்களது இராணுவ



படிப்பகம்

www.padippakam.com

ஆர்வமும் கிளர்ந்துவிடப்பட்டுச் சாதிக்கப்பெற்ற அதே அளவுக்கு மகத்தான பொருளாதார பணிகளையும் நேரடியாக அதே ஆர்வத்தை ஆதாரமாகக்கொண்டு சாதித்துவிடலாமென நாம் எதிர்பார்த்தோம். அரசின் பொருள் உற்பத்தியையும், அரசின் பண்டக விநியோகத்தையும், பாட்டாளி வர்க்க அரசின் ஆணைக்கேற்ப கம்யூனிச வழியில், சிறு விவசாயிகளது நாடு ஒன்று ஒழுங்கமைத்துவிட முடியும் என நாம் எதிர்பார்த்தோம் அல்லது இன்னும் கறாராக சொல்வதென்றால், போதிய அளவு சிந்தனை செலுத்தாமலேயே நாம் அனுமானித்துக்கொண்டோம். இது தவறாகும் என்பதை அனுபவம் நிரூபித்துக்காட்டியுள்ளது. பல இடைக்கால கட்டங்கள்- அரசு முதலாளித்துவமும், சோசலிசமும் அவசியமாகும். கம்யூனிசத்துக்கு மாறிச்செல்லும் பொருட்டு தயாரிப்பு செய்யும் பொருட்டு நீண்ட பல ஆண்டுகால தயாரிப்பு அவசியமாகும். நேரடியாக ஆர்வத்தையே ஆதாரமாகக்கொண்டுவிடலாகாது. மாபெரும் புரட்சியால் தோற்றுவிக்கப்பட்ட ஆர்வத்தை துணை கொண்டு தனியாள் நலனையும், தனியாளுக்கு ஊக்கம் அளித்தலையும் வியாபார கொள்கை அடிப்படையாகக்கொண்டு சிறு விவசாயிகளது நாடான இந்நாட்டில் நாம் அரசு முதலாளித்துவத்தின் வழியே சோசலிசத்தை சென்றடைய உறுதியான பாலத்தை முதலில் அமைத்திடும் வகையில் வேலை திட்டம் வேண்டும். இல்லையெனில் நாம் கம்யூனிசத்தை ஒருபோதும் அடைய முடியாது. கோடானுகோடி மக்களை கம்யூனிசத்திற்கு ஒருபோதும் அழைத்துச்செல்ல முடியாது. அனுபவம் நமக்கு கற்பிப்பதும் இதுதான், புரட்சியானது வளர்ச்சியின் எதார்த்த நிலை, புறநிலைபோக்கு நமக்கு கற்பிப்பதும் இதுதான். (லெனின் தேர்வு நூல்கள் தொகுதி 12 பக்கம் 61) மேலும் முதலாளித்துவத்தை சோசலிசத்துடன் ஒப்பிடுகையில் கொடிய விஷம் போன்றது. துவக்க கால முதலாளித்துவத்துடன் ஒப்பிடுகையில் முதலாளித்துவம் நல்லதே. சிறு உற்பத்தியும், அதிகாரவர்க்க கொடுமைகளும் சிறு உற்பத்தியாளர்களை உந்தி தள்ளியது. சிறு உற்பத்தியிலிருந்து நேரடியாக சோசலிசத்தை நோக்கிச் செல்ல நம்மால் முடியாது. அடிப்படையான பொருள் உற்பத்திக்கும், விநியோகத்திற்கும் ஒரு சில முதலாளித்துவமும் தவிர்க்க முடியாது. ஆகவே, நாம் முதலாளித்துவத்தை பயன்படுத்த வேண்டும். (குறிப்பாக அரசு முதலாளித்துவம் வாயிலாக அதை செயல்படுத்தலாம்) (ஐபிஐடி, வால்யூம் - 32 பக்கம் 350)

இது முதலாளித்துவம் மீண்டும் உயிர்பெறும் என பொருள்படுத்துவதா? இது குறித்து லெனின் தெளிவாக பதிலளிக்கிறார். இதன் பொருள் ஒரு வரையறைக்குட்பட்டு நாம் முதலாளித்துவத்தை மீண்டும் உருவாக்குவோம்.



படிப்பகம்

www.padippakam.com

இதை நாம் வெளிப்படையாகவே செய்வோம். அது அரசு முதலாளித்துவ மாகும். ஆனால் சமூகத்தில் அரசு முதலாளித்துவம் மூலதனத்தின் அதிகாரம் எங்குள்ளது. தொழிலாளி வர்க்க அரசில் அரசு முதலாளித்துவம் இரு வெவ் வேறான தன்மைகளில் உள்ளன. முதலாளித்துவ அரசில், அரசு முதலாளித் துவத்தின் பொருளானது அரசால் அங்கீகரிக்கப்பட்டும், கட்டுப்படுத்தப் பட்டும் முதலாளித்துவ நலன்களுக்காகவும், தொழிலாளர்களுக்கு கேட்டினை ஏற்படுத்துவதேயாகும். பாட்டாளி வர்க்க அரசில் மேற்சொன்னவைகள் உழைக்கும் வர்க்க நலனுக்காகவும், முதலாளித்துவத்தை எதிர்கொள்ளவும், தன்னை வலுப்படுத்தவுமான காரியத்திற்காகத்தான். அந்நிய மூலதனத்திற்காக அந்நிய முதலாளிகளுக்கு சில சலுகைகளை வழங்க வேண்டும் என்பதை சொல்லத் தேவையில்லை. தேசிய மயமாக்கலிலிருந்து விலகாது சுரங்கத் தொழில், காடு, எண்ணெய் வயல்களை அந்நிய முதலாளிகளுக்கு குத்த கைக்கு விட்டு அதற்கு மாற்றாக இயந்திரங்களையும், உற்பத்தி பொருட் களையும் மாற்றிக்கொள்வதன் வாயிலாக நம்முடைய சொந்த தொழிலை புதுப் பிக்கலாம். அரசு முதலாளித்துவம் குறித்து லெனின் கோட்பாடு நிலைகளை சோசலிஸ்ட் சீனாவின் சீர்திருத்தத்திற்கு பின்பு எவ்வாறு பிரதிபலிக்கிறது என்பதை உறுதிப்படுத்தலாம். மிக முக்கிய கேள்வியாக உள்ளாகியிருப்பது என்பது பின்தங்கிய பொருளாதாரத்தில் உள்ள உற்பத்தி சக்திகளை படிப் படியாக பெரிய அளவிலான சோசலிச கட்டுமானத்தை நோக்கி உயர்த்துவது தான், வேறொரு வார்த்தையில் குறிப்பிடுவதென்றால், உற்பத்தி சக்திகளின் அளவு மட்டத்திற்கும், சோசலிசத்தின் கீழ் உள்ள உற்பத்திக்கும் உள்ள உறவு இணக்கமாக செல்கிறதா என்பதை பார்க்க வேண்டும். முன்னேறிய சோசலிச உற்பத்தி உறவுகள் குறைந்த அளவு உற்பத்தியுடன் செல்ல முடியாது. ஒரு நீண்ட காலத்திய குறைந்த அளவிலான உற்பத்தி சக்தியானது சோசலிசத்தின் கீழ் உள்ள மக்களின் அன்றாட விரிவுபட்டுவரும் பொருள்கள் மற்றும் கலாச் சார தேவைகளுக்கும் பின்தங்கிய உற்பத்தி சக்திகளுக்கும் இடையே முரண் பாட்டை தீவிரப்படுத்தும். இந்த முரண்பாடுகள் தீர்க்கப்படாமல் நீடித்திருப்ப தால் சோசலிசத்திற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்ற முடிவிற்கு சீன கம்யூ னிஸ்ட் கட்சி வந்துள்ளது.

சோசலிச புரட்சியின் வெற்றியை தொடர்ந்து, உற்பத்தி சக்திகளை வெகு விரைவாக வளர்ச்சியடையச்செய்யும் சாதனையினை மேற்கொள்ள வேண் டும் என மாவோ வலியுறுத்தியுள்ளதை இங்கு குறிப்பிடுவது அவசியமான தாகும். புரட்சிக்கு முன் இருந்த சீனாவின் நிலைமையானது ஒருமுறை



படிப்பகம்

www.padippakam.com

மார்க்ஸ் கூறியதைப்போல "காலமெனும் பிடியினில் சிக்கிக் கிடந்த ஒரு சமூகம்" போலவே இருந்தது. ஏகாதிபத்திய நலன்களுக்காகவும். பின்தங்கப் பட்டதாகவே நீடிக்கப் புனையப்பட்ட சங்கிலியினை சீனப் புரட்சி மிகச் சரியாகவே உடைத்தெறிந்தது. இது அரை நிலப்பிரபுத்துவ சுரண்டலையும் அத்துடன் ஒட்டு உறவுள்ள மக்களின் சிந்தனைகளிலிருந்தும் விடுதலையை அடையச் செய்தது. ஒருமுறை தனது நிறைவுரையில் மாவோ "சீனாவை சோசலிசத்தால் மட்டுமே காப்பாற்ற முடியும்" என்று பேசினார். பொருளாதார திட்டத்தை பொறுத்த அளவில் 'சோசலிச சுயசார்பு' கொள்கையையே மாவோ மேற்கொண்டார்.

ஆனால், துரதிருஷ்டவசமாக, வெகுவிரைவிலேயே பத்தாண்டுக்குள் சோவியத் – சீன உறவிலும், சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்திற்குள்ளும் ஒரு பிளவு முன்னுக்கு வந்தது. சோவியத் யூனியனின் பரஸ்பர உதவியின்றி சீனாவில் சோசலிச சுயசார்பு சாதனையின் எந்தவொரு வெற்றியை நோக்கிய பயணம் காரிய சாத்தியமற்றது.

இரு மாபெரும் சோசலிச முகாம்களில் ஏற்பட்ட பிளவும், தொடர்ந்துவந்த நெருக்கடிகளும் உள்நாட்டு உற்பத்தி சக்திகளை சார்ந்தே நிற்கும்படியும், "முன்னேற்றத்தை நோக்கி மாபெரும் அடியெடுத்துவை" போன்ற உள்நாட்டு முழக்கங்களை பொருத்தி பரிசோதனையினை மேற்கொண்டு படிப்படியாக உற்பத்தி சக்திகளை வளர்க்க வேண்டிய நிலைக்கு மாவோவை தள்ளியது. இந்த முயற்சிகள் கலாச்சார புரட்சியின் மோசமான அனுபவங்களை இறுதி முடிவிற்குக்கொண்டு வந்தது. எப்படியாயினும், மாவோவிற்கும், சோசலிச சீனாவிற்கும் இருந்த ஒரே வருத்தமெல்லாம், வளர்ந்துவரும் மக்களின் பொருள் மற்றும் கலாச்சார தேவைக்கும் பின்தங்கிய உற்பத்தி சக்திக்கும் இடையே இருந்த இடைவெளிக்கு பாலம் அமைக்க தப்பிதம் இல்லாமல் வழிமுறைகளை கண்டறிந்து சாதனையை எட்ட வேண்டும் என்பதை முக்கியமாக குறிப்பிட வேண்டியதாகும்.

கலாச்சார புரட்சி காலத்தில் முன்னுக்கு வந்த அரசியல் குழப்பத்தைத் தொடர்ந்து, 'நால்வர் குழு'வின் அதிகாரங்கள் பறிக்கப்பட்ட பின்பு அரசியல், பொருளாதார பிரச்சனைகளில் தீவிரமான சுயபரிசோதனையை சீன கம்யூனிஸ்ட் கட்சி மேற்கொண்டது. 1978ல் அரசியல் மற்றும் பொருளாதார, நடைமுறையில் ஏற்பட்ட குழப்பங்களும், தவறான புரிதல்களும் தெளிவுபடுத்தப்பட்டன.



படிப்பகம்

www.padippakam.com

"ஒரு மையமான கடமையும் - இரு அடிப்படையான அம்சங்களும்" என்று அழைக்கப்படுகிற விரிந்த தத்துவார்த்த வழியினை சீன கம்யூனிஸ்ட் கட்சி தேர்ந்தெடுத்தது. "ஒரு மையமான கடமை" என்பதை பொருளாதார வளர்ச்சியையும், "இரு அடிப்படையான அம்சங்கள்" என்பது நான்கு முக்கிய கொள்கையில் உடன்படுவது (மார்க்சிசம் - லெனினிசம் மற்றும் மாசேதுங் சிந்தனைகள், சோசலிச பாதை, மக்கள் ஜனநாயக சர்வாதிகாரம் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை) மற்றும் சீர்திருத்தம் மற்றும் திறந்துவிடுதல் கொள்கையினை அமுல்படுத்துதல் வேண்டும் என்பதாகும். 1982ல் சீர்திருத்த நடவடிக்கைகள் துவக்கப்பட்ட வெகுவிரைவிற்கு பிறகு வடகொரிய அதிபர் கிம்-இல்-சுங்குடன் உரையாடும்போது டெங்சியோபிங் இவ்வாறு தெரிவித்தார்.

"எங்களைப் போன்ற பெரிய அளவில் அதேபோல வறுமையில் உள்ள ஒரு நாடு. உற்பத்தியை பெருக்க முடியவில்லையெனில் நாங்கள் எவ்வாறு உயிர்வாழ முடியும்? எங்கள் மக்கள் வாழ்க்கையில் பலவிதமான கஷ்டங்களை பெற்றிருக்கும்போது சோசலிசம் எவ்வாறு மிகச் சிறந்ததாகும்? நால்வர் குழு - "பரிதாபத்துக்குரிய சோசலிசம்" - "பரிதாபத்துக்குரிய கம்யூனிசம்" என்று கூக்குரலிட்டனர். முக்கியமாக கம்யூனிசத்தை ஒரு வழிபாட்டுக்குரிய பொருளாகவே அறிவித்தனர். இது மிகவும் முட்டாள்தனமானது. சோசலிசம் கம்யூனிசத்தின் முதற்கட்டம் என நாங்கள் சொல்கிறோம். ஒரு பின்தங்கிய நாட்டில் சோசலிசத்தை கட்டும்போது அதன் உற்பத்தி சக்திகளை வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளுடன் ஒப்பிடும் அளவிற்கு உயர்த்துவதற்கு நீண்டகாலம் முயற்சியின்றி அதை உயர்த்த முடியாது. அதேபோல வறுமையையும் முற்றிலுமாக ஒழிக்க முடியாது. ஆகவே சோசலிசத்தை கட்டும் பணியில் உற்பத்தி சக்திகளை வளர்க்கவும், வறுமையை படிப்படியாக ஒழிக்கவும் சாத்தியமான சகலத்தையும் செய்வோம். இதன் மூலம் மக்கள் தரம் உயரும். அப்படியின்றி எவ்வாறு முதலாளித்துவத்தை சோசலிசம் வெற்றி பெற முடியும்?

இரண்டாவது கட்டம் அல்லது வளர்ச்சியடைந்த கம்யூனிசத்தில் பொருளாதாரம் மிகவும் வளர்ச்சியடைந்திருக்கும், பொருள் உற்பத்தி அபரிமிதமாக இருக்கும். அப்போது ஒவ்வொருவருக்கும் திறமைக்கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற ஊதியம் என்ற கொள்கையை எங்களால் அமுலாக்க முடியும். உற்பத்தியை பெருக்குவதற்கான சாத்தியமான ஒவ்வொன்றையும் செய்யவில்லையெனில் எப்படி நாங்கள் பொருளாதாரத்தை விரிவுபடுத்த முடியும்?



படிப்பகம்

www.padippakam.com

சோசலிசம் மற்றும் கம்யூனிசத்தின் மகத்துவத்தை எவ்வாறு செய்துகாட்ட முடியும்?

நாங்கள் இதற்கான புரட்சியினை சில பத்தாண்டுகளில் மேற்கொள்ள வேண்டும். சோசலிசத்தை கட்டும் பணியினை முப்பதாண்டுகளுக்குள் செய்ய வேண்டும்.

ஆயினும், 1978ல் எங்கள் தொழிலாளர்களின் சராசரி மாத சம்பளம் வெறும் 45 யுவான் மட்டுமே. மேலும் பெரும்பாலான கிராமப்புற பகுதிகள் வறுமை யின் கஷ்டத்தால் இருந்துவருகிறது. இப்படியிருக்கையில் சோசலிசம் மகத் துவம் வாய்ந்தது என்று எப்படி அழைக்க முடியும்? ஆகவேதான் எங்கள் வேலைகளை பொருளாதார வளர்ச்சியை நோக்கி திருப்ப வேண்டும் என்று வற்புறுத்தினேன். (1978)-11வது மத்திய குழுவின் 3வது பிளின கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டு வருகிறது. அது முக்கிய திருப்புமுனையான அம்சமாக பிரதிநிதித்துவம் பெற்றுள்ளது. நாங்கள் மேற் கொண்ட வழி சரியானது என நடைமுறையில் வெளிப்பட்டு வருகிறது. ஒட்டு மொத்த தேசமே ஒரு புதிய பார்வையினை எடுத்துள்ளது. (டெங்சியோ பிங் தேர்வு நூல்கள், வால்யூம் 3, பக்கம் 21-23)

சோசலிசத்தின் ஆரம்ப கட்டத்தினை பற்றிய கோட்பாடு ரீதியான எண்ணங்களை புரிந்துகொள்வது அவசியமாகும். மார்க்சும், ஏங்கெல்சும் உறுதிப்படுத்திய உண்மைகளை குறிப்பிட்டபடியும், அதனை பின்பற்றிய மார்க்சியவாதிகள் ஏற்றுக்கொண்டபடி, சோசலிசமானது முதலாளித்துவத் திற்கும் - கம்யூனிசத்திற்கும் இடையே மாறிச் செல்லும் கட்டமாகும். எனவே கம்யூனிச சமுதாயத்தின் முதற்கட்டமாக சோசலிசம் அமையும். இருப்பினும், சீன கம்யூனிஸ்ட் கட்சி அடுத்த கட்டத்தை நோக்கி மாறிச் செல்வதற்காக யுக்தியை வழிவகுக்கையில் புரட்சிக்காலத்தில் இருந்த உற்பத்தி சக்திகளின் அளவை சார்ந்து அடியெடுத்து வைக்க வடிவமைத்தது. சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 13வது காங்கிரஸ் இதை முறைப்படி தெளிவாக்கியது. புரட்சி சமயத் தில் சீனாவானது அரை நிலப்பிரபுத்துவ - அரை காலனியாதிக்கத்தின் கீழ் மிகவும் பின்தங்கிய நிலையில் சோசலிசத்திற்கான கட்டத்தை மாறிச்செல்லும் குறைந்த அளவிலான நிலையில் இருந்தது.

1980ல் உலக வங்கி ஆய்வு குழு ஒன்றை சீனாவிற்கு அனுப்பியது. அக் குழு கொடுத்த மதிப்பீட்டின்படி 1952ல் சீனாவின் தனிநபர் மொத்த தேசிய உற்பத்தி 50 அமெரிக்க டாலராக இருந்தது. இது இந்தியாவைவிட சற்று குறை



படிப்பகம்

www.padippakam.com

வாகும். 1928ம் ஆண்டு சோவியத் யூனியனின் மதிப்பீட்டில் ஐந்தில் ஒரு பகுதிக்கு சற்று கூடுதலாகும். உலகின் மிகப்பெரிய மக்கள் தொகைகொண்ட ஒரு நாட்டின் முக்கிய முயற்சியாக நவீன சோசலிசத்திற்கு மாறிச்செல்லும் கடமையே மிக முக்கியமாக இருந்தது. நவீன சோசலிச, பொருளாதார கட்டத்தை அடைவதற்கு புரட்சி நடைபெற்ற காலத்திலிருந்து குறைந்தது நூறு ஆண்டுகளாவது தேவைப்படும் என்று சீன கம்யூனிஸ்ட் கட்சி மதிப்பீடு செய்திருந்தது. இந்த நடவடிக்கைக்கு அவர்கள் 'சீன தன்மைக்கேற்ப சோசலிசத்தை கட்டுவது" என அழைத்தனர்.

மாறுதலை நோக்கிய சாதனையினை எட்டுவதற்காக சீன கம்யூனிஸ்ட் கட்சி மற்றொரு கோட்பாடு ரீதியாக சோசலிச சந்தை பொருளாதாரம் என்ற சூத்திரத்தை முன்னுக்கு வைத்தது. பொருள் உற்பத்தி எவ்வளவுக்கு எவ்வளவு விரிவுபடுத்தப்படுகிறதோ, அதே அளவிற்கு இப்பொருள்களை பரிமாற்றம் செல்வதற்கான சந்தையையும் விரிவுபடுத்த வேண்டியது அவசியம் என்பது தற்போது தெளிவாகிறது. சிபிஎம் 14வது காங்கிரஸ் அதன் தத்துவார்த்த தீர்மானத்தில் கீழ்கண்டவாறு குறிப்பிடுகிறது:

"சோசலிசத்தின் கீழ், சந்தையானது இடைவிடாத உயிரோட்டமான நிலையிலிருந்து வெளியேறுவது தவறான முடிவிற்கு கொண்டு செல்லும். ஆகவே பொருள் உற்பத்தி எவ்வளவு நீடிக்கிறதோ, அதே அளவு சந்தையும் இருக்கும். சந்தைக்கும் - திட்டமிடுதலுக்கும் இடையே உள்ள பிரச்சனை முக்கியமானதல்ல, ஆனால் அதில் மேலோங்கி நிற்கிறது என்பதுதான். சோசலிச சந்தையானது சமூக உற்பத்தியை விநியோகிக்கும் ஒரு கருவியே. மத்தியப்படுத்தப்பட்ட திட்டமிடுதல், சந்தை சக்திகளை பயன்படுத்துதல் மற்றும் சந்தை தகவல்களும் உற்பத்தி சக்தியை மிக திறமையாக வளர்க்கவும், மக்கள் நல தேவைகளை பூர்த்தி செய்யவும் முடியும். ஆகவே, சந்தை தகவல்களை அலட்சியப்படுத்துவது [illegible] ஆதாரங்களை அளவற்ற முறையில் மிக அளவில் பயன்படுத்துவதும் அதுவே திட்ட நடவடிக்கைகளை பெரிய அளவில் பாதிப்பிற்கு கொண்டு செல்லும். சந்தைக்கும், திட்டமிடுதலுக்கும் உள்ள பிணைப்பானது இவ்வாறு உள்ளது. ஆனால் சோசலிச அரசின் அதிகாரத்தின் கீழ் சீன கம்யூனிஸ்ட் கட்சி இலக்கினை அடைய ஆராய்ந்தது. அதன் முயற்சிகளை கீழ்க்கண்டவாறு தொகுத்துள்ளது.

சீனா தற்போதும் ஆரம்ப நிலையிலான சோசலிச கட்டத்தில் உள்ளது. நாங்கள் பொருள்- பண உறவை வளர்க்க வேண்டும். சந்தைமயமாக்கலை



படிப்பகம்

www.padippakam.com

உயர்த்த வேண்டும். சோசலிச சந்தை பொருளாதார முறையினை நிலைப் படுத்தவும், நிச்சயப்படுத்தவும் வேண்டும். உலகம் முழுவதும் பரிசோதித்த சோதனையின்படி, சரக்கு பொருளாதார வளர்ச்சி கட்டத்தினை சமூக - பொருளாதார நடவடிக்கைகள் மூலமாக குறுக்கு வழியில் அடையமுடியாது என்பது அனுபவமாகும். நவீனமயமாக்கல் பாதையில் ஒவ்வொரு நாடும் வியாபாரமயமாக்கல் மற்றும் சமூக - பொருளாதார உறவுகளை சந்தைமய மாக்கல் கட்டத்தின் மூலமாக செல்ல முடியும். இந்த கட்டத்தில் குறுக்கு வழியில் செல்லும் அனைத்து முயற்சிகளும் தோல்வியடையும்.

சந்தை பொருளாதாரத்தின் மாபெரும் வளர்ச்சியின் சாதகமானது மதிப்பு விதியின்படி ஒழுங்குபடுத்தவும். பொருளாதார நடவடிக்கைகளை பொறுத்த விஷயத்தில் வளர்ச்சியடைந்த தொழில்நுட்பம், பொருட்களின் தரத்தை அபிவிருத்தியடைவது, சேவைகள் மற்றும் மேலாண்மை ஆகியவற்றில் ஒவ் வொன்றும் மற்றொன்றுடன் போட்டியிடும். ஆகவே அவைகள் போட்டியின் நடுவே தாக்குபிடிக்க முடியும். இது பொருளாதாரத்தை உற்சாகமூட்டும், வளர்ச்சி அபிவிருத்தி அடையும். சந்தை நடவடிக்கைகள் நிச்சயமாக சர்வ வல்லமை படைத்தவையாக இல்லையென்றாலும், இடர்பாடுகள் மற்றும் விரிந்த பொருளாதார கட்டுப்பாடும், அரசால் ஒழுங்குபடுத்தும், முறையற்ற சந்தை நடவடிக்கைகளினால் தவிர்க்க முடியாததாகிவிடும். ஆகவே அரசின் கட்டுப்பாடு மற்றும் ஒழுங்குபடுத்துவதில் சந்தையானது மிக முக்கியமான பங்கினை வகிப்பதோடு சோசலிச சந்தை பொருளாதார முறைக்கு இது தேவையாயும் உள்ளது.

தற்போது நாங்கள் சீனாவின் அரசுக்கு சொந்தமான நிறுவனங்கள் உட்பட நிறுவனங்களை அடுத்த 5 முதல் 10 ஆண்டு காலத்தில் சட்டப்பூர்வமாகவும், சந்தைக்கேற்ப இயங்கவும், விரிவுபடுத்தவும் அதன் லாப-நட்டங்களை பொறுப்பேற்க சுயமாக தீர்மானித்து நடத்தும் வகையில் திருப்ப முயன்றுள் ளோம். வெளிப்படையாக சொல்வதென்றால், ஒழுங்குமுறையிலான போட்டி யிடக்கூடிய சந்தை முறை உருவாகும். தற்போதைய சந்தைமயமாக்கல் 50 சதவீதத்திலிருந்து 60 சதவீதமாக உயரும், மேலும் மிகவும் அபிவிருத்தியுள்ள சமூக பாதுகாப்பும், விரிந்த ஒழுங்குமுறையும் அறிமுகப்படுத்தப்படும் சமூக உற்பத்தி சக்திகள் படிப்படியாக வளர்ச்சியடையும். இதன் மூலம் நவீனமய மாக்கல் நடவடிக்கையானது வேகமடையும்.

*(சோசியல் சையன் இன் சீனா வால்யூம் எண்:2, பக்கம் 21)*



படிப்பகம்

www.padippakam.com

வேறொரு வார்த்தையில் சொல்வதென்றால், சோசலிச அரசின் கட்டுப் பாட்டில் உற்பத்தி சாதனங்கள் பொது சொத்தின் ஆதிக்கத்தில் முக்கிய பங் காற்றும், சரக்கு சந்தை பொருளாதாரம் சீனாவில் உருவாக்கப்படும் என்பதே. இது குறித்த சீன கம்யூனிஸ்ட் கட்சியின் வார்த்தையில் முதலாவதாக மொத்த சமூக மூலதனத்தில் அரசின் மூலதனம், ஆதிக்கம் செலுத்தும், இரண்டாவ தாக தேசிய பொருளாதாரத்தில் அரசின் பொருளாதாரம் ஜீவநாடியாகவும், ஆதிக்கம் செலுத்தும் பங்கினையும் வகிக்கும். இதன் மூலம் பொருளாதார அதிருப்திகள், தனியார் சந்தை பொருளாதாரத்தால் உருவாகும் அசமத்துவ வளர்ச்சியினை தடுக்கவும், உழைக்கும் மக்களின் பொதுவான நலன்களுக்கு உத்தரவாதம் அளிக்கவும் முடியும் என்று பார்த்தனர்.

அதன்படி, இத்தகைய நடவடிக்கையில் அவர்கள் தற்போது சீனாவின் அரசிற்கு சொந்தமான நிறுவனங்களை உலக அளவிலான பொருளாதார அறிஞர்களின், சோசலிச சீனாவின் நண்பர்களின் கவனத்தினை கவரும் வகையில் மாற்றம் செய்வதற்கு முனைந்துள்ளனர். எவ்வாறாயினும் இந்த புதிய முயற்சியில் வெற்றிபெறுவோம் என்றும், பொது சொத்துடைமைக்கும் சந்தை பொருளாதாரத்திற்கும் இடையே இணைப்பு ஏற்படும் என்றும் சீனர்கள் நம்பிக்கை வைத்துள்ளனர்.

இத்தகைய கோட்பாட்டு ரீதியான உள்ளடக்கத்தில் சோசலிச சீனாவானது சீர்திருத்தப்பாதையில் தடம்பதித்து மாபெரும் வெற்றியினை பெற்று சாதனை படைத்துள்ளது. 1978க்கும் 95க்கும் இடையேயான காலத்தில் சீனாவின் நிகர கிராமப்புற தனிநபர் வருவாய் 12 மடங்கு உயர்வடைந்தது. அதாவது 134 யுவானானது 1578 யுவானாக உயர்ந்தது. சீன அரசின் புள்ளி விபர குழுவின் கணக்குப்படி 1978ல் 2100 கலோரிக்கும் குறைவான நுகர்வைப்பெற்ற வறுமைக் கோட்டிற்கும் கீழ் உள்ளவர்கள் என்று வகைப்படுத்தியவர்கள் மக்கள் தொகையில் 31 சதவீதமாக இருந்தனர். 1985ல் உலக வங்கி மதிப்பீட்டின்படி இதில் பாதிக்கும் குறைந்து 85 மில்லியன்(8.5 கோடி) எண்ணிக்கையினரே இருந்தனர். 150 மில்லியன் மக்கள் வாழ்க்கையில் சில அபிவிருத்திகளை குறுகிய ஏழு ஆண்டு காலத்தில் அடைந்திருப்பது வரலாற்றில் நிகழாத ஒன்று. இது எந்தவொரு வறுமை ஒழிப்பு திட்டத்தின் மூலமும் செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. "கடல் அலை கப்பலை தள்ளுவதை போல்" ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சியின் வாயிலாக இது அடையப்பட்டது. இருந்த போதிலும் சீன அரசு 1985ல் வறுமை ஒழிப்பிற்கான "ஈகாங் டாய்ஜென்



படிப்பகம்

www.padippakam.com
(Yigong Daizhen) என்றழைக்கப்படும் திட்டம் நடைமுறைக்கு கொண்டு வந்தது. அதன் மூலமாக ஐந்தாண்டு திட்ட காலத்தில் 331 பின்தங்கிய பகுதி களில் விசேஷ கிராமப்புற வளர்ச்சித் திட்டங்களும், பொதுப்பணி திட்டங் களும் நிறைவேற்றப்பட்டன.

1985க்கும் 91க்கும் இடையேயான காலத்தில் ஒரு லட்சத்து 31ஆயிரம் கி.மீ. தூரம் சாலை, 7 ஆயிரத்து 900 கி.மீ. நீளத்திற்கான டாலர் 2ஆயிரத்து 400 ச.மீ. தூரம் உள்நாட்டு நதிநீர் உற்பத்திக்கான பணி செய்யப்பட்டு இதன் மூலம் 20 மில்லியன் மக்களும், 13 மில்லியன் விலங்குகளும் பயன்பெற்றனர். 1984ல் 80 மில்லியன் மக்கள் அதாவது மக்கள் தொகையில் 6.5 சதவீதம்பேர் மட்டுமே வறுமைக்கோட்டிற்குக்கீழ் இருந்தனர் என்று மதிப்பீடு செய்யப் பட்டது. இதுவும் தொலைதூர மலைப்பகுதிகளில் மட்டுமே காணப்பட்டது. இதைக்கூட 2000 ஆண்டு இறுதிக்குள் ஒழிக்க நிச்சயிக்கப்பட்டுள்ளது.

இத்துடன் சீர்திருத்த நடவடிக்கைகள் கிராமப்புற பகுதிகளில் தொடங்கிய வுடன் பழைய முறையிலான "கம்யூன்களும்" (கூட்டுப்பண்ணைகள்) "படையணிகளும்" நகரியமாகவும் மற்றும் கிராம நிறுவனங்களாகவும் மாற்றப் பட்டது. சோசலிச சீனாவில் கிராமப்புற பகுதியில் மாபெரும் மாறுதல்களை செய்து சாதனை படைத்தது. 1996 உலக வளர்ச்சி அறிக்கை தகவல்படி, சீன நகரியம் மற்றும் கிராம நிறுவனங்கள் பங்கானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 1985ல் 13 சதவீதமாக இருந்தது. 1994ல் 31 சதமாக உயர்ந் தது. சீனாவின் மொத்த தொழில் வளர்ச்சியில் இந்த அமைப்புகளின் பங்கு மூன்றில் ஒரு பகுதியாகவும், கடந்த 15 ஆண்டுகளில் அவைகள் 15 மில்லியன் வேலைவாய்ப்புக்களையும் உருவாக்கியுள்ளது.

நேரடி அந்நிய முதலீட்டை கவருவதில் சீனாவின் திறமையானது. உலகள வில் மிகப்பெரிய ஆர்வத்தை உருவாக்கியதும் ஒரு உண்மையாகும்.

1984ல் சீனாவிற்கு வந்த நேரடி அந்நிய முதலீட்டின் மதிப்பு 1.3 மில்லியன் டாலர், பிரதானமாக அவைகள் கிழக்கு கடற்கரை பகுதியில் உருவாகி இருந்த சிறப்பு பொருளாதார மண்டலங்களுக்கு வந்தன. 1998ல் இது 45.6 மில்லியன் டாலராக உயர்ந்தது. இதில் 64 சதம் கூட்டு வியாபாரத்திற்காக வந்தது. 36 சதம் அந்நிய கம்பெனிகள் ஏற்றுமதியை பிரதானமாகக்கொண்டு உற்பத்தி செய்ய வந்தவை. 1988ல் நேரடி மூலதனம் மூலம் வந்த 45.6 மில்லியன் டாலரில் 3.9 மில்லியன் டாலர் அமெரிக்காவிலிருந்தும், 3.4 மில்லியன் டாலர் ஜப்பானி லிருந்தும் வந்தன. மீதியிருந்தவைகள் ஹாங்காங், தைவான் மற்றும்



படிப்பகம்

www.padippakam.com

மாக்கோவில் வாழ்ந்த கடல்கடந்து வாழ்ந்த சீனர்கள் மூலம் வந்தவையே. ஹாங்காங், மாகோ இரண்டும் தற்போது சீனாவில் திரும்ப இணைந்து விட்டதால் அவைகளின் பங்கு "வெளிநாட்டு மூலதனம்" என்று எதிர் காலத்தில் அழைக்க முடியாது. இருந்தபோதிலும், 1990களில் வெளிநாட்டு நேரடி மூலதனம் உள்நாட்டு மூலதனத்தில் 15 சத பங்கு மட்டுமே. இதனால் சீனாவின் வெற்றிக்கு அந்நிய மூலதனம் மட்டுமே காரணம் என்பதில் உண்மையில்லை. எதார்த்தத்தில் 1978க்கும் 93க்கும் இடையேயான காலத்தில் மொத்த உள்நாட்டு சேமிப்பு மொத்த தேசிய உற்பத்தியில் 41 சதத்திற்கும் மேலாகவும், உள்நாட்டு மூலதனத்திற்கு போதுமானதற்கும் மேலாகவே இருந்தது. இதன் காரணமாக இந்த முழுமையான காலத்திலும் சீனா தன்னுடைய இருப்பு கணக்கினை உபரியாக பராமரிக்க முடிந்ததற்கும், 1996ல் 15.7 மில்லியன் டாலராக எட்டியதும் மறுக்க முடியாத காரணமாகும். சீனா இன்று அந்நிய செலாவணி கையிருப்பாக 44 மில்லியன் டாலருக்கும் மேலாக வைத்துள்ளது.

இத்தகைய சீர்திருத்தத்தின் பலனாக கடந்த இருபதாண்டுகளில், சீனா மாபெரும் வெற்றிகளை ஈட்டி சாதனை புரிந்துள்ளது. வாழ்க்கை தரம் எல்லையற்று உயர்ந்தது. வறுமை அளவு மெலிதாகி கீழே இறங்கியது. ஆரோக்கியம், உயர்கல்வி, அறிவியல் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியில் குறிப்பிடும்படியான அளவிற்கு சீனா உயர்ந்துள்ளது. இவையெல்லாம் கடந்த கால மாவோயிசத்திலிருந்து விலகியதால்தான் சாத்தியமானது என்பதல்ல. முதல் முப்பதாண்டு காலத்தில் சீன மக்கள் குடியரசு பின்பற்றிய மத்தியப்படுத்தப்பட்ட திட்டமிடுதல் என்ற உறுதியான அஸ்திவாரத்தின் வளர்ச்சி காரணமாகவே இது முடிந்தது என்பதேயாகும்.

எப்படியாயினும் இந்த வளர்ச்சி போக்குகளின் விளைவாக புதிய பிரச்சனைகளும் உருவாகி வருகின்றன. அதிகரித்து வருகிற அசமத்துவம், வேலையின்மை மற்றும் ஊழல் ஆகியவையே அவைகளாகும். இவைகளின் ஆபத்தினையும் சீன கம்யூனிஸ்ட் கட்சி உணர்ந்து, இந்த பிரச்சனைகளிலிருந்து வெளியேற நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. ஆனால் தற்போதைய அரசுடமை நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் மாற்றங்களினால் வேலையின்மை எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் கூடுகிறது என்ற உண்மையும் இருந்து வருகிறது. இதே சமயம் வேலையிலிருந்து வெளியேற்றப்பட்ட தொழிலாளர்களுக்கு மறு பயிற்சியளிக்கும் திட்டங்களும், குறைந்தபட்ச வாழ்க்கை தேவைக்கான நிவாரணமும் வழங்கி அரசாங்கம் பராமரிக்கிறது. வேலையின்மை ஒரு அதிமுக்கியமான பிரச்சனைதான்.



படிப்பகம்

www.padippakam.com

இவ்வாறு அதிகரித்து வருகிற அசமத்துவம் முதலாளித்துவத்து வர்க்கத்தை ஏற்படுத்துமா எனும் முக்கிய கேள்வி முன்னுக்கு வருகிறது. அரசு முதலாளித்துவம் மற்றும் உற்பத்தி சக்திகளை படிப்படியாக வளர்க்க வேண்டிய அவசியமான இம்மாதிரியான மாறுதல் நோக்கி பயணிக்கும் காலங்களில் இதுபோன்ற இடர்பாடுகள் சோசலிச அரசிற்கு ஏற்படும் என்பதை இது குறித்து பேசுகையில் லெனின் எச்சரிக்கை செய்கிறார். அரசு முதலாளித்துவத்தை கட்டும நடவடிக்கையின் தன்மையினை ஒரு போரைப்போன்றதே என்கிறார். தற்போதைய போரின் பிரச்சனையானது யார் வெற்றி பெறுவார்கள், சூழ்நிலையின் பலன்களை முதலில் யார் எடுத்துக்கொள்வார்கள் என்பதேயாகும். நாம் முதலாளித்துவம் நுழைவதற்கு கதவை திறந்துவைத்து அனுமதிக்க போகிறோமா? அல்லது பாட்டாளி வர்க்க அரசு அதிகாரமா? லெனின் மேலும் குறிப்பிடுகையில், இந்த கடினமான பிரச்சனையை நாம் சந்திக்கத்தான் வேண்டும். யார் முதல்நிலைக்கு வருவார்கள்? ஒன்று முதலாளித்துவம் அமைப்பு ரீதியாக திரண்டு முதலில் வெற்றிபெறுவார்களேயானால், அவர்கள் கம்யூனிஸ்ட்டுகளை அப்புறப்படுத்தி அதற்கு ஒரு முடிவு கட்டுவார்கள் அல்லது விவசாயிகள் ஆதரவுடன் பாட்டாளி வர்க்கம் அரசு அதிகாரத்திற்கு வருமேயானால், நிச்சயமாக முதலாளித்துவ கனவான்களை கடிவாளமிட்டு தங்களது பிடியில் வைத்திருப்பார்கள், அதன் மூலம் நேரடியாக முதலாளித்துவம் அரசு அமைப்புகளுடன் இணைந்து அரசுக்கு உதவியாகவும், சேவை செய்யும் முதலாளித்துவம் உருவாகும். தெற்கு சீன பகுதியில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட சமயத்தில் டெங்சியோபிங் பேசுகையில் சொல்கிறார்: " பிரச்சனையின் உண்மை என்னவென்றால், முதலாளித்துவ பாதையா? சோசலிசமா? என்பதை. விமர்சனம் செய்யும் முக்கிய விமர்சகர்கள் தீர்ப்பு எழுதும் முன் சோசலிச சமூக உற்பத்தி சக்தியின் வளர்ச்சிக்கு உதவியாய் இருப்பது எது என்பதையும், வாழ்க்கை தரத்தை உயர்த்த எது உதவும் என்பதையும் தீர்மானிக்க வேண்டும். மேலும் 1985ல் சில அசமத்துவ வளர்ச்சி உருவான சூழலில் டெங்சியோபிங் கூறுகிறார்:

தேவையொற்றி பார்க்கையில், அங்கு பிரச்சனை வெடித்து கிளம்பும் நிலை இல்லை. (அதிகரித்துவரும் பொருளாதார, அசமத்துவம் என படிக்கவும்) இப்பிரச்சனையில் நாங்கள் பெருமளவு சிந்தனையை செலுத்தி எங்கள் கொள்கையை திட்டமிடவும், நடைமுறைப்படுத்தவும் செய்கிறோம். பூதாகரமாக கிளம்புமேயானால் சீர்திருத்தம் தோல்வியடையும், இதனால் புதிய முதலாளித்துவம் உருவாகுமா? சில குறிப்பிட்ட எண்ணிக்கையில் முதலாளித்துவ



படிப்பகம்

www.padippakam.com

சக்திகள் தோன்றும். ஆனால் அவை ஒரு வர்க்கமாக வடிவம் பெறாது.

சுருக்கமாகக் கூறுவதென்றால் பொது சொத்துடமையை ஆதிக்கத்தில் வைத்திருக்கவும், வெடித்துக்கிளம்பும் பிரச்சனைகளை தடுக்கவும், நம்முடைய சீர்திருத்தம் தேவையாகிறது. இந்த அடிப்படை வழியை கடந்த நான்கு ஆண்டுகளாக நாம் பின்பற்றி வருகிறோம். இதன் மூலம் சோசலிசத்தை பாதுகாத்து வருகிறோம். மேலும் நான் குறிப்பிட விரும்புவது என்னவென்றால், நம்முடைய சோசலிச அரசு நிர்வாக அமைப்பு சக்தி வாய்ந்ததாகும். அதனால் திரிபுகளையும், குறுக்கீடுகளையும் சரி செய்ய முடியும். திறந்துவிடும் கொள்கை சில இடர்பாடுகளையும் சிற்சில முதலாளித்துவ கருத்துக்களையும் கொண்டுவரும் என்பது நிச்சயமானது. ஆனால் நம்முடைய சோசலிச அரசியல், அரசு நிர்வாக அமைப்பு ஆகியவைகளுடன் நம்மால் அவைகளை சந்திக்க முடியும். ஆகவே அதற்காக அச்சப்படுவதற்கு ஒன்றுமில்லை.

சீன தன்மைக்கேற்ற சோசலிசத்தை கட்டுவதில் ஆக்கபூர்வமான அனுபவத்தின் நடுவே சீன கம்யூனிஸ்ட் கட்சி தெளிவாகவே உள்ளது. இதை மற்றொரு வார்த்தையில் சொல்வதென்றால் மார்க்சியத்தை லெனின் வகைப்படுத்துகையில் "ஸ்தூலமான நிலைமைக்கேற்ப ஸ்தூலமான ஆய்வு" என குறிப்பிடுவது பொருத்தமானதாகும்.

லெனின் தன்னுடைய காலத்தில் சர்வதேச, உள்நாட்டு ஸ்தூலமான நிலைமைகளின் அடிப்படையில் பின்தங்கிய உற்பத்தி சக்திகளுக்கும், வளர்ச்சியடைந்த உற்பத்தி உறவுகளுக்கும் இடையே படிப்படியாக இணைப்பை ஏற்படுத்தினார். இருப்பினும், சோவியத் சோசலிச கட்டுமானம் வெவ்வேறான வரலாற்று சூழ்நிலையின் கீழ் இடம் பெற்றது. பாசிஸ்ட் சக்திகள் இரண்டாவது உலகப்போருக்கு தயார்படுத்தி சோவியத் யூனியனை சுற்றிவளைத்து நெருக்கியதால் அது தன்னுடைய சிற்சில உற்பத்தி சக்திகளை ஒருமுகப்படுத்த வேண்டிய அமைதியான காலத்திற்கு அனுமதிக்கவில்லை. சோசலிசம் வாழவேண்டுமானால் உற்பத்தி காரணிகளை சமூகமயமாக்கும் கட்டத்தை விரிவுபடுத்த வேண்டும். உண்மையில் சமூக உற்பத்தி மூலம் உற்பத்தி சாதனங்களை சோசலிசமய மாக்கியதன் வெற்றியினால்தான் இரண்டாம் உலகப்போரில் பாசிஸ்ட் சக்திகளை முறியடித்திட முடிந்ததும் இருபதாம் நூற்றாண்டின் குறிப்பிடும்படியான விடுதலை போராட்ட அனுபவமாகவும் திகழ்ந்தது.



படிப்பகம்

www.padippakam.com

தற்போதைய சீனாவின் அரசியல் சூழ்நிலை வித்தியாசமானது. சீன - சோவியத் உறவில் ஏற்பட்ட சிதைவு, உட்பூசல்கள் உலக முதலாளித்துவத்திற்கு சீன பொருளாதாரத்தை திறந்துவிடும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இத்துடன் நிதி மூலதனம் பன்னாட்டுமயமாக்கலும், தீவிரமான ஒருமுகப்படுத்தியதாலும், புதிய சந்தையினை தேடுதல் காரணமாகவும், உலகத்தினரை சீனா மிக பிரபலமான நாடாக கவர்ந்தது. இதனையொட்டியும் பல்வேறு வகையான காரணங்களினால் பொருளாதார சீர்திருத்த கொள்கையினை அமுலாக்க சீனா அனுமதித்தது.

உற்பத்தி சக்திகளை படிப்படியாக விரிவுபடுத்தி, இத்தகைய சீர்திருத்தம் மூலம் சீனாவில் சோசலிசத்தை பலப்படுத்தவும், ஒருமுகப்படுத்தவும் சீன கம்யூனிஸ்ட் கட்சி முனைந்துள்ளது. மறுபுறம், மேலே குறிப்பிட்டது போல் இந்த நடவடிக்கையின்போது சோசலிசத்தை பலவீனப்படுத்தவோ அல்லது ஏன் அழிக்கக்கூடிய போக்குகளும் ஏற்படும்.

சீனாவில் உள்ள ஏகாதிபத்திய நிதி மூலதனம் சோசலிசத்தை வலுப்படுத்துவதற்காக இல்லை. ஆனால் லாபத்தை பெறுவதற்கும், சோசலிசத்தை நாசம் செய்யவும் சூழ்நிலையை உருவாக்கும். சோசலிசத்தை பலவீனப்படுத்தவோ அல்லது மிகப்பெரும் லாபவேட்டை மூலம் சிதைக்கவோ நிச்சயமாக நினைப்பார்கள்.

ஏகாதிபத்தியத்திற்கும் - சோசலிசத்திற்கும் இடையே நடைபெறும் தற்போதைய இந்த போராட்டம் சீன அரங்கில் இடம்பெற்றுள்ளது. இந்த போராட்டத்தில் சோசலிசத்தை பலப்படுத்த வேண்டும், ஒருங்கிணைக்க வேண்டும் என விரும்புகிற சக்திகள் உலகம் முழுவதும் உள்ள கம்யூனிஸ்ட்டுகளின் ஆதரவினை பெறவேண்டும். சீனாவில் சோசலிசத்தை பலப்படுத்துவதற்கான சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலான பங்களிப்பு சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தையும் முன்னேறச் செய்யும்.

*("மார்க்சிஸ்ட்" ஆங்கில இதழிலிருந்து எடுக்கப்பட்டது)*



படிப்பகம்

www.padippakam.com

# சமணம்

**எம்.கே.கங்கோபாத்யாயா**

தமிழில் : **கள்ளூர் கு.மா.பாலசுப்பிரமணியம்**

**பௌ**த்த தத்துவப் பள்ளிகளைப் போன்றே சமண தத்துவத் துறையும் முதலில் மத நம்பிக்கையோடு பிணைப்புற்றிருந்தது. பெரும்பாலும் புத்தமதம் தோன்றுவதற்கு வெகு காலத்துக்கு முன்பே சமண மதம் தோன்றியிருக்கலாம். ஜைனம் (சமணம்) எனும் சொல் ஜினா என்னும் சொல்லிலிருந்து பெறப்பட்டது. ஜினா என்றால் வெற்றி பெற்றவர் அதாவது தன் ஆசைகளையெல்லாம் அடக்கி தன்னையே தான் வெற்றி கொண்டவர் என்று பொருள். இச்சொல் வழக்கமாக அம்மதத்தினுடைய மிகப்பெரிய ஞானியாகிய வர்த்தமான மகா வீரரையே குறிக்கும். புத்தர் வாழ்ந்தபோது அவரோடு வயதில் மூத்தவராக வாழ்ந்தவர் இவர். புத்தரைப் போலவே இவரும் அரச வம்சத்தில் பிறந்தவர். ஆனால் வழிவழியாகக் கூறப்பட்டு வரும் வழக்கத்தின்படி சமண மதத்தைத் தோற்றுவித்தவர் அவர் அல்லர். ஒருவர் பின் ஒருவராக வந்ததாகக் கூறப்படும் இருபத்து மூன்று ஞானிகளில் இவர் கடைசி ஞானியாவார். அவருக்கு முன் வந்த ஞானிகளின் கருத்துக்களையும் கொள்கைகளையும் அவர் விவரித்து உரைத்தார். அவ்வளவே.பௌத்தர்களுக்கும், சமணர்களுக்கும் பொதுவான ஒத்துப் போகக்கூடிய சில அம்சங்களை நாம் எளிதாகக் காணலாம். இருவரும் பிராமணியத்தை எதிர்ப்பவர்கள். இருவரும் வேதத்தை ஏற்றுக் கொள்வதில்லை. எல்லாம் வல்லவராகவும் எல்லாவற்றுக்கும் மேம்பட்டவராகவும் கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதை அவர்கள் இருவரும் மறுக்கிறார்கள். ஆனால் அவர்கள் வேறுபடும் அம்சங்கள் நிறைய இருக்கின்றன. நொடி மாற்றம் எனும் கொள்கையை சமணர்கள் வன்மையாக எதிர்க்கிறார்கள். தான் மற்றும் பொருள்கள் போன்றவை நிலையானவை எனும் கொள்கையை அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். உண்மையில் தத்துவ விவகாரங்களில் அவர்கள் இருவரும் ஒவ்வொரு அம்சத்திலும் வேறுபடுவதோடு தமது சொந்த தனித்த கருத்துக்களை முன்வைக்கிறார்கள்.

சமணர்கள் இரண்டு வகைகளாகப் பிரிக்கப்படுகிறார்கள். (இப்பிரிவு கி.பி. முதல் நூற்றாண்டிலேயே ஏற்பட்டது என்று கூறப்படுகிறது) முதலாவது வெள்ளை ஆடை உடுத்தும் சுவேதாம்பார்கள். இரண்டாவது வான வண்ண



படிப்பகம்

www.padippakam.com

உடையோடு அல்லது நிர்வாணமாக இருக்கும் திகம்பரர்கள். அவர்கள் இரு வரும் நம்பிக்கைகளில் வேறுபடுவதைவிட சடங்குகள் செய்வதில் அதிகமாக வேறுபடுகிறார்கள். அடிப்படைத் தத்துவக் கோட்பாடுகளைப் பொறுத்தவரை அவர்கள் பொதுவாக ஒத்த கருத்தைக் கொண்டவர்களாக உள்ளனர்.

சமண பாரம்பரியம் பதினான்கு பூர்வங்கள் மற்றும் பதினோரு அங்கங்கள் (அக்காரா, சூத்ரக்ரதா. ஸ்தானா போன்றவை) ஆகிய இரண்டுவகை புனித நூல்கள் ஆதி முதலில் இருந்ததாகக் கூறுகிறது. முதலில் கூறப்பட்ட நூல்கள் எல்லாம் மறைந்துவிட்டன. சமண திருமுறைகளின் பழைய பகுதிகளைப் பின் சொல்லப்பட்ட நூல்கள் பிரதிபலிக்கின்றன. இவை சுவேதாம்பரர்களால் மட்டுமே உண்மையானவையென்று நம்பப்படுகின்றன. இவையும் மறைந்து விட்டதாகவும் இப்போது இருப்பது அவுற்றின் பெயர்களில் உள்ள போலி யான நூல்கள் என்றும் திகம்பரர்கள் கருதுகிறார்கள்.

ஆரம்பகால சமண ஆசிரியர்கள் மற்றும் நூலாசிரியர்களில் ஒருவர், யாராலும் மறுத்துப் பேசமுடியாத அளவு பெருமை வாய்ந்தவராகிய குண்ட குண்டா என்பவராவர். அவருடைய நூல்கள் யாவும் யிராக்ருத மொழியில் உள்ளன. அவருடைய பெருமை வாய்ந்த நூல்களில் ஒன்று பங்காஸ்திகாய சாரம் என்பதாகும். அவர் எப்போது வாழ்ந்தார் என்பது தெரியவில்லை. இதேபோன்று, பழைய ஆசிரியர்களில் மற்றொருவரான பத்ரபாகு என்பவர் வாழ்ந்த காலமும் தெரியவில்லை. சமண மூலநூல்கள் பலவற்றுக்கு அவர் விளக்கங்கள் எழுதியிருப்பதாகக் கூறப்படுகிறது. இப்படிப்பட்ட விளக்க நூல் களில் ஒன்றான தசவைகாரிக நிர்யுக்தி எனும் நூலில் வாதம் என்பதன் கொள்கைகளில் சிலவற்றை விவாதிக்கிறார். பத்து மடிப்பு கொண்ட ஒரு தத்துவ முறையை அவர் உருவாக்கினார். சியத்வாதம் எனும் சமண கோட் பாட்டின் ஆதிமூலவர் என்றும் அவர் போற்றப்படுகிறார்.

சமண தத்துவத்தின் முறைப்படுத்தப்பட்ட கருத்துகளுடைய மூலவேர் இரு பிரிவினரும் மதித்துப்போற்றும் உமாஸ்வதி அல்லது உமாஸ்வமி என்பவர் இயற்றியுள்ள தத்துவார்த்திகாம சூத்திரமாகும். அவர் நியக்ரோதிகா எனும் நகரத்தில் பிறந்தவர். அவர் உலகத்தைத் துறந்த பின்பு பாடலிபுத்திரத் தில் இந்த நூலை எழுதினார். சிலர் அவர் கி.பி. 135-219ல் வாழ்ந்தவர் என்றும், சிலர் அவர் கி.பி. 1-85ல் வாழ்ந்தவர் என்றும் கருதுகிறார்கள். இந்த நூல் பத்து பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு மொத்தம் 350 சூத்திரங்களைக் கொண்டுள்ளது. அதன் பின் வந்த சமண தத்துவ விளக்கங்களெல்லாம், இந்த நூலை



படிப்பகம்

www.padippakam.com

அடிப்படையாகக் கொண்டவையேயாகும். அகலங்கா உட்பட பல பெயர் பெற்ற சமண அறிஞர்கள் இந்நூலுக்கு விளக்கங்களை அளித்துள்ளார்கள். அந்நூல் முக்கியமாக தத்துவத்தைப்பற்றி கூறினாலும் சமண நிலைபாட்டி லிருந்து உளவியல், மதவியல், வாணவியல் போன்றவை பற்றியும் கூறப் பட்டிருப்பதால் அது பொதுவாக இந்திய சிந்தனையின் பழைய வரலாற்றை அறியக்கூடிய முக்கிய நூலாகக் கருதப்படுகிறது.

கி.பி. 5ம் நூற்றாண்டுக்குப் பிறகு வாதவியல் பற்றிய கல்வியில், மிகுந்த அக்கறையோடும், ஆர்வத்தோடும் ஈடுபட்ட பல சமண அறிஞர்களை நாம் காண்கிறோம். சமணவாதவியலுக்கு அடிப்படை அமைத்துக்கொடுத்தவர் சித்தசேனதிவாகரர் (கி.பி. 480-550) ஆகும். அவர் எழுதியுள்ள நியாயாவதாரம் எனும் நூல் சமஸ்கிருத மொழியில் 32 சிறிய பத்திகளைக் கொண்டதாகும். அவர் எழுதியுள்ள மற்றும் இரண்டு முக்கிய நூல்களாவன (1) மேலே குறிப்பிட்ட உமாஸ்வதியின் நூலுக்கான விளக்கங்கள். (2) பொதுவான தத்து வத்தைப்பற்றியும் வாதவியலின் கொள்கைகள் பற்றியும் பிராகிருத மொழியில் எழுதப்பட்டுள்ள சம்மதி தர்க்க சாத்திரம் எனும் நூல். இவர் உச்சயினி அரசராகிய விக்கிரமாதித்தியர் காலத்தவர் என்றும், அவ்வரசரின் சபையிலிருந்தவர் என்றும் நம்பப்படுகிறார்.

சாமந்த பத்ரர்(கி.பி. 600) தென்னிந்தியாவின் திகம்பர பிரிவைச் சேர்ந்தவர். இவர் மேலே குறிப்பிட்ட உமாஸ்வதியின் நூலுக்கு விளக்க நூல் எழுதி பெயர் பெற்றவர். அந்நூல் ஆப்த மீமாம்சம் எனும் ஒரு முன்னுரைப் பகுதியைப் பெற்றிருக்கிறது. அப்பகுதி அவர் காலத்தில் நிலவிய அத்துவதவாதம் உட்பட தத்துவப்பள்ளிகளைப் பற்றிய விமர்சனத்தோடு வாதவியல் கொள்கைகள் பற்றிய விவாதங்களை நிறைய பெற்றிருக்கிறது. வாகஸ்பதி மிஸ்ரா அவரு டைய பாமதி என்ற நூலில் இவரைப்பற்றி குறிப்பிடுகிறார். இவற்றைத் தவிர வேறு இரண்டு நூல்களும் இவர் எழுதியுள்ளார்.

சமண வாதவியல் வாதிகளில் மிகமுக்கியமானவர் ராஷ்டிரகூட அரசர் சுபதுங்கா காலத்தில் வாழ்ந்தவராகிய அகலங்கா (கி.பி. 750) என்பவராக இருக் கலாம். பல நூல்கள் அவரால் இயற்றப்பட்டன என்று சொல்லப்படுகிறது. அவற்றில் சிறப்பான இரண்டு நூல்கள் தத்துவார்த்த ராசவார்த்திகம் (உமாஸ்வதியின் நூலின் விளக்கம்) மற்றும் அஸ்ட சரி (ஆப்த. மீமாம்சம் என்பதன் மீதான விளக்கம்) என்பவையாகும். பௌத்தர்களை வன்மையாக விமர்சனம் செய்து அவர் சமண நிலைபாட்டை உறுதிப்படுத்தினார்.



படிப்பகம்

www.padippakam.com

அகலங்கா கருத்துக்களை மீமாம்ச தத்துவ வாதியாகிய குமாரிலர் எதிர்க் கிறார். ஆனால் அவர் கருத்துக்களைப் பாடலிபுத்திர திகம்பரவாதவியல் வாதி யான வித்யானந்தா (கி.பி. 800) ஆதரித்து நிலை நிறுத்துகிறார். அஸ்தசாகஸ்ரி, தத்துவார்த்த ஸ்லோக வார்த்திகா மற்றும் ஆப்த பரிக்சா போன்ற நூல்களும் அகலங்கா எழுதியுள்ள நூல்களில் அடங்கும்.

அகலங்கா எழுதியுள்ள நியாய வினிஸ்கயா எனும் நூலை அடிப்படை யாகக் கொண்டு சமணவாதவியல் பற்றி பரீக்சமுக சூத்திரம் என்ற பெயரில் மாணிக்க நந்தி என்பவர் ஒரு நல்ல நூலை இயற்றியுள்ளார். இவர் எழுதியுள்ள இந்த நூலின் மேல் பிரபசந்திரா (கி.பி. 825) என்பவர் பிரமேய கமல மார்த் தாண்டம் என்ற புகழ்பெற்ற விளக்க நூலை இயற்றியுள்ளார். மாணிக்க நந்தி இயற்றியுள்ள மற்றொரு நூல் அகலங்காவின் லசியஸ்திரயம் என்னும் நூலின் விளக்க நூலான நியாய குமுத சந்திரம் ஆகும். இந்த நூல்கள் பெரும்பாலும் அவருடைய் சொந்த ஆராய்ச்சியாக இருப்பதோடு இவற்றில் அவர் சமண தத்துவப்பள்ளியிலிருந்து வேறாக இருக்கும் பள்ளிகளின் பலதரப்பட்ட கொள்கைகளை மிக விரிவாகவே விவாதித்து மறுக்கிறார்.

சுவேதாம்பர பிரிவைச் சேர்ந்த சமண தத்துவ வாதிகளில் அரிபத்திரரும் (8ஆம் நூற்றாண்டு), ஏம சந்திரரும் (கி.பி.1088-1172) குறிப்பிடப்பட வேண்டிய வர்களாவர். அரிபத்திரர், சத்தர்சன சமுச்சயா எனும் நூலின் ஆசிரியராவார். ஏமசந்திரர் தண்டுகா(இது அகமதாபாத்தில் உள்ளது) என்ற ஊரில் பிறந்தவர். செயசிம்ம அரசர் காலத்தவர். குஜராத்தின் மகாராசா குமாரபாலர் (கமார் சம்வத ஆண்டுகள் 1199-1299) என்பவரின் குரு இவராக இருக்கலாம். அவர்தான் சமண நூலாசிரியர்களில் கூடுமானவரை எல்லாவற்றையும் உள்ளடக்கிய செழுமையான நூல்களை இயற்றியவர் ஆவார். ஒவ்வொரு துறையிலும் தனித்தன்மைவாய்ந்த கவிஞரும், இலக்கண நூலாசிரியரும் , வாதவியல் வாதியும் ஆவார் அவர்.

பிரபஞ்சத்திலுள்ள பொருள்களைச் சமணர்கள் ஜீவன் அற்றது (அஜீவா), ஜீவன் உள்ளது (ஜீவா) என்றும் இரண்டு முக்கிய வகைகளின் கீழ் விளக்கு கிறார்கள். ஜீவன் அற்றது நான்காகும். அவையாவன தர்மம், அதர்மம், ஆகாசம் மற்றும் புத்கலம். ஜீவனைப்போலவே அவை யாவும் பொருள்களே.

தர்மம் என்பதும், அதர்மம் என்பதும் இங்கே வேறு பொருள்படுகின்றன. மற்ற இந்திய தத்துவத்துறைகளில் பயன்படுத்தப்படும் வழக்கமான பொருளில் இவை இங்கே பயன்படுத்தப்படவில்லை. தர்மமும் அதர்மமும்



படிப்பகம்

www.padippakam.com

எங்கும் நிரம்பியுள்ளவை. பிரபஞ்சம் முழுவதும், எங்கும் சிறு இடைவெளி கூட விட்டுவைக்காமல் எள்ளுக்குள் எண்ணெய் இருப்பதைப்போல இவை நிறைந்திருக்கின்றன. அசைவிற்கும் அசைவற்ற நிலைக்கும் இவை இரண்டும் முறையே பொது நிபந்தனைகளாக உள்ளன. நீந்தும் மீனுக்கு நீர் எப்படியோ அதைப்போல அசைவிற்குக் காரணமாக தர்மம் இருக்கிறது. அது ஒரு செயலற்ற கூறு. இயங்கும் ஒன்றல்ல நீர். செயலற்றிருக்கும் மீனை நீந்தும்படி வற்புறுத்தவில்லை. ஆனால் ஒரு மீன் நீந்த விரும்பினால் நீரின்றி அது அம்மாதிரி செய்ய முடியாது. அதேபோன்று ஜீவனோ பொருளோ தர்மத்தினால் இயக்கப்படவில்லை. ஆனால் தர்மத்தின் உதவியின்றி அவை இயங்க இயலாது. அசைவற்ற நிலைக்கும் அதர்மம் இதேபோலத்தான் செயல்படுகிறது.

ஆகாசம் அல்லது வெளி என்பது பிரபஞ்சம் (லோகா) முழுவதும் மற்றும் விடுதலைபெற்ற ஜீவன்களுடைய மேம்பட்ட தனித்த இடத்திலும் (அலோகா) பரவியிருந்தும் நுண்ணிய பொருளாகும். மற்ற எல்லா பொருள்களின் வாழ்வுக்கு இன்றியமையாத தேவைகளில் இது ஒன்றாகும். அது வெறும் எதிர் மறையானதோ, மூடப்பெறாததோ, தடுப்பில்லாததோ அல்லது வெறும் காலியானதோ அல்ல. மற்ற பொருள்கள் அதனுள் ஊடுருவ உதவும் உடன்பாடான ஒரு பொருள் ஆகும்.

புத்கலம் என்பது பொதுவாக பொருளைக் குறிக்கும். பொருள் என்பதில் அணுவும் அடங்கும். ஏனென்றால் சமணர்கள் அணுவியல்வாதிகள். சொல்லிணக்கப்படி (வேர்ச்சொல்லான புர் என்பதற்கு நிரப்பு என்றும் கல் என்பதற்கு கரைத்துவிடு என்றும்) இச்சொல் எது நிரப்பப்படுமோ எது கரைக்கப்படுமோ அது என்று பொருள்படும், அதாவது சேர்க்கப்படவும், பிரிக்கப்படவும் கூடிய மாற்றத்துக்கு உட்பட்டதாகும். பொருள் பல்வேறு வடிவங்களைக் கொண்டிருக்கலாம். உருண்டை, முக்கோணம், நீள் சதுரம் போன்று. அதன் தன்மை நான்கு வகைப்பட்ட நிறம், சுவை, நாற்றம் மற்றும் தொடு உணர்வு. பொருள் முடிவற்ற பல்வேறு வகைப்பட்டதாக இருந்தாலும் அதை இரு பெரிய வகைபாட்டுக்குள் அடக்கலாம். அவை அணுக்கள் (அணு) மற்றும் கூட்டுப்பொருள் (ஸ்கந்தா) என்பவையாகும். அணு என்பது ஒரு தனித்து நிற்கும் பொருள் ஆகும். பிரிக்க முடியாதது ஆகும். கூட்டுப் பொருள் என்பது பல அணுக்கள் சேர்ந்த பொருள் ஆகும். அதைக் கையால் எடுக்கலாம், எறியலாம் மற்றும் இதைப்போன்று பலவிதமாகக் கையாளலாம். பிரிப்பதன் மூலமோ(பேதம்) அல்லது சேர்ப்பதன் மூலமோ (சங்கதம்) அல்லது



படிப்பகம்

www.padippakam.com

இவ்விரண்டு செய்கைகளின் மூலமோ அதை உருவாக்கலாம். மூலக்கூறுகள் என்று நான்கு மூலக்கூறுகள் உள்ளன. அவை மண், நீர், தீ, காற்று. இவை ஒவ்வொன்றும் இறுதியில் பல அணுக்களாலானவை. ஆனால் அவ்வணுக்கள் யாவும் தன்மையில் ஒன்றைப் போன்றே இருக்கும்.

ஜீவனும் ஜீவனற்றதன் நான்கு வடிவங்களும் அஸ்திகாயா என்றும் அழைக்கப்படும். அஸ்தி (இருக்கிறது) எனும் சொல்லை காலம் என்பதன் மூன்று பகுதிகளோடு இயைபுபடுத்தும்போது அவற்றுக்குப் பொருத்திப் பார்க்கலாம். காயா (உடல்) எனப்படும் சொல்லையும் அவற்றோடு பொருத்திப் பார்க்க இயலும். ஏனென்றால் அவை பல்வேறுபட்ட இடங்களைப் பிடித்துக் கொண்டிருப்பதால்.

காலம் அல்லது நேரம் என்பதும் ஒரு பொருளே. அதன் முக்கிய செயல், பொருள்கள் மாற்ற மடைவதற்கும். வேறு உருவமடைவதற்கும் உதவுவதாகும். காண்பதற்கு அரிதான மாற்றங்கள் எப்போதும் ஒவ்வொரு நொடியும் எல்லாப் பொருள்களிலும் அவற்றின் இயல்பினாலேயே நடந்துகொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட நுண்ணிய மாற்றங்கள் நிகழ்வதற்கான வெளிக்காரணம் காலம் எனும் பொருள்தான். அப்பொருள் பிரபஞ்ச தூரத்துக்கும் அதாவது பிர பஞ்சம் முழுதும் பரவியிருக்கிறது. பொருள்களில் ஏற்படும் நுண்ணிய மாற்றங்களின் மூலம் காலம் என்று ஒன்று இருக்கிறது என்பது உறுதியாகிறது. தீயின் உதவியால் சிறிதுகால இடைவெளியில் அரிசி, சோறாக சமைக்கப் பட்டுவிடுகிறது. ஆனால் அந்த அரிசி ஒரேயடியாகவோ அல்லது திடீ ரென்றோ சமைக்கப்பட்டுவிடவில்லை. ஒவ்வொரு நொடியும் மெதுவாகவும் கவனிக்கமுடியாத அளவும் மாற்றங்கள் நிகழ்ந்து கடைசியில் (அரிசியின் பருமன், மென்மை ஆகியவற்றிற்கேற்ப) அந்த பெரிய மாற்றம் வெளிப் படையாக அறியப்படுகிறது. தொடர்ந்து நுண்ணிய மாற்றம் நடைபெற வில்லையானால் பெரிய மாற்றம் நடைபெறாது. இப்படிப்பட்ட மாற்றங் களுக்கு காலம் என்பது, அது தானாக இயங்குவதில்லையென்றாலும்கூட வெளிக்காரணமாகவும், துணைக்காரணமாகவும் அமைகிறது.

சமணர்களுடைய உயிர் அல்லது ஜீவன் எனும் கருத்து மற்ற இந்திய தத்துவத்துறைகளினால் கூறப்படும் ஆத்மா அல்லது புருஷம் என்பவற் றோடு ஒத்துப்போவதாக உள்ளது. அறிவு என்பது அதன் சாராம்சமாக உள்ளது. அதனுடைய தூய்மையான நிலையில் முடிவற்ற அறிதல் அல்லது தோற்றம், முடிவற்ற அறிவு, முடிவற்ற பேரின்பம், முடிவற்ற சக்தி ஆகிய



படிப்பகம்

www.padippakam.com
வற்றை அது பெற்றிருக்கின்றது. அது முழு நிறைவானது. உயிர்கள் எண்ணிக் கையில் அளவிழந்தன. ஆனால் உயிர் அல்லது ஜீவன் என்பதைப்பற்றி சமணர்கள் ஒரு தனியான நிலைபாட்டைக் கொண்டிருக்கிறார்கள். தற்காலிக மாக அது குடியிருக்கும் உடலின் அளவுக்கு ஏற்ப சுருங்கியோ அல்லது விரிந்தோ அது இருக்கும் என்று அவர்கள் எண்ணுகிறார்கள். ஒரு அறையில் வைக்கப்பட்டிருக்கும் விளக்கு அந்த அறை பெரியதோ அல்லது சிறியதோ அது வைக்கப்பட்டிருக்கும் இடத்திற்கு ஏற்றாற்போல எப்படி அவ்வறை முழுவதும் ஒளியைக் கொடுக்கின்றதோ அதைப்போன்றது. யானைக்குள்ளே அது பெரியதாகவும், எறும்பிற்குள்ளே சிறியதாகவும் அது இருக்கும். அதுமட்டுமல்லாது அது உடல் முழுதும் பரவியிருக்கும். தலைமயிரிலிருந்து பாதத்திலுள்ள நகம் வரை எங்கு உணர்வு உண்டானாலும் அவ்வுணர்வை அது உடனே அறிந்து கொள்ளும்.

சமணர்கள் கர்மம் என்பதைப்பற்றிய கருத்தோட்டத்திலும் ஒரு தனித் தன்மையான கொள்கையைக் கொண்டிருக்கிறார்கள். மற்ற இந்திய தத்துவத் துறைகளில் கர்மம் என்பது ஒரு தனி மனிதனால் இயற்றப்படும் நல்லதோ கெட்டதோவான செயல்களும் அதற்குத் தகுந்தாற்போல் அவன் பக்கத்தில் சேரும் நல்லதோ கெட்டதோ ஆன விளைவுகளும் ஆகும். ஆனால் இங்கு சமணக் கொள்கையிலோ கர்மம் என்பது, அழுக்கு ஒரு ஒட்டும்பொருளை எப்படி பற்றிக்கொள்கிறதோ, அப்படி ஒரு உயிரைப்பற்றிக்கொள்ளும் பொருள் ஆகும். உயிரைக் கட்டுப்படுத்தும் பொருளின் நுண்ணிய துகள்கள் அவை என்பது இக்கொள்கையின் பொருளாகும்.

நாம் இப்போது உயிரைப்பற்றிக்கொள்ளும் கட்டுக்கள் மற்றும் அவற்றி லிருந்து விடுதலை ஆகியவை பற்றிய சமணக் கருத்தோட்டத்தைச் சுருக்க மாகப் பார்க்கலாம். உயிர் மாசுபடுதல் கீழ்க்கண்ட முறைப்படி நிகழ்கிறது. கர்மமாக மாறக்கூடிய நுண்ணிய பொருள் உயிரினுள் ஊற்றப்படுகிறது. இது உட்பாய்தல் அல்லது உட்புகுதல் (அஸ்ரவா) எனப்படும். சாதாரண நிலைமை களில் ஒரு உயிர் ஆசைகளுக்கு (காஸ்யா) இடங்கொடுக்கிறது. அவ்வாசைகள் பாகு நிலையிலுள்ள கூழ்மாதிரி இருந்து உயிரைப் பற்ற வரும் கர்மமாக மாறக் கூடிய நுண்ணிய பொருள்களை உயிரோடு தங்கவைத்துவிடுகின்றன. உயிரால் பற்றப்பட்ட இப்படிப்பட்ட கர்மமாக மாறக்கூடிய நுண்பொருள்கள் நுழையும்போது, உயிருடன் வேதியல் கூட்டு ஏற்படுத்திக்கொள்கின்றன. இக்கூட்டு, கர்மம் எனப்படும் பொருளோடு ஏற்படும் கட்டுக்குள் (பந்தம்) எனப்படும். உயிரால் கட்டிக்கொள்ளப்பட்ட அல்லது வேதியல் கூட்டுப்பெற்ற.



படிப்பகம்

www.padippakam.com

கர்மமாக மாறக்கூடிய நுண்பொருள். எட்டுவிதமான கர்மங்களாக மாறுகின்றன. இந்த நுண்பொருள் ஒரு நுண்ணிய உடலாக தன்னை உருவாக்கிக் கொண்டு உயிரை அதனுடைய இடப்பெயர்ச்சிகளிலும் எதிர்வரும் பிறவிகளிலும் ஒட்டிக்கொண்டு அவ்வுயிரினுடைய இன்ப துன்பங்களை நிர்ணயிக்கிறது. இவ்விதமாக விவரிக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட கர்மம் அதன் விளைவுகளை ஏற்படுத்திய பிறகு உயிரிலிருந்து அது தள்ளப்படுகிறது. அல்லது நீக்கப்படுகிறது. இப்படி நீங்கும் குறை 'நிர்ஜா' எனப்படும். ஒரு தடங்கலுமில்லாமல் இம்முறை தொடர்ந்து நிகழும்போது இறுதியில் எல்லா கர்மப் பொருள்களும் உயிரிலிருந்து நீங்கப்பெறும். விடுதலைக்கு முன் தன்னை அழுத்திக் கொண்டிருந்த கர்மத்தின் பளுவிலிருந்து (கர்மம் பொருளாகும்; பொருள் என்பது கனமானது) விடுதலை பெற்ற உயிர், பிரபஞ்சத்தின் உச்சிக்கு நேர்க் கோட்டில் சென்று விடுதலைபெற்ற உயிர்கள் வாழும் இடத்தை அடைகிறது.

'அனேகாந்தவாதம்' அல்லது பன்மைத்தன்மை எனும் கோட்பாடு சிறப்பாக சமணர்களையே சார்ந்தது. இந்திய தத்துவத்துறைகளின் பொதுக்கோட்பாடுகளுக்கு, சமண அறிஞர்களின் இக்கோட்பாடு சிறப்பான பங்களிப்பு என்று கருதப்படுகிறது. தற்காலத்தில் அறியப்பட்டு வரும் அறிவியல் கொள்கையின் விதைக்கருத்துகள் சமணருடைய கோட்பாட்டில் இருப்பதாக அறிஞர்கள் அக்கோட்பாட்டை மதிக்கிறார்கள். உதாரணமாக ஒரு அறிஞர் 1500 அல்லது 2500 ஆண்டுகளுக்கு முன் தரம் பிரித்து அறியக்கூடிய உருவங்களின் புள்ளி விவரக் கணக்கெடுப்புக்கு இக்கோட்பாடு ஒரு வாதவியல் பின்னணியைத் தந்திருக்கலாம் என எண்ணத்தோன்றுகிறது என்கிறார். சில அறிஞர்கள் மொத்த இயற்பொருள் ஆற்றல்வாதம் என்பதற்கும் இக்கோட்பாட்டின் உட்கருத்துக்கும் இடையே உள்ள ஒருவிதமான அடிப்படை ஒற்றுமையைக் காண முயற்சிக்கிறார்கள்.

சுருக்கமாக, சமணர்களுடைய நிலைபாடு இதுதான். மற்ற எல்லா தத்துவத் துறைகளும் உண்மையில் இயல்பை விவரிக்க முயற்சிக்கையில் ஒரு குறிப்பிட்ட வழியை மட்டும் கைக்கொள்கிறார்கள். அவர்கள் அவர்களுடையது மட்டுமே உண்மையான வழி என்றும் மற்றவர்களுடைய நிலைபாடுகள் யாவும் வாதவியல்படி நிலைகொள்ளவில்லையென்றும், ஆகவே அவை யாவும் தள்ளப்பட வேண்டுமென்றும் உறுதியான நம்பிக்கையோடு முன் வைக்கிறார்கள். அவ்வாறின்றி சமணர்கள், ஒரே வழியைப் பற்றி நிற்பது முறையற்றது என்கிறார்கள். பிரபஞ்சம் பலதரப்பட்டவற்றைக் கொண்ட பன்மை வகைப்பட்டது. தனிப்பட்ட ஒரு பொருள்கூட எண்ணற்ற குணங்களைக்



படிப்பகம்

www.padippakam.com

கொண்டதாயுள்ளது. ஒரே வழியில் ஒரு பொருளை விளக்கி வகைப்படுத்த இயலாது. பலவிதமான நோக்கில் பொருள்கள் நோக்கப்படலாம். ஒவ்வொரு நோக்கும் வெவ்வேறுவிதமான முடிவைக் கொடுக்கலாம். ஆனால் ஒவ் வொன்றும் உண்மையின் ஒரு பாகத்தை வெளிப்படுத்தும். ஒரேயடியாக இதுதான் வழி என்று தனித்துக்கூறுவதும் அல்லது ஒரேயடியாக இதுவல்ல வழி என்று கூறுவதும் தவறாகவே முடியும். ஒவ்வொரு கூற்றும் சரியாகப் பார்த்தால் நிபந்தனையோடு கூடிய நிலைக்கு உட்பட்டதே ஆகும். உறுதிப் படுத்துவதோ அல்லது அதற்கு எதிராக மறுப்பதோ ஒரு குறிப்பிட்ட நிபந்தனையோடு கூடிய நிலைமையில்தான் உண்மையாக இருக்கமுடியும். ஆகவே அக்கூற்று முற்றும் உறுதியாகக் கூறப்படுவதாகவோ அல்லது முற்றும் மறுப்புக்கூறும் ஒன்றாகவோ இருக்க இயலாது.

இப்படியாக ஒரு பொருளைப்பற்றி நிர்ணயித்துக்கூற இயலும் ஏழு வழிகள் இருப்பதாகவும் இதற்கு அதிகமாகவோ குறைவாகவோ இருக்க இயலா தென்றும் சமணர்கள் வாதிடுகிறார்கள். ஒரு குறிப்பிட்ட கருத்து நிபந்த னைக்குட்பட்டதே என்பதைக் குறிக்கும் வகையில் 'இருக்கலாம்', 'எப்படியோ' என்ற பொருள்களைக்கொண்ட 'ஸ்யத்' எனப்படும் சொல் ஒவ்வொரு கருத் திலும் சேர்த்துக்கொள்ளப்படுகிறது. அந்த ஏழு கருத்துக்களாவன: (1) எப்படியோ அது நிலை பெற்றிருக்கிறது (ஸ்யத் அஸ்தி) (2) எப்படியோ அது நிலைபேறில்லாமலிருக்கிறது (ஸ்யத் நாஸ்தி) (3) எப்படியோ அது நிலைபெற்றிருப்பதோடு நிலைபேறில்லாமலும் இருக்கிறது(ஸ்யத் அஸ்திகா நாஸ்திகா) (4) எப்படியோ விளக்கமுடியாததாக இருக்கிறது (ஸ்யத் அவக் தவ்யம்) (5) எப்படியோ அது நிலைபெற்றிருக்கிறது. விளக்கமுடியாததாகவும் இருக்கிறது (ஸ்யத் அஸ்திகா அவக்தவ்யம்) (6) எப்படியோ அது நிலை பேறில்லாமலிருக்கிறதுடன் விளக்கமுடியாததாகவும் இருக்கிறது(ஸ்யத் நாஸ்தி கா அவக்தவ்யம்) (7) எப்படியோ அது நிலை பெற்றும் இருக்கிறது. நிலைபேறில்லாமலிருப்பதோடு விளக்க முடியாததாகவும் இருக்கிறது. (ஸ்யத் அஸ்தி கா நாஸ்தி கா அவக்தவ்யம்). இக்கோட்பாடு ஸ்யத் வாதம் அல்லது சப்தபங்கி நியாயா என்றும் அழைக்கப்படுகிறது.

எடுத்துக்காட்டாக தரையின் மேலுள்ள ஒரு சாடியைப் பார்த்து அந்த சாடி நிலைபெற்றிருக்கிறது என்று ஒருவர்கூறலாம். அப்படி கூறுவதன் மூலம் அந்த சாடியின் நிலை வேறு நிபந்தனையற்ற முறையில் அறுதியிட்டுக் கூறப்பட்ட தாகப் பொருள்படாது. அது ஒரு மண் பொருளாக மட்டுமே (பிருதிவி) நிலை பெற்றிருக்கிறது. ஆனால் அது ஒரு நீர்ப்பொருளாக (அப்பு) நிலைபெற்றிருக்க



படிப்பகம்

www.padippakam.com

வில்லை. அது வெளியினுள் ஒரு குறிப்பிட்ட இடத்தில்தான் நிலைபெற்றுள்ளது; வெளியின் மற்ற இடங்களில் அது நிலைபெற்றிருக்கவில்லை. காலத்தின் தற்போதைய வேளையில்தான் அது நிலைபெற்றிருக்கிறது. ஆனால் கடந்த கால வேளையிலோ, வருங்கால வேளையிலோ அது நிலைபெற்றிருக்க வில்லை. (அந்த சாடி சூளையில் வேகவைக்கப்படாமலிருந்தால்) அது கருப்பாக நிலைபெற்றிருக்கிறது. ஆகவே அது சிகப்பாக நிலைபெற்றிருக்க வில்லை. ஆகவே சாடி நிலைபெற்றிருக்கிறது என்று கூறப்படும்போதே நிலை பெற்றிருக்கவில்லையென்று கூறப்படவும் முடியும். ஆனால் ஒரே சாடி நிலை பேற்றையும், நிலைபேறு அற்ற நிலைமையையும் எப்படி பெற்றிருக்க முடியும்? அதனால் அது விளக்கமுடியாததாக இருக்கிறது என்று கூறலாம். இதேபோன்று மற்ற பார்வையில் மற்ற வேற்று வழிகளில் சாடியின் இருப்பைப் பற்றி உறுதிப்படுத்திக் கூறவும் முடியும்.



படிப்பகம்

www.padippakam.com

# உலகமயமாக்கலும் கலாச்சாரமும்

ஹேமா. S.

இன்றைய உலகில் மிக அதிகமாகப் பேசப்படும் விஷயம் "உலகமயமாதல்" தொலைத் தொடர்பு சாதனங்களும், போக்குவரத்து வசதிகளும் பெருகிவிட்ட நிலையில் உலகம் முழுவதுமே ஒரு கிராமமாகிவிட்டது என்று திரும்பத் திரும்பப் பேசப்படுகிறது. உலகமயமாக்கல் என்றால் என்ன என்பதைப் பற்றி ஒருமித்த கருத்து காணப்படவில்லை. ஆனால் பொதுவாகப் பொருளாதாரம், அரசியல் போன்ற விஷயங்களைப் பொறுத்தவரையில் "உலகமயமாதல்" என்பது உலக நாடுகள் அனைத்தையும் ஒன்றோடொன்று பிணைக்கும் ஒரு சிக்கலான இணைப்பு" என்று அமியா குமார் பாக்சி என்ற சமூக விஞ்ஞானி குறிப்பிடுகிறார். இந்த இணைப்பின் அடிப்படை உலகின் பல நாடுகளிடையேயும் வர்த்தகம், நிதிபோன்ற விஷயங்களிலும் விஞ்ஞானம், தொழில்நுட்பம் போன்ற விஷயங்களிலும் தங்கள் அனுபவங்களை, உலக நாடுகள் தடையின்றித் தமக்கிடையே பரிமாறிக்கொள்ளும் சூழ்நிலையை ஏற்படுத்திக் கொள்ளுதல் என்பதுதான்.

மேற்கூறிய அடிப்படையில் பார்த்தால் உலகமயமாதல் என்பது ஒரு நல்ல விஷயம்தான். ஆனால் மேற்கூறிய தங்குதடையற்ற பரிமாற்றங்கள் இன்றைய சூழலில் சாத்தியமா? இன்றைய சூழலில் உலகமயமாக்கல் எந்த அடிப்படையில் நடைபெற்று வருகிறது என்பது சிந்திக்க வேண்டிய விஷயமாகும்.

உலக நாடுகள் அனைத்திலும் ஒரே மாதிரியான பொருளாதார வளர்ச்சி ஏற்படுவதில்லை. முதலாளித்துவ மேற்கு நாடுகள் பொருளாதார வளர்ச்சி பெற்றவை. வளரும் ஆசிய நாடுகள் பெரும்பாலும் அத்தகைய வளர்ச்சி பெறாதவை. இத்தகைய அசமத்துவ வளர்ச்சி என்பதைப் பொருளாதார ரீதியாக வளர்ந்த நாடுகளுக்கிடையேகூட பார்க்கலாம். உலக நாடுகளை எடுத்துக்கொண்டாலும் இத்தகைய சமத்துவ வளர்ச்சியைப் பார்க்கலாம். "அசமத்துவ வளர்ச்சி என்பது முதலாளித்துவத்திற்கே உரிய குணம்" ஏறக்குறைய உலக நாடுகள் அனைத்தும் முதலாளித்துவத்தின் வீச்சால் பாதிக்கப்படும்போது இத்தகைய அசமத்துவ வளர்ச்சியும் இயல்பு.



படிப்பகம்

www.padippakam.com

இவ்வாறு நாடுகளிடையே ஏற்றத்தாழ்வுகள் நிலவும்போது, "தங்குதடையற்ற முறையில் எல்லா நாடுகளும் தமக்கிடையே பல விஷயங்களைப் பரிமாறிக்கொள்வது" என்பது சாத்தியமில்லை. பொருளாதார வளர்ச்சியடைந்த மேற்கு நாடுகள் வேண்டுமானால் ஓரளவு உலகமயமாதல் என்ற நிலையை எட்டியிருக்கிறார்கள் என்று கருதலாம். ஆனால் வளர்ந்துவரும் நாடுகளைப் பொறுத்தவரையில் இவ்வாறு பொருளாதார ரீதியாகவும், விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி விபரங்களைப் பரிமாறிக்கொள்வது என்ற அடிப்படையிலும், மேற்கூறிய பரிமாற்றம் என்பது சாத்தியமில்லை. இது அனுபவத்தில் கண்ட உண்மை. வளர்ந்த நாடுகள், வளரும் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்குக் கடுமையான நிபந்தனைகளை விதிக்கின்றன. வளரும் நாடுகளிலிருந்து மக்கள் தங்கள் நாடுகளுக்கு வருவதற்குப் பல்வேறு தடைகளையும் விதிக்கின்றன. புதிய தொழில்நுட்பங்களையும், அறிவியல் கண்டுபிடிப்புகளையும் வளரும் நாடுகளோடு, வளர்ச்சியடைந்த நாடுகள் பகிர்ந்துகொள்ள மறுக்கின்றன. இந்த நிலையில், "உலகமயமாக்கல்" என்பது வளர்ந்த நாடுகளுக்குச் சாதகமாகத்தான் பயன்படும். வளரும் நாடுகள் கடுமையான பாதிப்புக்குள்ளாகும். இந்த நிலையைக் குறிப்பிடும்போது வரலாற்று அறிஞர் கே.என்.பணிக்கர் "வளரும் நாடுகளில் பெரும்பாலானவை காலனி ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றவை. இந்த நாடுகளில் இன்னமும் பொருளாதாரமும், சமூகமும், அரைக்காலனி ஆதிக்கப் போக்கிலிருந்தும், நிலப்பிரபுத்துவப் போக்குகளிலிருந்தும் முழுமையாக விடுதலை பெறவில்லை. இந்த நிலையில் உலகமயமாதல் என்ற பெயரில் உலகப் பொருளாதாரத்தோடு இணைவது என்பது மீண்டும் இந்நாடுகளை, வளர்ந்த நாடுகளின் காலனிகளாகத்தான் மாற்றும்" என்கிறார்.

1950களிலிருந்து உலகை அச்சுறுத்திய "பனிப்போரின்" கடுமை குறையத் தொடங்கியதும், இதையடுத்து சோவியத் யூனியன் சிதறியதும், முதலாளித்துவ நாடுகளுக்குச் சாதகமான சூழலை ஏற்படுத்தின. உலக முதலாளித்து சக்திகள், தங்கள் ஆதிக்கத்தை விரிவுபடுத்தப் புதிய உத்திகளைக் கையாளத் தொடங்கின. இதன் விளைவுதான் உலகமயமாக்கல் என்ற புதிய மந்திரம். "உலக முதலாளித்துவம் நவீன உத்திகளைப் பயன்படுத்திப் புதிய முறையில் காலனிகளை உருவாக்கிக்கொள்ளும் முயற்சியின் கவர்ச்சிகரமான புதிய பெயர் உலகமயமாக்கல்"

இந்தியா இத்தகைய முயற்சிகளைத் துவக்கத்திலிருந்தே எதிர்த்திருக்க முடியும். நாடு விடுதலை பெற்றது முதல் "சுயமுயற்சியால், சொந்தக்காலில் நிற்கும் உரிமை பெற்ற ஒரு பொருளாதார வளர்ச்சி" - என்பது இந்தியாவின்



படிப்பகம்

www.padippakam.com

கொள்கையாக இருந்தது. ஆனால் தேசிய முதலாளிகளும், நிலப்பிரபுத்துவமும், அந்நிய மூலதனமும் ஆட்சி செலுத்தும் நிலையில், இவர்களின் பிரதிநிதியாக ஆட்சி செலுத்தும் மத்திய அரசால் இந்தச் சுயசார்புக் கொள்கையைக் கடைபிடிக்க இயலவில்லை. பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான நிலச் சீர்திருத்தத்தை அமுல்படுத்த இந்திய அரசு தயாராக இல்லை. ஆனால், வறுமை, வேலையின்மை இந்தக் கொடுமைகளை அழிக்க வேண்டிய அவசியமும் அரசுக்கு இருக்கிறது. எனவே, இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு உலகமயமாதலில், இந்தியா தன்னை இணைத்துக்கொள்ள வேண்டியது அவசியம் என்று கூறப்படுகிறது.

உலகமயமாக்கலில் நம் நாடும் இணைவதை நியாயப்படுத்துவதற்குக் கூறப்படும் காரணங்கள் பல. உலக நாடுகள் அனைத்தும் வர்த்தகம் போன்ற விஷயங்களில் ஒன்றிணைந்துவரும் நிலையில், நம் நாடும் தன்னை இணைத்துக்கொள்ளவில்லையென்றால் நாம் தனிமைப்படுத்தப்படுவோம். இதனால் மேற்கு நாடுகளில் தற்போது நடைபெறும் தொழில்நுட்ப புரட்சியின் நன்மைகள் நமக்குக் கிடைக்காமல் போகும் என்பது ஒன்று. மேலும் "உலகமயமாதல்" என்பதனால் நமது நாடு நவீனப்படும். அதாவது, நவீனத் தொழில் நுட்பத்தினால் உருவாக்கப்படும் கணினிகள் போன்ற ஏராளமான சாதனங்களைக் கொண்டு நம் பொருளாதாரத்தையும், சமூகத்தையும் நவீனப்படுத்தலாம். எனவே இந்தியா உலகமயமாதல், தாராளமயமாக்குதல் போன்ற கொள்கைகளைப் பின்பற்ற வேண்டும் என்பது. உலகமயமாக்கல் இவ்வாறு உலகின் பல்வேறு பாகங்களில் ஏற்படும் தொழில்நுட்ப அறிவியல் பூர்வமான முன்னேற்றங்கள் உலகின் எல்லா நாடுகளிலுமுள்ள மக்களுக்குப் போய்ச்சேர வேண்டும் என்பதை வரவேற்கிறோம். ஆனால் இன்றைய சூழ்நிலையில் இது சாத்தியமா? உலகமயமாக்கல் எந்த அடிப்படையில் தற்போது நடைபெறுகிறது என்று பார்க்கும்போது, மேற்கூறிய வாதங்கள் அடிப்படையற்றவை என்று புரியும்.

வளர்ந்த முதலாளித்துவ நாடுகளின் ஆதிக்கம் மேலோங்கியிருக்கும் சர்வதேசப் பொருளாதாரத்தில் ஒரு வளரும் நாடு அவ்வளவு எளிதாக நவீனத் தொழில் நுட்பத்தைப் பற்றிய விபரங்களைத் தெரிந்துகொள்ள முடியாது. பரஸ்பரம் அறிவுபூர்வமான விஷயங்களைப் பரிமாறிக்கொள்ள முடியாது. பொருளாதார வலுவுள்ள முதலாளித்துவ நாடுகள் வளரும் நாடுகளோடு சமமாக நின்று தங்கள் நவீனத் தொழில்நுட்பங்களைப் பரிமாறிக் கொள்வார்கள் என்று நினைப்பது வெறும் பகல் கனவு.

நாட்டை நவீனப்படுத்துவது என்னும் கருத்தும் மேம்போக்கான வாதம்.



படிப்பகம்

www.padippakam.com

நவீனப்படுத்துதல் என்றால் கணினி, தொலைக்காட்சிப் பெட்டிகள் போன்ற வற்றில் தொடங்கி, மேல்நாட்டுப் பாணியில், ஏராளமான நுகர்பொருட்களை வாங்கிக் குவிப்பதுதான் என்ற குறுகிய நோக்கின் அடிப்படையி லிருந்துவரும் வாதம்தான் இது. இதன் விளைவாகத்தான் இன்று கோகோ கோலா, பெப்சியிலிருந்து தொடங்கி வன்முறைக்கும், பாலியல் உணர்வு களைத் தூண்டும் குப்பை எழுத்துகள் வரையில் இங்கே இறக்குமதியாகிக் கொண்டிருக்கின்றன.

இத்தகைய சூழ்நிலையில் பண்பாடு எந்த அளவுக்குப் பாதிக்கப்படுகிறது என்பதைச் சிந்திக்க வேண்டும். "பண்பாடு" என்று குறிப்பிடும்போது, சமூக வியல் வல்லுனர்கள் "மக்களுடைய அன்றாட வாழ்க்கை பழக்க வழக்கங்கள் இலக்கியம், கலை" - எல்லாமே அடங்கும் என்று குறிப்பிடுவார்கள். ஆனால், பொதுவாகப் பண்பாடு என்பது அரசியல், பொருளாதாரத்தோடு தொடர் புடையதல்ல என்று கருதப்படுகிறது. ஆனால் பண்பாடு சமுதாயத்தில் ஒரு காலகட்டத்தில் நிலவும் உற்பத்திமுறையைச் சார்ந்ததுதான் என்பதை நினைவுபடுத்திக்கொள்ளவேண்டும். உலகமயமாக்கலின் ஆதாரமாக விளங்குவது உலகம் முழுவதிலும் ஆதிக்கம் செலுத்தும் பன்னாட்டு முதலாளித்துவ நிறுவனங்கள் தங்கள் மேலாதிக்கத்தை நிலைபெறச் செய்வதற்குக் கலாச்சாரத்தைப் பயன்படுத்திக் கொள்வது என்பது இந்த முதலாளித்துவத்தின்நோக்கம். கலாச்சார மேலாதிக்கம் என்பது உலகமயமாக்கலின் மிக முக்கியமான பரிமாணம்.

கலாச்சார மேலாதிக்கத்தின் மூலம், வளரும் நாடுகளில் தங்கள் உற்பத்திப் பொருட்களுக்கு ஒரு சந்தையை நிரந்தரமாக ஏற்பாடு செய்துகொள்ள ஏகாதி பத்தியம் முயல்கிறது. இது ஒன்றும் புதிய விஷயமல்ல. 19ம் நூற்றாண்டில் இந்தியர்களுக்கான கல்வித் திட்டத்தைப் பற்றிய தன்னுடைய குறிப்பில் "தோற்றத்தில் இந்தியர்களாகவும், பழக்கவழக்கங்களிலும், சிந்தனையிலும் வெள்ளையராகவும் விளங்கும் ஒரு சமுதாயத்தை உருவாக்குவதற்கான ஒரு கல்வித் திட்டத்தை உருவாக்க வேண்டும்" - என்று குறிப்பிட்டுள்ளார். இதே குறிப்பில் பிரிட்டன் இந்தியாவுக்கான கல்வித் திட்டத்தை உருவாக்கும்போது பிரிட்டனில் உற்பத்தியாகும் பொருட்களுக்கு ஒரு சந்தையை உருவாக்கும் விதத்தில் கல்வித் திட்டத்தை அமைக்க வேண்டும் என்றும் குறிப்பிட் டுள்ளார். இன்றைய உலகமயமாக்கலும் அடிப்படையில் மெக்காலேயின் கருத்தைக் கொண்டுள்ளது.

உலக முதலாளித்துவம் கலாச்சாரத்தின் மூலம், உலக முதலாளித்துவத்தின் மேலாதிக்கத்தை உலக நாடுகளின் மீது, குறிப்பாக மூன்றாம் உலக நாடுகளின்



படிப்பகம்

www.padippakam.com

மீது திணிக்க முயல்கிறது. வளர்ச்சி பெற்ற நாடுகளின் பணபலம், தொலைத் தொடர்பு வசதிகள் இவற்றைத் தம் கையில் வைத்திருக்கும் பத்திரிகைகள், தொலைக்காட்சிகள் மூலம் ஒரு நுகர்வோர் கலாச்சாரத்தைப் பரப்புகின்றன. "ஸ்டார்" "ஜீ" . ஸி.என்.என். போன்ற பெரும் நிறுவனங்களின் நிகழ்ச்சிகள் உலக நாடுகள் அனைத்திலும் ஒளிபரப்பப்படுகின்றன. இந்த நிகழ்ச்சிகளை ஓயாமல் பார்க்கும் மக்களின் மனதில் எத்தகைய பாதிப்புகள் ஏற்படும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்தத் தொலைக் காட்சி நிகழ்ச்சிகளைப் பார்க்கும் மக்கள் அதில் தோன்றும் நிகழ்ச்சி ஒளிபரப்பாளர்கள், செய்தி ஒளிபரப்பாளர் முதல் "பாப்" - இசைப் பாடகர்கள், சினிமா நட்சத்திரங்கள் அழகிப் போட்டியில் வெற்றி பெற்ற பெண்கள், விளம்பர மாடல்கள் வரையில், திரைகளில் தோன்றும் கவர்ச்சியான உடைகள் உடுத்த ஆண்களையும் பெண்களையும் நாள்தோறும் பார்க்கும்போது, அவர்களையே முன் மாதிரிகளாக நினைக்கிறார்கள். திரையில் பார்க்கும் நபர்கள் அணியும் ஆடைகளிலிருந்து அலங்கார ஆடம் பரப் பொருட்கள் வரையில் எல்லாவற்றையும் தங்களுக்குத் தேவை என்று மக்கள் நினைக்கத் தூண்டப்படுவார்கள். இவ்வாறு ஒரு தேவை என்பது உருவாக்கப்படுகிறது.

தொலைக்காட்சி போன்ற ஊடகங்களின் மூலமாகப் பாலியல் உணர்வுகள், வன்முறை போன்றவையும் உலகமயமாகின்றன. மீண்டும் மீண்டும் இத்த கைய உணர்வுகளைத் தூண்டும் காட்சிகளைப் பார்க்கும் மக்களின் உணர்வுகள் மரத்துப்போகின்றன. பாலியல் கொடுமைகளையும், வன்முறை யையும் மக்கள் இயல்பானவையாகவே ஏற்றுக்கொள்ளப் பழகிவிடுகிறார்கள். அன்பு, ஒற்றுமை போன்ற உணர்வுகள் தேவையில்லாதவை என்ற எண்ணம் மக்களுடைய மனதில் ஆழமாகப் படிந்துவிடுகிறது.

இந்த உலகமயமாகும் நுகர்பொருள் கலாச்சாரத்தைப் பரப்புவோர்கள் மக்களைப் பார்க்கும் பார்வையே வித்தியாசமானது. மக்கள் வெறும் நுகர்வோர் மனிதநேய உணர்வுகள் வெறும் இரண்டாம்பட்சமானவை. வித விதமாக உடை உடுத்துவதும், விதவிதமான உணவுகளை ருசித்தும், நூதன மான நுகர்பொருட்களை வாங்கிக் குவித்தால் போதும் என்ற சிந்தாந்தத்தை ஆழமாகப் பதியவைக்கும் முறையில் கவர்ச்சிகரமான விளம்பரங்கள், எங்குத் திரும்பினாலும் மக்களின் கவனத்தை ஈர்க்கின்றன. இந்த விளம்பரங் களில் காணும் பொருட்களை வாங்கிக் குவிப்பதுதான் வாழ்க்கையில் நிறைவு தரும் என்ற உணர்வு தரும் மயக்கத்தில் எப்படியாவது பொருட்களை வாங்க வேண்டும் என்ற துடிப்பு எல்லாப் பகுதி மக்களிடையேயும் பரவலாகத்



படிப்பகம்

www.padippakam.com

தோன்றுகிறது. இதற்குத் தேவையான பணத்தைச் சம்பாதிக்க வழி தேடு கிறார்கள். நேர்மையான முறையில் சம்பாதிக்க ஏராளமான செலவு செய்து பட்டங்களைப் பெற முடிந்தவர்கள், கை நிறையச் சம்பாதித்தும், வாழ்க் கையை நின்று, நிதானமாக அனுபவிக்க முடியாமல் எந்நேரமும், வேலை, வேலை என்று ஓடுகின்றனர். அப்படிப்பணம் சம்பாதிக்க வழியில்லாதவர்கள் எப்படியாவது பணம் சம்பாதிக்க முனைகிறார்கள். பணத்திற்காக எதையும் செய்யலாம் என்ற சித்தாந்தம் முளைவிடுகிறது. இந்தப் போக்கைத் தீவிரப்படுத்தும் வகையில் போட்டாபோட்டி, தனிமனித சுதந்திரம் என்ற பெயரில், அடுத்தவரை அடித்துத் தள்ளியாவது முன்னேற வேண்டும் என்ற வெறி தீவிரப்படுகிறது. இந்த நிலையில் சமுதாய மதிப்பீடுகள் சீரழிவது ஆச்சரியமில்லை.

இந்தியா ஏற்கெனவே சாதி ஏற்றத்தாழ்வுகள், பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் மிகுந்த ஒரு சமுதாயம் நிலப்பிரபுத்துவத்தின் பிடி இன்னமும் முற்றும் விலகாததொரு சமுதாயம். இங்கே தலித் மக்களும் ஏழை மக்களும், தீண்டாமைக் கொடுமைகளுக்கும், சாதி வெறிக்கும் பலியாகிறார்கள். இந்தச் சூழ்நிலையில் நுகர்வோர் கலாச்சாரம் மக்களை இத்தகைய பிரச்சனை களிலிருந்து திசை திருப்பும்.

இத்தகைய உலகமயமாகும் நுகர்பொருள் கலாச்சாரத்தால் பெண்கள் மிகத் தீவிரமாகப் பாதிக்கப்படுவார்கள். உண்மையில் பெண்ணும் ஒரு நுகர்பொரு ளாகத்தான் பார்க்கப்படுகிறாள். உலகமயமாகிவரும் "மீடியா" கலாச்சாரம் பெண்களின் மீது தனது பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்துவிடுகிறது. இன்று மிக வேகமாக வளர்ந்துவரும் தொழில் பெண்கள் பயன்படுத்தும் ஒப்பனைப் பொருட்களும், அழகுசாதனங்களும் உற்பத்தி செய்யப்படும் தொழில்தான். இந்தப் பொருட்களை விளம்பரப்படுத்தவும் பெண்கள்தான் பயன்படுத் தப்படுகிறார்கள்.

பொதுவாகவே எல்லா விளம்பரங்களிலும், தேவையோ, தேவை யில்லையோ, ஒரு பெண்ணைக் காட்டுவது வாடிக்கையாகிவிட்டது. அழகிப் போட்டிகளுக்கு அளவுக்குமீறிய முக்கியத்துவம் அளித்துப் "பெண் என்பவள் வெறும் கவர்ச்சிப்பொருள்" என்ற கருத்தை ஆழமாகப் பதிய வைப்பதும் உலகமயமாகும், இது நுகர்பொருள் கலாச்சாரத்தின் ஒரு பரிமாணம். பெண் ஒரு அறிவுசார்ந்த ஜீவன் என்பது மறக்கடிக்கப்படுகிறது.

இந்த நுகர் கலாச்சாரம் ஒரு குறிப்பிட்ட வர்க்கப் பெண்ணைத்தான் முன் னிறுத்துகிறது. "அழகு" என்பது வெறும் உடல் சார்ந்ததுதான். முகப்பூச்சும்,



படிப்பகம்

www.padippakam.com

அலங்காரங்களும்தான் என்று வலியுறுத்தப்படுகிறது. மேல்நாட்டு சோப்பு கம்பெனிகள் வரையறுக்கும் சில லட்சணங்களுக்குட்பட்ட பெண்தான் அழகி என்ற பட்டத்திற்குரியவளாகிறாள். பெயருக்கு ஏதோ ஒன்றிரண்டு கேள்விகள் (உ.ம். நீ நாளைக்கே இறந்துவிடுவாய் என்றால் கடைசியாக என்ன செய்ய விரும்புவாய்?) கேட்டு, அதற்குச் சமயோசிதமாகப் பதில் சொல்லும் பெண் "அறிவாளி" என்று பாராட்டப்படுகிறாள். உழைப்பினால் தேய்ந்து காய்ந்த பெண்களுக்கு இங்கே இடமோ, அவர்களுடைய உழைப்புக்கு மதிப்போ இல்லை: சத்துணவின்றி மகப்பேற்றில் இறந்துபோகும் தாய்மார்கள், கல்வியின்றி, சத்துணவின்றி பள்ளிக்குச்செல்ல வேண்டிய வயதில் உழைப்புக்குத் தள்ளப்படும் குழந்தைகள் போன்ற பிரச்சனைகள் இந்தக் கவர்ச்சி உலகைப் பொறுத்தவரையில் இல்லை. இத்தகைய கலாச்சாரம் பெண்களை "உயரமாகவும், சிவப்பான மேனியுடனும், விதவிதமாக உடை உடுத்துவதும், நுனி நாக்கில் ஆங்கிலம் பேசுவதும்தான் நாகரீகம் என்று நினைக்க வைக்கிறது.

உலகம் தழுவிய நுகர்வோர் கலாச்சாரம் நம் நாட்டுப் பெண்களை வேறொரு விதத்திலும் தாக்குகிறது. சொந்த வருமானத்தில் பொருட்களை வாங்கிக்குவிக்க முடியாதவர்கள். குறுக்குவழியில், திருமணத்தின்போது, வரதட்சணை என்ற பெயரில் எல்லாப் பொருட்களையும் பெற முயல்வது வாடிக்கையாகிவிட்டது. இதன் விளைவுதான், வரதட்சணைக் கொலை முதல், பெண் கருக்கொலை வரையிலான நிகழ்வுகள். இந்தியா ஒரு பன்முகக் கலாச் சாரத்தை உடைய நாடு. இந்த பன்முகக் கலாச்சாரத்திற்கு ஆபத்து ஏற்படும் நிலை உருவாகி வருகிறது. நாட்டின் பல்வேறு பகுதி மக்களும், தங்களுடைய கலாச்சார வேர்களை மறந்து, முதலாளித்துவ பன்னாட்டுக் கம்பெனிகள் காட்டும் கலாச்சாரத்தைத் தழுவும் அபாயம் உருவாகி வருகிறது. உலகம் தழுவிய பல ஸ்தாபனங்கள் உலகின் பல்வேறு கலாச்சாரங்களைப் பற்றி ஆய்வுகள் நடத்துகின்றன. இந்த ஆய்வுகள், இத்தகைய வித்தியாசமான கலாச்சாரங்களைத் தொலைதொடர்பு சாதனங்களின் மூலமாக விற்பனைப் பொருட்களாக்குவதும் காட்சிப் பொருட்களாக்குவதும் நடைபெறும். கலாச்சார வியாபாரம் என்பது இன்று வெகுவேகமாகப் பரவிவரும். லாபகரமான தொழில் உலகெங்கும் பரவிவரும் நுகர்பொருள் கலாச்சாரத்திற்கு எளிய மக்கள் வெகு எளிதில் பலியாகிறார்கள். ஓயாமல் தொலைக்காட்சியிலும், திரைப்படங்களிலும் இம்மக்கள் பார்க்கும் நிகழ்ச்சிகள் அவர்களைத் தங்கள் கலாச்சார வேர்களையே மறந்துபோகச் செய்யும் தங்களுடைய பண்பாட்டு வேர்களை மறந்த மக்கள். கலையிலோ இலக்கியத்திலோ வளமிக்க புதிய படைப்புகளை எப்படிப் படைக்க முடியும்? அவர்களுடைய புதிய படைப்பு



படிப்பகம்

www.padippakam.com

களில்கூட, நுகர்பொருள் கலாச்சாரத்தின் செயற்கைத் தன்மையின் பாதிப்புகள் தவிர்க்க முடியாததாகிவிடும்.

மக்களின் நேரத்தைத் தொலைக்காட்சிகளும், திரைப்படங்களும் ஆக்கிரமிக்கும்போது, அவர்களுடைய கற்பனை வளம் நசிந்து போகிறது. மேலும், அடித்தட்டு மக்களுக்கே உரிய கலைவடிவங்களும் நசிந்துபோகின்றன. தொலைக்காட்சியில் நிகழ்ச்சியைப் பார்க்கும் மக்களுக்குத் தெருக் கூத்தையோ, வீதி நாடகங்களையோ பார்க்கவோ - ஏன் பங்கேற்கவோ கூட நேரமிருப்பதில்லை. இத்தகைய நாட்டுப்புறக் கலைகளுக்கு இன்னொரு பரிமாணம் உண்டு. ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் நம் நாட்டு விடுதலைக்காகப் போராட்ட உணர்வை எளிய மக்களுக்கும் விளங்கும் வண்ணம் எடுத்துச்சொன்ன பெருமை இந்தக் கலைகளுக்கு உண்டு. இந்தப் பாரம்பரியமும் அழிந்துவிடும் அபாயம் அதிகரித்து வருகிறது. மக்கள் மனதில் ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வுகூட மழுங்கடிக்கப்படும்.

உலகமயாதலின் மற்றொரு முக்கிய அம்சம் தனியார்மயமாதல், அதுவும் அன்னியத் தனியார் முதலாளிகளை வரவேற்றல். இந்தப் பன்னாட்டுத் தனியார் நிறுவனங்களைப் பத்திரிகை, தொலைக்காட்சி போன்ற துறைகளிலும் அனுமதிக்க வேண்டும் என்று பரவலாகப் பேசப்படுகிறது. இதற்குக் கூறப்படும் காரணம் - இதனால் பார்வையாளர்களுக்கு நிகழ்ச்சிகளை தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு அதிகமாக இருக்கும் என்ற கருத்து. ஆனால் பணபலம், ஏராளமான வசதிகள் இவற்றைக் கையில் வைத்திருக்கும் பன்னாட்டு நிறுவனங்களின் ஆதிக்கம்தான் தொலைத் தொடர்பு சாதனங்களில் மேலாதிக்கம் செலுத்துகின்றன. இந்த நிறுவனங்கள் தயாரிக்கும் நிகழ்ச்சிகளைப் பார்த்து, அதே மாதிரியாகத்தான், மற்ற தொலைக்காட்சிகளும் நிகழ்ச்சிகளைத் தயாரிக்கின்றன. இதனால் பார்வையாளர்களின் விருப்பப்படி நிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் என்பது அடிபட்டுப் போகிறது.

தனியார்மயமாக்கல் என்பது எல்லாப் பிரச்சனைகளுக்கும் ஒரு தீர்வு ஏற்படுத்தும் என்ற பிரமை ஒருபுறம் தோற்றுவிக்கப்படுகிறது. தனியார் அமைப்புகள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் இவற்றின் மூலம் சமுதாயத்திற்கு தேவையான அனைத்துச்சமூக நலத்தொண்டுகளையும் செய்து முடித்துவிடலாம் என்ற எண்ணம் பரவலாக விதைக்கப்படுகிறது. அரசு என்றாலே திறமையற்ற நிர்வாகம் ஊழல் என்ற கருத்து தீவிரமாகப் பிரச்சாரம் செய்யப்படுகிறது. ஆனால் இதே தனியார்மயக் கொள்கைகள் மூன்றாம் உலக நாடுகளில் நிலவிவந்த கல்வியின்மை, வேலையின்மை போன்ற பிரச்சனைகளைத் தீர்க்க முடியவில்லை என்ற உண்மை மறைக்கப்



படிப்பகம்

www.padippakam.com

படுகிறது. இத்தகைய பிரச்சாரத்தைச் செய்யும் முதலாளித்துவம் தன்னுடைய பிரச்சாரத்திற்கே, தன் நாட்டு அரசின் ஆதரவைப் பெற்றிருக்கிறது என்பதைக் குறிப்பிடவேண்டும்.

உலகமயமாக்கப்படும் நுகர்வோர் கலாச்சாரம், மக்களைப் பிரிக்கிறது. ஒருபக்கம் அளவற்ற தனிநபர் சுதந்திரத்தைப் பற்றிப் பேசும்போது, ஒரு தனி நபரின் சுதந்திரத்திற்கு அளவுக்கு மீறிய முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. முதலாளித்துவம் வளர்ச்சியடையும்போது, பொருள் உற்பத்திக்கு மிகத் தேவையானது பல்வேறு பகுதிகளிலிருந்து வரும் கச்சாப் பொருட்களை ஓரிடத்தில் சேர்த்து, உற்பத்தியை செய்வதும், உலகத்தின் பல்வேறு மூலை களிலும் இருக்கும் சந்தைகளுக்கு உற்பத்திப் பொருட்களை வினியோகம் செய்வதுமாகும். ஆனால், இதேசமயம் முதலாளித்துவப் பிரச்சாரம், ஒரு தனிநபர் தன் விருப்பப்படியே தன் தேவைகள் முழுவதையும், ஒருவரையும் எதிர்பார்க்காமல், நிறைவேற்றிக்கொள்ள முடியும் என்ற பிரமையை ஏற் படுத்துகிறது. இதற்கு "ராபின்ஸன் க்ரூஸோ" - கதையை உதாரணமாகச் சொல்லலாம். தன்னந்தனியே ஒரு தீவில் வசிக்கும் ராபின்ஸன் க்ரூஸோ, தன்னம்பிக்கையோடு, தன் ஒரு சில நண்பர்களோடு கடுமையான உழைப் பின் மூலம், ஒரு புதிய வாழ்க்கையை உருவாக்கிக்கொள்கிறான் என்ற இந்த நிகழ்ச்சி வெறும் கற்பனையில்தான் நடக்கக்கூடியது.

இன்றைய உலகில் பொருள் உற்பத்தி என்பது மிகப்பரந்த அளவிலான கூட்டு முயற்சியின் அடிப்படையில் அமைந்தது. போக்குவரத்து வசதி களாலும், தொலைத்தொடர்பு வசதிகளாலும் வர்த்தகம் போன்றவற்றால் உலக நாடுகள் மிக நெருக்கமாகப் பிணைக்கப்பட்டிருக்கும்போது, உலகத்தின் ஒரு பகுதியில் ஏற்படும் நிகழ்ச்சிகள் மற்றப் பகுதிகளில் பாதிப்பை ஏற்படுத்தாமல் இருக்காது. வளைகுடா நாடுகளில் போர் நடந்தால் நம்நாட்டுப் பொருளாதாரம் நிலை குலைகிறது. மண்ணெண்ணெய், சமையல் எரிவாயு சரியாகக் கிடைக்குமா? என்று கவலை ஏற்படுகிறது. ஆனால் இதை மறந்து, தனிநபர் சுதந்திரம்தான் முக்கியம். ஒருவர் மற்றவரை நம்பி வாழவேண்டியதில்லை என்ற உணர்வை வளர்க்கும் கலாச்சாரம் மக்கள் மனிதநேயத்தோடு ஒருவரோடு ஒருவர் இணைந்து வாழ வேண்டிய அவசியமில்லை என்ற உணர்வை ஏற்படுத்துகிறது. இதன் ஒரு முக்கியமான பின்விளைவு மக்களுடைய கூட்டு முயற்சி, கூட்டுப்போராட்ட உணர்வுகள் மழுங்கடிக்கப் படுவதுதான். இதனால் உழைக்கும் மக்களின் இயக்கங்கள் பாதிப்பையும், அரசியல் கலாச்சாரத்தைப் பொறுத்தவரையில் சிதம்பரம் முதல் இன்று பதவி வகிக்கும் யஷ்வந்த் சின்கா வரையில் அனைத்து நிதி அமைச்சர்களும்,



படிப்பகம்

www.padippakam.com

அந்நிய மூலதனம் இந்தியாவுக்கு வருவதற்கான சாதகமான சூழ்நிலையை உருவாக்குவோம் என்றும் அந்நிய மூலதனத்தை விரட்டும் எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ள மாட்டோம் என்றும் பேசுகிறார்கள். இதன் விளைவாக, மக்கள் போராட்டங்கள் ஒடுக்கப்படும். அந்நிய மூலதனத்திற்குச் சாதகமான சூழல் என்று பேசும்போது பன்னாட்டு நிறுவனங்கள் மிகக்குறைந்த கூலிக்கு ஆட்களை அமர்த்தி, மக்களுடைய உழைப்பைச் சுரண்டுவதைக் கூடத் தடுக்காமல் விடும் கொள்கையை அரசு கடைப்பிடிக்கும். தொழிற் சங்கப் போராட்டங்களை அரசு அனுமதிக்காது. மேலும் பன்னாட்டு நிறுவனங்கள், தங்களுக்குச்சாதகமான அரசு அமையவேண்டுமென்பதால், நம் நாட்டு அரசியலில் ஏகாதிபத்தியத்தின் தலையீடு அதிகரிக்கும். இவ்வாறு பாடுபட்டுப்பெற்ற அரசியல் சுதந்திரம் பயனற்றுப் போகும். நாட்டில் மக்களின் நியாயமான போராட்டங்கள் ஒடுக்கப்படும். ஜனநாயகக் கலாச்சாரத்திற்குப் பின்னடைவு ஏற்படும்.

பத்திரிகைகள், தொலைக்காட்சி போன்ற ஊடகங்கள், மக்கள் மனதில் அழுத்தமான பிம்பங்களை ஏற்படுத்தக்கூடியவை. வளர்ந்த முதலாளித்துவ நாடுகளின் ஊடகங்கள் பல்வேறு நாடுகளைப் பற்றிய செய்திகளை வெளியிடும்போது இத்தகைய பிம்பங்களை உருவாக்கும் விதத்தில் செய்திகளை வெளியிடுகின்றன. உதாரணமாக, சீனாவில் டியானன்மென் சதுக்கத்தில், மாணவர்கள் அணி திரள்வதைக் காட்டித் துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்களைப் பற்றிய சில புள்ளிவிபரங்களைக் கொடுக்கும்போது, சீன கம்யூனிஸ அரசு ஒரு ஒடுக்குமுறை அரசு. மக்களுடைய எழுச்சியை ஒடுக்கும் அரசு என்ற கருத்தை ஆழமாகப் பதியவைக்க முடிகிறது. சோஷலிஸ அரசுகளைப் பற்றி இத்தகைய திட்டமிட்ட பிரச்சாரம் ஓயாமல் நடைபெறும்போது, சோஷலிஸம் என்றாலே, அடக்குமுறை, எதேச்சதிகாரம் என்ற பிம்பத்தைப் பதியவைக்க முடிகிறது. அவ்வாறே முதலாளித்துவ சமுதாயத்தைப் பற்றி, அது ஏதோ ஒரு சுவர்க்கம் என்ற பிரமையை ஏற்படுத்து கிறது. இவ்வாறு சிந்தனைக் கட்டுப்பாடு என்பது உலகமயமாகும் இந்தக் கலாச்சாரத்தின் அமெரிக்க ஏகாதிபத்தியம் சதாம் உசேனை ஒரு கட்டத்தில் தனக்கு வேண்டிய நபராகத் தூக்கிப்பிடித்தபோது இவ்வாறே இவரைப் பற்றி ஆதரவாகவே பிரச்சாரம் செய்தது. ஆனால், வளைகுடாப்போர் நடந்தபோது, அதே சதாம் கொடூரமான கொடுங்கோலர் என்ற பிம்பத்தை ஏற்படுத்தியது. இதில் ஸி.என்.என்.வகித்த பங்கு குறிப்பிடப்பட வேண்டியது.

ஓர் அந்நியமான நுகர்பொருள் கலாச்சாரம் ஆதிக்கம் செலுத்தும்போது தங்கள் தனித்தன்மையை இழந்துவிடுமோ என்ற அச்சம், மக்களிடையே



படிப்பகம்

www.padippakam.com

ஏற்படுவது இயல்பு. இந்த உணர்வை வகுப்புவாத சக்திகள். தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கின்றன. "கலாச்சாரத்தைப் பாதுகாப்பது" என்ற பெயரில் எல்லாவிதமான பிற்போக்குப் பழக்கவழக்கங்களையும் பாதுகாக்க முயல்கின்றன. பெண்களும். அடித்தட்டு மக்களும் ஒடுக்கப் படுகின்றனர். கலாச்சாரம் என்ற பெயரில் சவுதி அரேபியாவில் ஒரு பெண்ணின் நடத்தையில் சந்தேகம் ஏற்பட்டால் அவளை நடுத்தெருவில் கல்லால் அடித்துக் கொல்வதும். திருட்டுக் குற்றத்திற்குக் கை. கால்களை வெட்டுவதும். இந்தியாவில் குழந்தைத் திருமணங்கள் நடைபெறுவதும். பெண்களுக்குக் கல்வி மறுக்கப்படுவதும் இன்றளவும் நடக்கின்றன. அதோடு நம் நாட்டின் பன்முகக் கலாச்சாரத்தை மறைத்து இந்தியா ஒரு இந்து நாடு. ஒரே நாடு. ஒரே இனம். ஒரே கலாச்சாரம் என்பதும். இதன்மூலம் மேல்சாதி ஆதிக்கத்தை மறைமுகமாக நியாயப்படுத்துவதும். சங் பரிவாரங்களின் தலைமையில் நடக்கின்றன. இந்துக் கலாச்சாரத்தைப் பாதுகாப்பது என்ற பெயரில் சிறுபான்மையினரைக் குறிவைத்துத் தாக்குதல் நடைபெறுகிறது. இவ்வாறு நாட்டின் பன்முகத்தன்மைக்கும். மதச்சார்பற்ற பாரம்பரியத்திற்கும் ஆபத்து உருவாகிறது.

இவ்வாறு பல்வேறு பின்விளைவுகளைக் காணும்போது. உலகமயமாதல் என்பதே ஆபத்தானது. அதனால் தேவையற்றது என்ற முடிவுக்குவரத் தோன்றும். உலகின் பல்வேறு பகுதிகளிலும் நிகழும் விஞ்ஞானத் தொழில் நுட்ப வளர்ச்சி அனைத்து மக்களுக்கும் கிடைக்குமென்றால். அதற்கு உலகமயமாதல் உதவியாக இருக்கும். ஆனால் நுகர்பொருள் கலாச்சாரத்தை அடிப்படையாகக் கொண்ட. அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் ஏவிவிடப்படும். இப்போதைய உலக மயமாக்கல். மக்களுக்கு குறிப்பாக மூன்றாம் உலக நாடுகளுக்கு உதவிகரமாக இருக்காது. உலக நாடுகள் அனைத்தும் சம அந்தஸ்துடன் சுதந்திரமாக இணைந்து பணியாற்றும் அடிப்படையிலான உலகமயமாக்கலில்தான். உண்மையான கருத்துப்பரிமாற்றமும். முன்னேற்ற மும் சாத்தியமாகும். இன்றைய ஏகாதிபத்தியத்தின் கலாச்சார ஆதிக்கமும் அதனடிப்படையான நுகர்பொருள் கலாச்சாரமும் எதிர்க்கப்பட வேண்டியவை. இந்த இரண்டாவது ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரில் அனைத்து உழைக்கும் மக்களும். இதர ஜனநாயக சக்திகளும் இணைந்து செயல்படவேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

# பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சி (45வது தேசிய காங்கிரஸ்) மாநாட்டு அறிக்கை

மொழியாக்கம்: **ராமச்சந்திர வைத்தியநாத்**

*இவ்வாண்டு ஏப்ரல் மாதத்தின் மூன்றாவது வாரத்தில் லண்டன் நகரில் பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சியின் 45வது தேசிய காங்கிரஸ் நடைபெற்றது. பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 22க்கும் மேற்பட்ட சகோதர பிரதிநிதிகள் இம் மாநாட்டில் பங்கேற்றனர். அம்மாநாட்டில் பிரிட்டிஷ் கட்சியின் பொதுச் செயலாளர் ராபர்ட் கிரிபித்ஸ் முன் வைத்த அறிக்கை தரப்படுகிறது. மாறி வரும் சர்வதேச நிலைமையில், வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாட்டைச் சார்ந்த கம்யூனிஸ்ட் இயக்கம் எத்தகைய பார்வையையும், செயல்பாட்டையும் கொண்டிருக்கிறது என்பதை அறிந்திட இந்த அறிக்கை நமக்கு உதவிகரமாக இருக்கும்.*

**தோழர்களே, நண்பர்களே,**

எண்பது ஆண்டுகளுக்கு முன்னர் பிரிட்டனில் கம்யூனிஸ்ட் கட்சி உருவாக்கப்பட்டது. அன்றைய நிலைமை பற்றி லெனின் குறிப்பிடுகையில், "ஏகாதிபத்திய யுத்தங்களும், தேசிய விடுதலைப் போராட்டங்களும், சோஷலிச புரட்சியும் உருவாகும் காலகட்டம்" என்று மதிப்பீடு செய்தது சரியாகத்தான் அமைந்தது. என்றுமில்லாத அளவில் இருபதாம் நூற்றாண்டில் சமூக முரண்பாடுகளும், தேசிய மோதல்களும், சர்வதேச நெருக்கடிகளும் அதிகரித்தது. மாபெரும் முதலாவது யுத்தத்தில் பெரும் ஏகாதிபத்திய சக்திகள் திட்டமிட்டு படுகொலைகளை நடத்தியது. உலகச் சந்தையையும் மலிவான உழைப்பையும் கைப்பற்றி ஆதிக்கம் செலுத்தும் நோக்கம் இதில் அடங்கியிருந்தது என்பதை வெளிப்படையாகவே அறிய முடியும். இறுதியாக 1918ல் முதல் யுத்தம் முடிவுக்கு வந்தது.

அதே நேரத்தில் பாசிசத்திற்கான வித்துக்களோடு இரண்டாவது உலக யுத்தத்திற்கான கூறுகளும் விதைக்கப்பட்டது. ஆயின் ரஷ்யாவில் நடைபெற்ற சோஷலிச புரட்சி உலகெங்கிலுமுள்ள உழைப்பாளி மக்களுக்கும்,



படிப்பகம்

www.padippakam.com

ஒடுக்கப்படும் மக்களுக்கும் ஒளி விளக்காய் உருவாயிற்று. சோவியத் செஞ் சேனை நாஜி யுத்த இயந்திரத்தின் குரல்வளையையே நொறுக்கியதோடு, கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாத கொடூரங்களிலிருந்து மனித சமூகத்தை மீட்டெடுத்தது என்று அன்றைய தினம் வின்ஸ்டன் சர்ச்சில் கூறியது மிகச் சரியானதுதான். இதன் தொடர்ச்சியாய் பல்வேறு நாடுகளில் பிரிட்டிஷ், பிரெஞ்ச், ஜப்பான், போர்ச்சுகீஸ் ஆகிய நாடுகளின் காலனி யாதிக்கம் தூக்கி எறியப்பட்டது. சீனா, கொரியா, கியூபா, வியட்நாம் ஆகிய நாடுகளைச் சார்ந்த மக்கள் கிழக்கு ஐரோப்பிய மக்களுடன் இணைந்து சோஷலிசத்தை நோக்கிய பாதையில் அணிவகுத்துச் சென்றனர்.

முழுமையான வேலை வாய்ப்பிற்காகவும், நாட்டின் செல்வாதாரங்களை தேசிய மயமாக்கிடும் பொருட்டும், சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக வும், செல்வத்தை மக்களிடம் மறு வினியோகம் செய்திடும் பொருட்டும் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் உள்ள தொழிலாளர் இயக்கங் களும் முற்போக்கு இயக்கங்களும், தொடர்ச்சியான போராட்டங்களை நடத்தி வருகிறது. பல்வேறு முனைகளில் ஜனநாயக ரீதியிலான கிளர்ச்சியின் பகுதி யாக பெண்கள் உரிமைகளையும், வாய்ப்புகலையும் பெறத்துவங்கினர். பல் வேறு தொடர்ச்சியான போராட்டங்களின் காரணமாய், ஒவ்வொரு நாட்டிலும் முதலாளித்துவ வர்க்கமும் அதன் அரசியல்வாதிகளும் வெவ்வேறு சலுகை களை அளித்திட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியது. ஆயின் நம்மால் அடிப்படையான புரட்சிகர மாற்றத்தை உருவாக்க முடியவில்லை. தொழிலாளி வர்க்கத்தாலும் அதன் அரசியல் கட்சிகளாலும் ஆட்சி அதிகாரத்தை கைப் பற்ற முடியவில்லை. அத்தோடு பொருளாதாரத்துறையில் விரும்பத்தக்க மாற்றங்களை செய்து சோஷலிசத்தை நிர்மாணிக்க முடியவில்லை. பெரும் வர்த்தக நிறுவனங்களே பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் இன்றும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன.

உள்நாட்டில் சுரண்டல் தொடரும் பொருட்டு நவீன யுக்திகள் கையாளப் பட்டு வருகின்றன. இது தவிர முந்தைய காலங்களில் பொருளாதார ஆதிக் கத்தை நிலைநாட்டுவதோடு விரிவுபடுத்திடவும் இதே முறைகள் பின்பற்றப் பட்டு வருகின்றன. முதலாளித்துவ ஏகபோகங்கள், லாப அடிப்படை சற்றும் மாறாது இருக்கும்பொருட்டு இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. தங்களது வர்க்க நலன்களை பேணிப் பாதுகாக்கும் வகையில், இன்று ஆதிக்க சக்திகள் கெடுபிடிப்போரை துவக்கியதோடன்றி, சோஷலிச நாடுகளுக்கு எதிராக ஆயுதப் போட்டிகளையும் உருவாக்கி வந்தது.



படிப்பகம்

www.padippakam.com

மக்களின் அமோக ஆதரவைப்பெற்ற இயக்கங்கள். சோஷலிச கம்யூனிஸ இயக்கங்கள் ஆகியவற்றை நசுக்கிட ஈவு இரக்கமற்ற முறைகள் கையாளப் பட்டன. சர்வாதிகார ராணுவ ஆட்சி முறைகள் திணிக்கப்பட்டன. வானி லிருந்து குண்டு மழை பொழியப்பட்டது. சிலி. நிகரகுவாவிலிருந்து தொடங்கி கொரியா மற்றும் இந்தோனேசியா வரை இம்மாதிரியான அதிரடித் தாக்குதல் தொடர்ந்து நடைபெற்று வந்தது.

பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நாம் சோவியத் யூனியனுடன் மட்டுமின்றி. இதர சோஷலிச நாடுகளுடனும் மற்ற சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கங்களுடனும் உறவையும். ஒருமைப்பாட்டையும் கொண்டிருப்பதில் பெருமைகொள்கிறோம். ஏகாதிபத்தியத்திற்கு எதிராக அந்தந்த நாடுகளில் செயல்பட்டுவரும் தேசிய விடுதலை இயக்கங்களுடனும். அமைதி இயக்கங் களுடனும் நெருக்கமான தொடர்பை கொண்டிருக்கிறோம். முந்தைய சோஷலிச நாடுகளில் சிற்சில தவறுகள் நிகழ்ந்ததை நாம் நன்கறிவோம். இவை குறித்து உண்மைக்கு மாறாக. முதலாளித்துவ ஊடகங்கள் மிகைப்படுத்தி பிரச் சாரம் செய்து வந்தன. இவையெல்லாம் ஒருபக்கம் இருப்பினும் சோஷலிச நாடுகள் மகத்தான சாதனை புரிந்திருப்பதை எவரும் மறுக்க முடியாது. நாம் அச்சாதனைகள் குறித்து பெருமிதம் கொள்வதோடு. அவற்றை ஆதரித்தும் வந்திருக்கிறோம்.

அந்நாடுகளில் சோஷலிச அமைப்பு வீழ்ச்சியடைந்ததன் விளைவாக, லட்சக்கணக்கான மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆலைத் தொழிலா ளிகள். ஓய்வூதியம் பெறுவோர். பெண்கள் ஆகிய அனைத்து தரப்பினர் வாழ்வும் பெரிதும் பாதிக்கப்பட்டதோடு சமூகத்தில் ஓர் புதிய பிரிவினரும் உருவாகியிருக்கின்றனர். வேலையற்றவர்களே அவர்கள். வளர்ச்சிபெற்ற நாடுகளில் மட்டுமின்றி வளர்முக முதலாளித்துவ நாடுகளிலும் இதே நிலைமையில்தான் தொழிலாளர்கள் இருந்துவருவதோடு. புதிய சவால்களை யும் அவர்கள் எதிர்கொண்டு வருகிறார்கள். சோஷலிச வீழ்ச்சிக்குப் பின் புதிய உலக நெறிமுறை நம்மீது கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளது. பன்னாட்டு வர்த்தக நிறுவனங்கள் கட்டற்ற வர்த்தகம். உலகமயம் என்ற பெயரால் உலகெங்கிலும் பொருளாதார ரீதியாக ஏகபோக நிலைபாடுகளை உருவாக்கி வருகிறது. இதற்கு சர்வதேச நிதி அமைப்பும். உலக வங்கியும் உற்ற துணையாக இருந்து வருகிறது.

பன்னாட்டு வர்த்தக நிறுவனங்கள் பெரும்பாலான ஏகாதிபத்திய நாடுகளை தளமாகக்கொண்டு இயங்கி வருகின்றன. ஒட்டுமொத்தமாக முதலாளித்துவ உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கை இவை கொண்டிருப்பதோடு. உலக



படிப்பகம்

www.padippakam.com
வர்த்தகத்தில் மூன்றில் இரண்டு பங்கையும் இந்த பெரு நிறுவனங்கள் கொண்டிருக்கின்றன. இரண்டு மாதங்களுக்கு முன்னர் இம்மாதிரியான நிறுவனங்களில் ஒன்றான யூனிலீவர் உலகெங்கிலுமுள்ள தனது உற்பத்திக் கூடங்களில் வேலை செய்துவரும் 25,000 பேரை வேலையிலிருந்து வெளி யேற்றப்போவதாக அறிவித்தது. இத்தனைக்கும் அளவில் வருமானத்தில் மிகப்பெரும் நிறுவனமாக திகழும் யூனிலீவர் ஐ.நா.வில் உறுப்பினராக உள்ள பல்வேறு நாடுகளைக் காட்டிலும் பலமடங்கு வருவாயை கொண்டதாகும். ஓரிரு வாரங்களுக்கு முன்னர் உலகில் மிகப்பெரும் பன்னாட்டு வர்த்தக நிறுவனங்களில் ஒரு சில இந்தோனேசியா, மெக்சிகோ, பிரேசில் போன்ற நாடுகளைத்தவிர இத்தாலியின் தேசிய நாணயத்தையும் ஓரேநாள் இர வில் நாசமாக்கிவிட்டது. ராவோடு ராவாக அவை செல்லாக்காசாகியது.

அமெரிக்கா அரசியல் ரீதியாக சர்வதேச போலீஸ்காரனாக மட்டும் இருந்து விடவில்லை. இது நீதிபதியாகவும், தீர்ப்பளிப்பவராகவும், நிறைவேற்றிவைப் பவராகவும் செயல்பட்டு வருகிறது. அமெரிக்காவின் அந்நிய கொள்கைகளை ஏற்க மறுக்கும் எந்த ஒரு அணியையும் தீர்த்துக்கட்டுவதை அமெரிக்கா தனது இலட்சியமாகக் கொண்டுள்ளது. ராணுவ ரீதியாக அமெரிக்காவின் கொள்கை களிலிருந்து விலகிய செர்பியா, இராக், லிபியா, கிரெனடா, சோமாலியா, ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் அமெரிக்கா தனது படைகளை அனுப்பிவைப்பதோடு குண்டு வீசி தாக்குதல்களையும் தொடுத்து வருகிறது. ரஷ்யாவின் எல்லைப் பகுதியின் கிழக்கே நேட்டோ தாக்குதல்களை தொடுத்து வருகிறது. தங்கள் ஆளுமையின் கீழ் புதிய நாடுகளை உறுவாக்கி வருகிறது. இவை ஏகபோக முதலாளித்துவத்தை பாதுகாக்கக்கூடிய வகையில் அமைந்துவிடுகிறது. இருப்பினும் சமூக ரீதியாக புதிய உலகின் நெறிமுறைகள் ஏகாதிபத்தியம் உயர்நிலையில் இருப்பதை நன்றாகத் தெளிவாக வெளிப் படுத்தியதோடன்றி, முதலாளித்துவம் ஒட்டுண்ணியாக அழிவு நிலையில் இறுதிக் கட்டத்தில் இருப்பதையும் வெளிப்படுத்தியது.

மூன்றாவது உலக நாடுகள் பல்வேறு சமூக அவலங்களால் பெருமளவில் பாதிக்கப்பட்டிருப்பதோடு, ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்திற்குட்பட்ட அடிமைநாடுகளாகவும் இருந்து வருகிறது. கடன் சுமை, வறுமை, பணப் பயிர்கள், பட்டினி, மலிவான உழைப்பு, மலிவான மூலப் பொருட்கள் ஆகிய வற்றால் மூன்றாவது உலக நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளது. இது பன்னாட்டு பெரும் வர்த்தக நிறுவனங்களுக்கு அதீத லாபத்தை பெற்றுத்தருவதாய் இருக் கிறது. இந்த முதலாளித்துவ ஏகபோக சக்திகள் வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாடுகளில் உள்ள தொழிலாளர்கள் மீது கடுமையான தாக்குதலை தொடுத்து



படிப்பகம்

www.padippakam.com

வருவதோடு, சுரண்டலை மேன்மேலும் தீவிரப்படுத்தி வருகிறது. இந்த நாடுகளில் இன்னமும் யுத்தம் என்பது லாபகரமான தொழிலாக இருந்து வருகிறது. முதலாளித்துவம் தனது பயன்பாட்டை கடந்துவிட்டபடியால் ஏகாதிபத்தியம் அழிவை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது.

தன்னால் உருவாக்கப்பட்ட உற்பத்தி சக்திகளை ஒன்றிணைக்க முதலாளித்துவத்தால் இனி முடியாது. இது குறித்து கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையிலேயே மார்க்சும், ஏங்கெல்சும் விளக்கமளித்துள்ளனர். மந்திரவாதியால் தன்னால் ஏவிவிடப்பட்ட பேய், பிசாசுகளை கட்டுப்படுத்த முடியாத நிலை உருவாவதைப் போன்றே தற்போதைய நிலை இருந்து வருகிறது. இதன் விளைவாக இந்த அமைப்பிற்குள்ளே பல்வேறு சிக்கல்கள் அவ்வப்போது உருவாகி வருகின்றன. இதுபோன்ற பிரச்சனைகளின் காரணியாய் பல்வேறு அம்சங்கள் இருந்து வருகிறது. சமூகத்தில் நிலவும் உபரிமதிப்பும், கரி, எஃகு, மோட்டார் கார்கள் ஆகியவற்றில் தேவையைக் காட்டிலும் கூடுதலான உற்பத்தி போன்றவையும் இவற்றில் குறிப்பிடத்தக்கவையாகும். இதன் விளைவாக பெருமளவில் தொழிற்சாலைகள் மூட வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகிறது. இயந்திரங்களை பிரித்து பயன்பாடற்ற நிலைக்கு காயலான் கடைக்கு போடப்படுகிறது. வேலையற்ற தயார் நிலையில் இருக்கக்கூடிய பட்டாளமாக தொழிலாளர்கள் தள்ளப்படுகிறார்கள்.

பெரும் வர்த்தக நிறுவனங்களின் லாப வேட்கை பற்றி மார்க்சீய அரசியல் பொருளாதாரம் யதார்த்தமான முறையில் விரிவாகவே விளக்கமளித்துள்ளது. ஆயின் அதே நேரத்தில் லாங் பிரிட்ஜ், கோவன் தொழிற்சாலைகளில் பணியாற்றிவரும் தொழில்லாளர்கள் மட்டுமின்றி ஜெர்மனியிலிருந்து பிலிப்பைன்ஸ் வரை உள்ள ஆலைத் தொழிலாளர்களும் இந்த விளைவுகளை நேரடியாக சந்திப்பதோடு, இத்தகைய அனுபவங்களை யதார்த்தமாக எதிர்கொண்டு வருகிறார்கள். 1979 முதல் ரோவர் கார் தயாரிப்பு தொழிற்சாலையில் சிக்கல் இருந்து வருகிறது. டெரித் ராபின்சனும் அவரது மற்ற தோழர்களும் இந்த தொழிற்சாலையை மீட்டெடுத்து வேலை இழப்பை சரிக்கட்டுவதற்கு மாற்றுத் திட்டத்தை முன்வைத்தனர். மார்க்சீய ஆய்வாளர்கள் இந்த திட்டம் உருப்படி யானது என்று கூறினர். பின்னர் நடைபெற்ற நிகழ்வுகள் கம்யூனிஸ்டுகளின் திட்டமே சரியென்று நிரூபித்தது.

தோழர்களே,

ஏகாதிபத்தியம் அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. மனித சமூகத்தின் அடிப்படை தேவைகளை அதனால் தீர்க்க முடியவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

உலகில் உள்ள 600 கோடிப்பேரில் நூறு கோடிப்பேர் அரை வயிற்றுக்குக்கூட ஏதுமின்றி, கிட்டத்தட்ட பட்டினி கிடக்கிறார்கள். மறுபுறம் ஆயிரக்கணக்கான வர்கள் புளித்த ஏப்பம் விட்டுக்கொண்டிருக்கிறார்கள். 80 கோடிப்பேர் எவ்வித சுகாதார வசதிகளும், காப்பீடும் இன்றி நேரம் தாக்கக்கூடிய அபாய நிலையில் இருக்கிறார்கள். 84 கோடிப்பேர் எழுத்தறிவின்றி இருக்கிறார்கள். இதில் மூன்றில் இரு பங்கினர் பெண்கள் என்பது மிக முக்கியமானது. உலக அளவில் பெருமளவிலான மக்களைக்கொண்ட சோஷலிச சீனம் மகத்தான சாதனைகளை புரிந்திருக்கிறது. சீனத்தின் புள்ளி விவரங்கள் இல்லையேல் உலக சராசரி இன்னும் மோசமாகத்தான் இருந்திருக்கும்.

ஒட்டுமொத்தமான உலகின் செல்வாதாரங்களில் ஐந்தில் நான்கு பங்கினை, உலக மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கினரே உரிமையாக கொண்டிருக் கின்றனர். மக்கள் தொகையில் பாதி அளவினர் வெறும் ஆறு விழுக்காடு சொத்திற்கு உரிமையாளராக விளங்குகின்றனர். 300 கோடிப்பேர் நாளொன் றுக்கு இரண்டு டாலருக்கும் குறைவான வருவாயையே பெற்று வருகின்றனர். செல்வமும், இயற்கைஆதார வளங்களும் உலகெங்கிலும் அசமத்துவ மாகவே விநியோகிக்கப்பட்டு வந்திருப்பதையே இந்த புள்ளி விவரங்கள் வெளிப்படுத்துகிறது. இதே நிலைமைதான் பிரிட்டனிலும் நிலவிவருகிறது.

உலகில் உள்ள ஐம்பது கோடிப்பேருக்கு பாதுகாப்பான குடிநீர் என்பதே கிடையாது. மலேரியா மீண்டும் மக்களை தாக்கும் அபாய நிலை உருவாகி வருகிறது. பல்வேறு நாடுகளில் கொசுப் பண்ணைகள் உருவாகி செழிப்புற்று வருவதே இதற்காக விடப்பட்ட எச்சரிக்கையாகும். ஆண்டுதோறும் ஐந்து கோடிப்பேர் இந்த நோயால் பாதிக்கப்படுகிறார்கள். இதனால் கிட்டத்தட்ட இருபது லட்சம் பேர் மரணமடைகிறார்கள். ஆனால் மருந்து உற்பத்தி நிறுவ னங்களோ, இதற்கான மருந்து உற்பத்தியை நிறுத்திவிட்டது. நமக்கு உடனடி யாக அவசரமாக இந்த மருந்துகள் தேவைப்படுகிறது. ஆயின் மலேரியா விற்கான புதிய மருந்துகள் தேவை என்பது கிட்டத்தட்ட முப்பது கோடியி லிருந்து அறுபது கோடி பவுண்டு வரை இருக்கும். இந்த மருந்துகளினால் இதை உற்பத்தி செய்யக்கூடிய நிறுவனங்களுக்கு அதீத லாபம் கிடைக்காது. ஏனெனில் இந்த நோயால் பாதிக்கப்படக்கூடியவர்கள் மிகவும் மோசமான ஏழை நாடுகளின் மக்களே என்று உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆலோசகர் டாக்டர் ராபர்ட் ரிடில் கூறுவது சிந்திக்கத்தக்கதாகும்.

இன்றைய தினம் அறிவியலிலும் நவீன தொழில்நுட்பத்திலும் காணப்படும் மேம்பாடுகள் யாவுமே ஏகபோக மூலதனத்தின் நலன்களைப் பேணிப் பாது காத்திடவே பயன்பட்டு வருகிறது. இந்த நவீன அறிவியல் மனித சமூகத்தை



படிப்பகம்

www.padippakam.com

நோயிலிருந்து விடுவிக்கவோ, பஞ்சம், பட்டினியிலிருந்து விடுவிக்கவோ, யுத்தம் அல்லது வேறு இயற்கை உத்பாதங்களிலிருந்து மீட்கவோ பயன்பட வில்லை என்பது வேதனைக்குரியதாகும்.

இன்றைய தினம் இராக் மீது பிரிட்டன் குண்டு வீசும் பொருட்டு வாரந் தோறும் லட்சக்கணக்கான பவுண்டுகளை செலவு செய்துகொண்டிருக்கிறது. இதனால் காட்டுமிராண்டி காலத்தை நோக்கி இராக் தள்ளப்பட்டு வருகிறது. அதே நேரத்தில் விவசாயம் செழுமையாக இருந்து வருவதோடு நீர்ப்பாசன வசதியும் நிறைந்த ஆப்பிரிக்காவின் முகப்பை குண்டு வீசி தாக்கிட நாம் முனைப்பு காட்டலாகாது. செர்பியாவில் பல்வேறு தூதரகங்கள், ஒலிபரப்பு நிலையங்கள், ரயில்வே மேம்பாலங்கள், பயணிகள் டிரெய்ன்கள், டிராக்டர்கள் ஆகியவற்றை சர்வநாசமாக்கிட நேட்டோ கிட்டத்தட்ட மூன்று கோடி பவுண்டு செலவு செய்துள்ளது. ஆனால் அழிந்த நாட்டை புனர் நிர்மாணம் செய்ய ஒருகோடி பவுண்டு தருவதாக உறுதியளித்துள்ளது.

தற்பொழுது பிரிட்டனில் அமெரிக்கா ஆயுதத் தளங்களை உருவாக்கி நட்சத்திர யுத்தங்களை நடத்திட முஸ்தீபு செய்து வருகிறது. தொழிற் கட்சி அரசு இந்த முயற்சிக்கு முழுமையாக ஆதரவளித்து வருகிறது. அமெரிக்கா வின் ஓட்டு வாலாக இருந்துவரும் டோனி பிளேயர் தன்னை பெரும் தளபதி யாக கருதிக்கொண்டு உத்வேகத்துடன் இருந்து வருகிறார். ஏவுகணை யுத்தம் பற்றிய தயாரிப்பில் ஈடுபட்டு வரும் லூக் ஸ்கைவாக்கருக்கு முழுமையான ஆதரவு அளித்து வருகிறார். கெடுபிடி யுத்தம் நடைபெற்றுவரும் இந்த தருணத்தில் அமைதி இயக்கமொன்றை நடத்த வேண்டியது அவசியமாக இருந்து வருகிறது. ஏகாதிபத்தியம் தனது ஆதிக்கத்தை வீறுகொண்டு விரிவு படுத்தி வரும் இந்நாளில் முன்னெப்போதைக்காட்டிலும் இதற்கு அவசர தேவையும் இருக்கிறது. ஏகாதிபத்திய சக்திகளுக்கும் அங்கே செயல்பட்டு வரும் பன்னாட்டு வர்த்தக நிறுவனங்களுக்கும் இடையிலான பொருளாதார போட்டி அதிகரித்து வருகின்ற நிலையில் அமைதி இயக்கத்திற்கு முக்கியத் துவம் அளிக்க வேண்டியிருக்கிறது.

நேட்டோ அமைப்பிற்குள்ளாகவே ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகள் சுயேட்சையான ராணுவ அமைப்பொன்றை உருவாக்கி வருகிறது. மாபெரும் சாகசக்காரனாக டோனி பிளேயர் ஒரே நேரத்தில் இரண்டு குதிரைகள் மீது சவாரி செய்யும் அசகாய சூரனாக திகழ்கிறார். அமெரிக்காவும், ஐரோப்பாவும் முதலாளித்துவ ராணுவ அமைப்பாக உருமாற்றம் செய்யும் வேலைகளை நமது கட்சி தொடர்ச்சியாக எதிர்த்து வருகிறது. சுரண்டல் மிக்க மாபெரும் வர்த்தக மையமாக பிரிட்டன் உருப்பெறுவதற்கு பதிலாக ஜனநாயக பிரிட்



படிப்பகம்

www.padippakam.com

டனை உருவாக்கும் பொருட்டு நாம் போராடி வருகிறோம். எனவேதான் இதன் பொருட்டு நமது சக்தியை மென்மேலும் பெருக்கிட பல்வேறு முயற்சிகளை செய்து வருகிறோம்.

ஜனநாயகபூர்வமான வெகுஜன அமைப்புகளை, ஏகபோக எதிர்ப்பியக் கங்களை உருவாக்கி வருகிறோம். உழைப்பாளி வர்க்கத்தை அணி திரட்டு வதன் மூலம் ஏக ஐரோப்பிய நாணய முறையை பிரிட்டிஷ் அரசு ஏற்பதற்கு எதிராக நமது இயக்கங்கள் போராடி வருகிறது. தேர்ந்தெடுக்கப்படாத பதில் சொல்லும் பொறுப்பற்ற வங்கி துறையாளர்களும், அவர்களின் ஊதியப்பட்டி யலில் இடம் பெற்றுள்ள கல்வியாளர்களும், நம்மை அடக்கி ஆண்டு வருவதை நேரிடையாக கண்டு வருகிறோம். ஏனெனில் பிரிட்டனை ஆட்சி செய்து வரும் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிற்கட்சி அரசு, வட்டி நிர்ணயம் செய்யும் அதிகாரத்தை இங்கிலாந்து வங்கியின் நிதிக் கொள்கை குழுவிடம் அளித்துவிட்டது.

பொருள் உற்பத்தியில் இருந்து வந்த லட்சக்கணக்கான வேலை வாய்ப்புகள், லண்டன் நகரையும் அங்கிருக்கக்கூடிய நிதி நிறுவனங்களின் நலன்களையும் பாதுகாத்திடும் பொருட்டு பலியிடப்பட்டு விட்டது. வட்டி விகிதத்தையும் பவுண்ட் மதிப்பையும் உயர்த்துவதன்மூலம் பண வீக்கத்தை முடிவுக்குக்கொண்டுவர முடியுமென்றும், உடனடியாக மாற்றத்தக்க அந்நியச் செலாவணியை லண்டன் ஈர்க்க முடியுமென்றும் கூறி வருகிறார்கள். ஆனால் உண்மையில் நிலக்கரி, எஃகு, ஜவுளி போன்ற கேந்திரமான பிரிட்டனின் தொழில்துறையை அழித்திடும் போக்கு உருவாகி வருகிறது. வளர்முக நாடுகள் என்றுமே தொழிலாளர் வேலை வாய்ப்பு பற்றிய புதிய உலகப் பிரி வினையை ஏற்கவில்லை. பல்வேறு நாடுகளிலிருந்து வரக்கூடிய தொழி லாளர்கள் பண்ணைகளிலும், சுரங்கங்களிலும், உற்பத்தித் துறையிலும் உழைத் திடுவார்கள். நாமோ அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை பயன்படுத்து வதோடு, தாளில் மட்டுமே உள்ள லாபம் பற்றிய ஆய்வுகளை மேற்கொள் வதோடு, டாட் வாணிகம் எனப்படும் எலெக்ட்ரானிக் வர்த்தகத்தில் முழுமை யாக ஈடுபட முடியுமாம். ஒரு பக்கத்தில் உலகளாவிய ஏகாதிபத்தியத்திற்கும், பன்னாட்டு வர்த்தக நிறுவனங்களுக்கும் இடையிலான முரண்பாடு நீடித்து வருகிறது. இந்நிலையில் அந்தந்த நாடுகளில் பின்பற்றப்பட்டு வரும் பொருளாதார அம்சங்களினால் பிரச்சனைகளுக்கு தற்காலிகமான தீர்வு காணப்படுமேயொழிய நிரந்தரமான தீர்வை கண்டிட முடியாது.

சோஷலிஸ்ட் புரட்சி மட்டுமே இதற்கான இறுதி தீர்வாக இருக்க முடியும். இருப்பினும் இடைக்காலத்தில் ஆட்சி அதிகாரத்தை பயன்படுத்தி, பொதுத்



படிப்பகம்

www.padippakam.com

துறையை உருவாக்குவதோடு அரசின் திட்டமிடுதலையும் விரிவாக கொண்டு செல்ல முடியும். ரயில் டிராக், ஆர்ஜேபி சுரங்கம், போர்ட் கார், பிரிட்டிஷ் ஏரோஸ்பேஸ் ஆகிய தனியார் நிறுவனங்கள் அரசின் மானியத்தை பெறும் பொருட்டு போட்டிபோட்டுக்கொண்டு வரிசையில் நிற்கின்றன. தனியார் மயம் என்பதும், கட்டற்ற ஏகபோக சந்தை என்பதும் புதிய முதலீடுகளை பெறுவதற்கு ஏற்றவிதத்தில் இல்லாததினால், இந்த தனியார் நிறுவனங்கள் அரசிடம் கையேந்தி நிற்கின்றன. "கட்டாயப் பிச்சை" என்றே நாம் இதை கூறலாம். எனவே தொழில்கட்சி அரசு வேறு விதமான நடைமுறையை கையாள வேண்டும். உங்களுக்கு அரசின் மக்களின் பணம் வேண்டுமெனில் உங்கள் நிறுவனத்தை பொதுத்துறைக்கு மாற்றுங்கள் என்று தனியார் நிறுவனங்களிடம் கூற வேண்டும்.

கம்யூனிஸ்டுகளும், சோஷலிஸ்டுகளும் இன்னும் விரிவான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். ரயில்வே, நிலக்கரி, எஃகு, மின்சாரம், குடிநீர், எரிவாயு ஆகிய அனைத்துத்துறைகளையும் ஜனநாயக ரீதியாக பொதுத் துறைக்கு மாற்றிட வேண்டும். இவை தவிர அரசே வங்கிகளையும், மருந்து உற்பத்தி நிறுவனங்களையும், ஆயுத உற்பத்தியையும் ஏற்று நடத்த வேண்டும். வெளிநாடுகளில் முதலீடு செய்வதற்கு பதிலாக பிரிட்டனில் உள்ள ஆதார நிறுவனங்களில் முதலீடு செய்திட நிர்ப்பந்திக்க வேண்டும். இறக்குமதிக்கு கட்டுப்பாடுகளை உருவாக்கி, உள்நாட்டு தொழில்துறையை பாதுகாக்க வேண்டும். மூன்றாவது உலக நாடுகளுக்கு ஏற்ப விரிவான வர்த்தக உதவிக் கொள்கையை உருவாக்குவதன் மூலம் நமது பொருட்களின் ஏற்றுமதிக்கு ஏற்ப, அந்நாடுகளின் சந்தைகளை அவர்களுக்கு பாதகமில்லாத வகையில் விரிவுபடுத்திட முடியும். இவைதான் மாற்றுப்பொருளாதார திட்டத்தின் அடிப் படையாக இருக்க முடியும். இதன் மூலமே நவீன மக்கள் நன்னல அரசினை உருவாக்குவதோடு, மக்களின் கவுரவத்தை பாதுகாப்பதாக இருக்கும். மேலும் ஓய்வு பெறும் தொழிலாளர்களுக்கு ஓரளவு நிவாரணத்தையும் அளிப்பதாக இருக்கும்.

மேலும் பெரும் நிறுவனங்கள் மீதும் செல்வந்தர்கள் மீதும் வரி விதிப்பை அதிகரிக்க வேண்டும். வருகின்ற ஆண்டுகளில் தனியார் நிறுவனங்களின் நிர்வாகிகளுக்கான வாராந்திர ஊதிய உயர்வுக்கு உச்சவரம்பு 75 பென்ஸ் என்று ஏன் அரசு நிர்ணயிக்கக் கூடாது. இது அவர்களுக்கு போதுமானதாக இல்லையென்று கருதினால் அவர்களது அடிமட்ட உழைப்பாளிகளுக்கு அவர்கள் பத்து பென்னியை மட்டும் வழங்குவது எப்படி நியாயமாக இருக்க முடியும்?



படிப்பகம்

www.padippakam.com

**தோழர்களே,**

1997 பொதுத் தேர்தலில் டோரி அரசை வீழ்த்திட நாம் பிரச்சாரத்தை மேற் கொண்டது சரியானதுதான். அதன் விளைவாகத்தான் தொழிற்கட்சி ஆட்சிக்கு வர முடிந்தது. தொழிற்கட்சியின் வெற்றி லட்சக்கணக்கான மக்களிடத்தில் உணர்வுகளை எதிர்பார்ப்புகளை உருவாக்கியது. ஆயின் இன்றைய தினம் இந்த அரசைக் குறித்த விமர்சனங்கள் இடதுசாரிகளிடமிருந்து எழுகிறதே யொழிய வலதுசாரி இயக்கங்கள் இதுபற்றி வாய் திறப்பதில்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

பாராளுமன்ற ஜனநாயக வரலாற்றில் என்றுமில்லாத வகையில் தொழிற் கட்சி அமோகமாக பெரும்பான்மை பெற்று ஆட்சிக்கு வந்தது. லடசக் கணக்கான பவுண்டு நிதியை திட்டமிட்டு செலவு செய்யும் பொறுப்பைக் கொண்டிருக்கிறது. சவப்பெட்டிக்கு அனுப்பப்பட்ட டோரிகளின், அதே மாதிரியான ஆணவப் போக்கையும், அலட்சியத்தையும் இந்த அரசும் கொண்டிருக்கிறது. வலதுசாரி கொள்கைகளை பின்பற்றுவதன் மூலம் தங்களை ஆதரித்த லட்சக்கணக்கான மக்களிடமிருந்து இந்த தொழிற்கட்சி அரசு அந்நியப்பட்டு வருகிறது.

பொது சுகாதாரம், அடிப்படைக் கல்வி, ஓய்வூதியம் போன்றவற்றுக்கு அதிக அளவில் அரசு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்பதையே மக்கள் எதிர்பார்க்கிறார்கள். பெரும்பாலான மக்கள் தனியார் மயத்திற்கு எதிராகவே இருந்து வருகிறார்கள். ரயில்வேயை பொதுத்துறைக்கு மாற்றுவதையும், மூன் றாவது உலக நாடுகளுக்கு அளிக்கப்பட்ட கடனை தள்ளுபடி செய்வதையும் அவர்கள் ஏற்கிறார்கள். ஸ்காட்லாண்டிலும், வேல்ஸிலும் உள்ள மக்கள் தங்கள் அரசுக்கு கூடுதலான அதிகாரத்தோடு, போதுமான நிதியாதாரங்களும் ஒதுக்கப்பட வேண்டும் என்று கருதுகிறார்கள்.

இன்றைய தினம் ஒரு சாதாரண பிரிட்டிஷ் குடிமகன் ஏக ஐரோப்பிய நாணய முறைக்கு செல்வது குறித்து எதிர்த்து வருகின்றபோதிலும், புதிய தொழிற்கட்சி தலைவர்கள் மதில் மேல் பூனையாக இருந்து வருகிறார்கள். பெரும் வர்த்தக நிறுவனங்களின் அதிபர்களுடனும், ஈரோ ஆதரவாளர்களு டனும் சேர்ந்து நிழற்படம் எடுத்துக்கொள்வதில் குறியாய் இருக்கின்றனர். ஹாக்கும், போர்டில்லாவும் பிரிட்டனின் ஜனநாயக தன்னாட்சியின் பெரும் சாதனையாளர்களாகவும் தங்களை பிரகடனப்படுத்திக்கொண்டு மேலும் மேலும் படங்களை எடுத்துக்கொள்ளலாம்.

பிரிட்டனிலும் ஜர்லாந்திலும் இருக்கக்கூடிய பெரும்பாலான மக்கள்



படிப்பகம்

www.padippakam.com

அமைதியை நல்லிணக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு நிரந்தரமான தீர்வையே விரும்புகிறார்கள். இதுவே ராணுவத்தை விலக்கிக்கொள்ள வழிவகுக்கும் என்றும் அவர்கள் கருதுகிறார்கள். ஆயின் தொழிற்கட்சி அரசு தீவிர வலது சாரி முறைகளை முந்தைய டோரி அரசைப்போலவே பின்பற்றி வருகிறது. இதனால் ஏற்கெனவே அமைதி மற்றும் நல்லிணக்கத்தை உருவாக்கும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் அமல்படுத்தப்படாமல் இருந்து வருகிறது. தொழிற்கட்சி முன்னர் எதிர்க்கட்சியாக இருந்தபோது புகலிடம் தருவது பற்றிய நெறி முறைகளும், குடியேற்றக் கொள்கைகளும் மனிதத் தன்மையற்றது, இனவெறியை தூண்டுகிறது என்று சொல்லி வந்தார்கள். சன் பத்திரிகையும், டெய்லி மெயிலும் விஷத்தைக் கக்கும் இத்தகைய வேலைகளை செய்துகொண்டிருக்கும்போது, அதில் ஜேக் ஸ்ட்ராவும் பங்கேற்றுள்ளார். டோரிகளுக்கும் இவர்களுக்கும் வித்தியாசம் எதுவும் இல்லை என்கிற நிலை உருவாகியிருக்கிறது. அதே நேரத்தில் பில் மாரிசும், ஜான் மோன்க்ஸும், அரசின் மொழிக்கொள்கையை கடுமையாக எதிர்த்து வருகின்றனர். மொழிவழிச் சிறுபான்மையினர் கடுமையாக பாதிக்கப்படும் இந்த நடவடிக்கைகளை எதிர்த்திடும் இவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்களே. ஆயின் மற்றைய தொழிற்சங்க தலைவர்கள் எங்கே போனார்கள் என்பது தெரியவில்லை. ஸ்டெப் போர்ட் பிராந்தியத்தின் பிரதிநிதிகளான தொழிற்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் காணாமல் போய்விட்டனர்.

நடைபெறவிருக்கிற உள்ளூராட்சி தேர்தல்களில் தொழிலாளர் இயக்கங்கள் தங்கள் சக்தியை வெளிப்படுத்தும் விதத்தில் பங்கேற்க வேண்டும். தொழிற்சங்க தலைவர்கள் தொழிற்கட்சி அரசுக்கு சரியான விதத்தில் பிரச்சனைகளை உணர்த்தும் முகமாய் இந்த தேர்தல்களில் கடுமையான போட்டியை உண்டாக்க வேண்டும். மாற்று பொருளாதார திட்டங்களுக்காகவும், புதிய வழிமுறைகளுக்காகவும் எங்கும் பெரும் உத்வேகம் இருந்து வருவதை பிரச்சாரத்தின்போது அறிய முடிகிறது. டோரி அரசு கொண்டு வந்த தொழிற்சங்க விரோத சட்டங்களுக்கு எதிராகவும் இந்த இயக்கங்கள் வலுப்பெற்று வருகிறது. தொழிற் கட்சிக்கும் ஜனநாயகத்திற்கும் சரி செய்ய முடியாத அளவில் பாதிப்புகளை விளைவித்திடும் பிளேர் மற்றும் மில்பேங்க் கோஷ்டியை மூட்டை முடிச்சுடன் வெளியேற்றியாக வேண்டும். நம்மைப் பொறுத்தமட்டில் கம்யூனிஸ்ட் கட்சி முற்போக்கான ஏகபோகங்களுக்கு எதிரான கொள்கையை பின்பற்றி வருவதை உறுதிபட கூறமுடியும்.

லண்டன் நகர மக்களிடம் இது குறித்து விரிவான பிரச்சாரத்தை கம்யூனிஸ்ட் கட்சி செய்து வருகிறது. மூலதன பெருச்சாளிகளின் தலைநகராக



படிப்பகம்

www.padippakam.com

இல்லாமல், உழைப்பாளி மக்களின் உண்மையான தலையாய நகராக விளங்கும் லண்டன் நகரில் மே 4 அன்று நடைபெறவிருக்கும் தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சிக்கு வாக்களிக்கும்படி மக்களிடம் கோரிக்கை விடுக்கிறோம். (லண்டன் நகர மேயராக கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவாளரே பின்னர் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது)

இடதுசாரி இயக்கத்தின் தினசரியாக தொழிற்சங்க இயக்கத்தின் தினசரியாக "தி மார்னிங் ஸ்டார்" வெளிவந்து கொண்டிருக்கிறது. தொழிலாளி வர்க்கத்தின் போதகராக மட்டுமின்றி, கிளர்ச்சியாளராகவும், அணியை உருவாக்குபவராகவும் இந்த நாளிதழ் முக்கிய பங்காற்றி வருகிறது. இந்த பத்திரிகையில் பொறுப்பேற்று செயல்பட்டு வரும் நமது தோழர்கள் தாங்கள் போதிக்கும் கொள்கைகளுக்கு ஏற்ப, உறுதியான போராட்டத்தை நடத்தி வரமுடியும் என்பதை நிரூபித்து வருகிறார்கள். இந்தப் பத்திரிகையை மேம்படுத்தும் பொருட்டு நமது ஆதரவாளர்கள் மகத்தான முறையில் பங்காற்றி வருகின்றனர். பல்வேறு தியாகங்களையும், பத்திரிகையின்பொருட்டு இவர்கள் செய்து வருகின்றனர். கடந்த 12 மாதங்களில் நமது பத்திரிகை விற்பனை ஐநூறுக்கும் மேலாக உயர்த்த முடிந்துள்ளது. கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கும், இடதுசாரி இயக்கத்துக்கும் இந்தப் பத்திரிகை பேராயுதமாக விளங்கி வருகிறது. அடுத்த கட்சி காங்கிரசுக்குள் நமது பத்திரிகையின் விற்பனையை இரண்டு மடங்காகவோ மூன்று மடங்காகவோ உயர்த்துவது என்பது நமது கையில்தான் இருக்கிறது.

கம்யூனிஸ்ட் கட்சி தனது முழுமையான பங்காற்றலை வேறு களங்களிலும் கொண்டிருக்கிறது. கடந்த எண்பது ஆண்டுகளாக மார்க்சிய - லெனினிய பதாகையை உயர்த்திப் பிடித்து வருவதோடு அவை குறித்து தீவிரமான ஆய்வுகளையும் செய்து வருகிறோம். தொழிலாளி வர்க்கத்தின் மத்தியில் தீவிரமான அரசியலையும், போராட்ட உணர்வையும் உருவாக்குவதில் வெற்றி பெற்றுள்ளோம். கடந்த எண்பது ஆண்டுகளாக இடைவிடாமல் தொடர்ச்சியாக நாம் நமது போராட்ட பாதையில் பின்வாங்காமல் சென்றுகொண்டிருக்கிறோம். இதனால் பிரிட்டிஷ் தொழிலாளர்கள் இயக்கத்தின் கட்சியாக மார்க்சிய பாதையை பின்பற்றும் ஸ்தாபனமாக திகழ்கிறோம். ஆயினும் தொழிலாளர் இயக்கம் மேலும் வலுப்பெறுவதோடு இடதுசாரிகள் தீர்மானிக்கக்கூடிய நிலையை பெறுவதற்கு கம்யூனிஸ்டுகள் மேன்மேலும் வலுப்பெறவேண்டும்.

தொழிற்கட்சியின் தவறான செயல்பாடுகளுக்கு எதிராக சவால் விடுத்து நிற்கக்கூடியவர்களாக, ஏகபோக முதலாளித்துவத்திற்கு எதிராக பரந்துபட்ட



படிப்பகம்

www.padippakam.com

விரிவானதொரு அணியை உருவாக்குபவர்களாக, கம்யூனிஸ்ட்டுகள் திகழ வேண்டும். எனவேதான் நாம் கட்சியின் கிளர்ச்சிப் பிரச்சாரத்திற்கு முக்கியத் துவம் அளிக்கும் அதே நேரத்தில் மற்றொரு பக்கத்தில் புதிய உறுப்பி னர்களை நமது இயக்கத்தில் சேர்ப்பதற்கும் முக்கியத்துவம் அளித்திட வேண்டும். தொழிலாளர் இயக்கங்களில் மட்டுமின்றி முற்போக்கு இயக்கங் களிலும் நாம் முழு மூச்சாய் செயல்படுவதோடு நின்றுவிடாமல் கட்சி அணியை மேன்மேலும் அதிகரித்திட இத்தகைய பெருகுஜன அமைப்புகளை எப்படி பயன்படுத்திக் கொள்வது என்ற பரிசீலனையும் நமது தோழர்கள் மேற்கொள்ள வேண்டும்.

**தோழர்களே**

சமீப காலங்களில் நமக்கு பல்வேறு பின்னடைவுகள் நேரிட்டபோதிலும், கம்யூனிஸ்ட் கட்சி மீண்டும் உத்வேகமாய் பிரிட்டனில் துடிப்புடன் இருந்து வருகிறது. உலகெங்கிலும் உள்ள சர்வதேச இயக்கத்தின் ஒரு பகுதியாக நாம் 21வது நூற்றாண்டில் தடம் பதித்து நுழைகின்றோம். லட்சக்கணக்கான தொழிலாளர்கள், கூட்டுறவுகளில் செயல்படுவோர், கம்யூனிஸ்ட்டுகள், சோஷ லிஸ்டுகள், அமைதி இயக்கத்தவர், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், இதர முற் போக்கு இயக்கங்கள் ஆகியோருடன் தோளோடு தோள் நின்று புதியதோர் உலகிற்காக அணிதிரண்டு நிற்கிறோம். ஏகாதிபத்திய யுத்தங்களையும், தேசிய விடுதலைப் போராட்டங்களையும் நாம் கண்டிக்கிறோம். இது தவிர முதல் சோஷலிச புரட்சியையும் கண்டிப்போம். இன்றைய தினம் இருந்துவரும் நிலை சமூகப் புரட்சிக்கு பொருத்தமானதாகவே இருக்கிறது.

முதலாளித்துவ அமைப்பின் தீய விளைவுகளாக இருக்கும் வறுமை, பட்டினி, நிச்சயமற்ற நிலை, சூழல் சீர்கேடு ஆகிய அனைத்திற்கும் முடிவுகட்டும் விதத்தில் இந்த சமூகப் புரட்சி நடைபெற்றாக வேண்டும்.

**தொழிலாளர் இயக்கங்களின் ஒற்றுமை ஓங்கட்டும்!**
**உலகத் தொழிலாளர் ஒற்றுமை ஓங்கட்டும்!**
**பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சி ஓங்குக!**
**சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கம் வெல்லட்டும்!**



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

MARXIST

படிப்பகம்